அமைதி வழியும் மதுர மொழியும்

(இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு பயணப் பதிவுகளை ஆவணப்படுத்தல்

இரா. மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வழியும் மதுர மொழியும்

(இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு
பயணப் பதிவுகளை ஆவணப்படுத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வழியும் மதுர மொழியும்

(இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு
பயணப் பதிவுகளை ஆவணப்படுத்தல்)

ஆர். மகேஸ்வரன்
பதில் நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வழியும் மதுர மொழியும்
எழுதியது ஆர். மகேஸ்வரன்

© 2015

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
இல. 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இல. 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Amaithi Valiyum Mathura Moliyum
by R. Maheshwaran

© 2015

Published by Kumaran Book House
No. 39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
No. 39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: 675

ISBN 978-955-659-487-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர்ப்பணம்

ஐயாவுக்கும் அம்மாவுக்கும்
(இராசையா - அன்னபூரணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

இலங்கையில் பயணக் கட்டுரைகள், பயண நூல்கள் எழுவதிலும், அவை பற்றிய ஆராய்ச்சியிலும் ஒருங்கே ஈடுபட்டுவரும் ஒருவராக இரா. மகேஸ்வரன் விளங்குகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதில் நூலகராகப் பணியாற்றும் அவர், இத்துறையில் ஆற்றல் வாய்ந்த ஒருவராகத் திகழ்கிறார். 'அமைதியும் வழியும் மதுர மொழியும்' என்னும் இந்நூலும் அவரது பிறிதொரு பயண நூலாக விளங்குகிறது.

மலேசியாவின் கோலாலம்பூரிலும், தமிழ்நாட்டின் காயல்பட்டினத்திலும் நடைபெற்ற இரு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் பற்றியதாக இப் பயணக்கட்டுரை நூல் அமைந்துள்ளது. இந்நூலுக்கு 'அமைதி வழியும் மதுர மொழியும்' என்று பெயர் இட்டமைக்கான காரணத்தை நூலாசிரியர் விளக்கியுள்ளார். 'இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி என்பார்கள் இஸ்லாமியத் தமிழர்கள். எனவேதான் தான் 'அமைதி வழியும் மதுர மொழியும்' என இதற்குப் பெயரிட்டுள்ளேன்'' என்பது அவரது விளக்கம். நூலின் பெயர் அழகாக உள்ளது.

மலேசியாவிலும், காயல்பட்டினத்திலும் நடைபெற்ற இரு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளிலும் மகேஸ்வரனுடனும், மற்றவர்களுடனும் நானும் கலந்துகொண்டிருக்கிறேன். இரண்டும் சிறப்பாக நடைபெற்ற மாநாடுகள். மாநாடுகள் இரண்டிலும் போற்றத்தக்க அம்சங்கள் பல இருந்தன. ஆனால், மலேசியா மாநாட்டை விடக் காயல்பட்டின மாநாட்டில் இலங்கையர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. இப் பயண நூலில் மகேஸ்வரன் இரு மாநாடுகளையும் ஒப்பிட்டுச் செல்வது சிறப்பாக இருக்கிறது. இரு மாநாடுகள் தொடர்பான நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டியிருப்பது வரவேற்கத்தக்கது.

இப் பயண நூலில் நூலாசிரியர் பயண அனுபவங்களைச் சுவாரசிய மாகத் தந்திருப்பதோடு, பல பயனுள்ள விடயங்களையும் கூறிச் செல்கிறார். அத்தோடு, மாநாட்டுக் கட்டுரைகள் சிலவற்றை எடுத்துக்காட்டி, அவற்றினூடாகப் பல விடயங்களை அறியத்தந்திருப்பது வாசகர்களுக்குப் பெரும் பயன் அளிக்க வல்லது. மலேசியா, காயல்பட்டினம் பற்றியெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிச் செல்லும்போது, அவற்றோடு இலங்கைத் தொடர்பான விடயங் களையும் நோக்கியிருப்பது வரவேற்புக்கு உரியது.

மகேஸ்வரனின் பயணக் கட்டுரைகளும், பயண நூல்களும் அலுப்புச் சலிப்பில்லாமல் வாசிப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பயணக் கட்டுரைகள், பயண நூல்கள் சுவாரசியமும், பயனும் உள்ளனவாக அமைவது விரும்பத்தக்கது. அவ்வகையில் மகேஸ்வரனின் ஆக்கங்களும் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இப் பயண நூல் முதலில் 'வண்ண வானவில்' சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. அச்சஞ்சிகையில் தொடராக வெளிவந்தபோதே வாசகரைப் பெரிதும் கவர்ந்திருந்தது. அக் கட்டுரைத் தொடர் இப்போது நூல் வடிவம் பெற்றுள்ளது. இதனை 'வண்ண வானவில்' சஞ்சிகையில் தொடராக வெளி யிட்டு வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பை ஏற்படுத்திய அதன் ஆசிரியர் அருள் சத்தியநாதனும் எமது நன்றிக்கும், பாராட்டுக்கும் உரியவர். இரா. மகேஸ்வரனிடமிருந்து இது போன்ற இன்னும் பல நூல்களை எதிர்ப் பார்க்கிறேன். அவருக்குச் சகல வெற்றிகளும் கிடைக்க வாழ்த்துகிறேன்.

52, சம்மர்பீல்ட்
பலகொல்ல
கெங்கல்ல
இலங்கை
15.04.2016

பேராசிரியர் துரை. மனோகரன்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் இஸ்லாமியர்கள் ஆற்றியிருக்கும் சேவை அளப்பரியது என்பதை முதன் முதலாக வெளிப்படுத்தியவர் அல்லாமா உவைஸ் அவர்களாவார். இஸ்லாமிய இலக்கிய அறிஞர்கள் இயற்றிய தமிழ் இலக்கிய நூல்களைக் கண்டறிந்து பட்டியலிட்டார். இரண்டாயிரம் நூல்கள் வரை இவ்வாறு அடையாளம் காணப்பட்டன. இஸ்லாமிய தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கிய தடாகத்தில் தாமரையாக அலங்கரிக்க ஆரம்பித்தது.

இஸ்லாமிய தமிழ் இலக்கியம் என்றொரு பிரிவு ஆரம்பமான பின்னர் அதை ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணம் வலுப் பெற்றதன் பலனாக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு மாநாடுகள் தென்னிந்திய மண்ணிலும், இலங்கை, மலேசிய நாடுகளிலும் நடை பெறத் தொடங்கின. இந்த இலக்கிய மாநாடுகளில் கட்சி அரசியலும், ஏற்பாட்டாளர்களின் பிரத்தியேக அரசியலும் விரவிக் கிடந்த போதிலும், ஆக்கபூர்வமான விஷயங்களும் நடந்தேறச் செய்தன. மிகவும் பயன்தரத்தக்க ஆய்வுக் கட்டுரைகள் இந்த ஆய்வு மாநாடுகளுக்காக எழுதப்பட்டன. மாநாட்டு மலர்களில் சிறந்த பல கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இஸ்லாமிய சமூகம் விருந்தோம்பலுக்கு பெயர்பெற்ற சமூகம் என்ற வகையில், அந்தந்த நாடுகளில் அல்லது மாநாடு நடைபெறும் ஊர்கள், பிரதேசங்களுக்குரிய தனித்துவமான விருந்தோம்பலையும், நளபாகங்களையும் பேராளர்களாகச் சென்றவர்களுக்கு ருசி பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியதோடு, வித்தியாசமான உணவுகளைப் போலவே பல்வகையான இலக்கிய நெஞ்சங்களோடு உறவாடும் சந்தர்ப்பமும் கிட்டியது. இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் கலந்து கொண்டதோடு அம்மாநாடுகள் குறித்து தினகரன் வாரமஞ்சரி, வண்ண வானவில் சஞ்சிகைகளில் தொடர் கட்டுரைகள் எழுதியவன் என்ற வகையில் நேரிடையாக இந்த அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். இத்தகைய மாநாடுகளில் இஸ்லாமியரல்லாதவன் என்ற வகையில் பல புது அனுபவங்களை, மெய் சிலிர்க்கச் செய்யும் உணர்வுகளையும் சந்தர்ப்பங்களையும் நான் பெற்றிருக்கிறேன். மிகச் சிறப்பாகச் சொல்வதானால், அந்த விருந்தோம்பல் பண்பு, இஸ்லாமிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரல்லாதவன் என்பதற்காகவே எம்மீது எடுத்துக் கொள்ளும் சிறப்பான அக்கறை மற்றும் கௌரவிக்கும் குணம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்த இஸ்லாமிய மாநாடுகளுக்கு பிறமதத்தவர்கள் பேராளர்களாக மட்டுமல்லாது அழைக்கப்பட்ட விருந்தினர்களாகவும், முக்கியஸ்தர் களாகவும் கூட வருகை தருவதை நான் கண்டிருக்கிறேன்.

எழுத்தாளரும் ஆய்வாளருமான அ. மார்க்ஸ், இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் கலந்து கொள்வது மட்டுமல்லாது இஸ்லாம் தொடர்பான நூல்கள், கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். இதனால், மார்க்ஸ் என்பது புனை பெயர் என்றும் அவர் ஒரு இஸ்லாமியர் என்றும் ஒரு செய்தி இலக்கிய உலகில் பரவியிருந்தது. ஆனால் அவர் இஸ்லாமியர் அல்ல. பகுத்தறிவாளர் என்று வேண்டுமானால் சொல்லலாம். பிற்படுத்தப்படுவது யாராக இருந்தாலும் அவர்களுக்காகக் குரல் கொடுப்பது என் பண்பு என்ற வகையிலேயே இஸ்லாமியர்களைப் பற்றி நான் எழுதி வருகிறேன், இஸ்லாமிய மாநாடுகளில் கலந்து கொள்கிறேன் என்று அவரைச் சந்தித்தபோது என்னிடம் அவர் கூறினார். மார்க்ஸைப் போல பலரை தமிழகத்தில் நான் சந்தித்திருக்கிறேன்.

இதே அனுபவங்களை நூலாசிரியர் ஆர். மகேஸ்வரனும் பெற்றிருப் பார் என்ற வகையிலேயே இவற்றைக் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த நூலில் அவர் அடுத்தடுத்து நடைபெற்ற இரண்டு இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளுக்கு நேரிடையாகச் சென்று வந்த தனது இலக்கிய அனுபவங் களை இந்நூல் வழியாக வாசகர்களுடன் பகிர்ந்துள்ளார். இது தொடர் கட்டுரையாக வண்ண வானவில் சஞ்சிகையில் வெளியான போது இஸ்லாமியர் அல்லாதோரினாலும் விரும்பிப் படிக்கப்பட்டது என்பது இக்கட்டுரைத் தொடருக்குக் கிடைத்த மேலதிகத் தகைமையாகும்.

ஒரு இஸ்லாமியர் இஸ்லாம் தொடர்பான விடயங்களை அலசிப் பார்ப்பதற்கும் அம்மதத்தைச் சாராத ஒருவர் மேற்கொள்ளும் ஆய்வுக்கும் இடையே வித்தியாசம் இருக்கும். உயர் கல்வி பெற்றவர், பேராதனை பல்கலைக்கழக பதில் நூலகர், ஆய்வாளர் மற்றும் பத்திரிகையாளர் என்ற பல்பரிமாணங்களைக் கொண்ட நூலாசிரியர் ஆர். மகேஸ்வரன் நியாய மற்றும் நடுநிலைப் பார்வையுடன் மிகுந்த எச்சரிக்கையாக இவ்விரண்டு இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளையும் அணுகியுள்ளார் என்பதை, இந்நூலை வாசிக்கும் வாசகர்கள் புரிந்து கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளைப் பற்றிப் பேசுவதாகவும் அதே சமயம் ஒரு பயண நூலாகவும் அமைந்திருப்பது விசேட அம்சம். நூலின் பிற்பகுதியில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வுகளை எடுத்துக் கொண்டு அவற்றின் பெருமைகளை அடுத்தடுத்து விளக்கிக் கொண்டு உள்ளே போவது பிரமிப்பை ஏற்படுத்துகிறது. அனேகமாக இவர் ஒரு இஸ்லாமியரல்லாதவராக இருப்பதே இந்த பிரமிப்புக்குக் காரணமாக இருந்திருக்கலாம். இஸ்லாமிய இலக்கியங்களில் இவை எல்லாம் அமைந்திருக்கின்றனவே அன்றைய புலவர்கள் அரபு இலக்கியங் களையும், அரபு நிலத்து சூழல்களையும் எப்படி தமிழ்நாட்டு இலக்கிய மற்றும் சுற்றுச் சூழலுக்கு பொருந்துகின்ற மாதிரியும் அதே சமயம் மரபுக்கு உட்பட்டதாகவும் மாற்றி அமைத்திருக்கிறார்களே என்று நூலாசிரியருக்கு ஏற்பட்ட ஆச்சரியமும் பிரமிப்புமே இந்நூலை கனமான ஒரு புத்தகமாக நமக்கு ஆக்கித் தந்திருக்கிறது என்பது என் முடிவு.

தமிழ்ச் சூழலில் பல இஸ்லாமிய இலக்கிய மாநாடுகள் நடைபெற்று விட்டன. இலங்கையிலும் ஒன்று நடந்தது. ஆனால் இம்மாநாடுகளை எவரும் ஆராய்ந்து எழுதியதில்லை. குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, நிறைவுகளைப் பாராட்டி, ஆய்வுகளை சீர்தூக்கிப் பார்த்து சாமானியரும் விளங்கிக் கொள்ளும் வகையில் எவரும் கட்டுரைகளை எழுதியதாக நான் அறியவில்லை. ஒரு நூலும் வெளிவந்ததாகவும் தெரியவில்லை. இலங்கையைப் பொறுத்தவரை எல்லா மாநாடுகளும் செய்திகளோடு நின்று விட்டன. அதற்கு அப்பால் செல்ல வேண்டிய தேவை இருப்பதாக எவரும் கருதவும் இல்லை. ஏதேனும் சிறு நூல்கள் வெளிவந்திருந்தாலும் அவை புகழுரைகளாகவே இருந்திருக்கும். அவ்வகையில் இஸ்லாமிய, தமிழ் இலக்கியப் பரப்பில் இலங்கையில் இருந்து வெளியான முதல் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வுகள் தொடர்பான விமர்சன நூலாக இந்நூலைக் கொள்ள முடியும்.

இந்நூல் தொடர் கட்டுரையாக வண்ண வானவில்லில் வெளிவந்த போது பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டதே தவிர கண்டனக் கடிதங்கள் எதுவும் வரவில்லை. எமது மதத்தைச் சாராதவர் இஸ்லாமிய இலக்கிய விமர்சனங்களை முன்வைக்கிறாரே என எந்த இஸ்லாமியரும் அசூசை கொண்டதையும் காணவில்லை. தவறுகள் சுட்டிக்காட்டப்பட்ட சமயங் களில் அவை ஏற்கப்பட்டதையும், இது ஒரு நூலாக வெளிவர வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஆர்வம் தெரிவிக்கப்பட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். இஸ்லாமிய இலக்கிய உள்ளங்களின் இந்த பரந்த மனப்பான்மை, எடுத்துக்காட்டு உணர்வுடன் பாராட்டப்பட வேண்டும்.

நூலாசிரியர் ஆர். மகேஸ்வரனை நான் நீண்ட காலமாக அறிவேன். அவரது வளர்ச்சியை ஆர்வமுடன் கவனித்து வந்தவன் என்ற வகை யிலும் நெருங்கிய நண்பர் என்ற வகையிலும் இலக்கியப் பணியில் அவர் இன்னும் நீண்ட நெடும் பயணம் மேற்கொள்வார் என்பதை மகிழ்வுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

அருள் சத்தியநாதன்
ஆசிரியர், வண்ணவானவில்
20 - 08 - 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

இரண்டு முறை மலேசியாவிலும் இந்தியா காயல்பட்டணத்திலும் நடந்த இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளுக்குச் சென்ற அனுபவங்களை இங்கு தொகுத்து ஆவணப்படுத்தியுள்ளேன்.''இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி'' என்பார்கள் இஸ்லாமிய தமிழர்கள். எனவே தான் அமைதி வழியும் மதுர மொழியும் என இதற்குப் பெயரிட்டுள்ளேன்.

நான் கண்டியில் பிறந்து கண்டி அஸ்கிரிய வீதியில் வளர்ந்த போது கண்டியில் பெரிய பள்ளி என அழைக்கப்படும் மீரா மக்காம் பள்ளிவாசலின் முன்னால் எனது வீடு அமைந்திருந்தது. பிறந்தநாள் முதல் அங்கு வாழ்ந்த 32 வருடங்களும் நான் ஐந்து நேர (சுபஹ், லுஹர், அஸர், மஃரிப், இஷா) பாங்கு சத்தத்துடனேயே வாழ்ந்தேன். பாங்கு வரிகளும் தானாகவே மனனம் ஆகியது. இந்தப் பள்ளியிலேயே தர்ஹாவுக்குள் ஸியாவுத்தீன் வலியுல்லா அடக்கப்பட்டுள்ள ஸியாரம் உள்ளது.

நாம் சிறுவயதில் நண்பர்களுடன் விளையாடியது இப் பள்ளிவாசலிலும், அதன் படிக்கட்டுகளிலும், பள்ளியின் முன்னால் மற்றும் உள்ளே அமைந்துள்ள ஸியாரங்களிலுமே. அக்காலத்தில் பள்ளி லெப்பையிடம் ஓதுவதற்காக வருபவர்களுடன் ஓதும் வகுப்பு முடிந்தபின் விளையாடுவோம். நான் கல்வி கற்ற புனித சில்வெஸ்டர் கல்லூரியும் இப்பள்ளிக்கு அருகிலேயே அமைந்திருந்தது.

கல்லூரி மாணவர்களுடனும் மீரா மக்காம் பள்ளியிலேயே விளையாடினோம். எனது வகுப்பிலும் பல முஸ்லீம் மாணவர்கள் இருந்தனர். எனது வீட்டுக்கு முன்வீடு Bபாய் வீடு (பாகிஸ்தானியர்) Bபாய்கள் என்றே இவர்களை அழைத்தனர். பின்வீடு ''மலே'' அல்லது ஜாவா வீடு. இந்த ஜாவா வீட்டிலேயே இந்தோனேசிய உணவுகளான ''நாசிகுரே'', ''பிரியாணி'' ஆகியன சாப்பிட்டுள்ளோம்.

எனது வகுப்பிலேயே மீரா மக்காம் பள்ளி லெப்பையின் மகன் நியாஸ் என்பவர் கல்வி கற்றார். அவருடன் தொழுகை நேரம் பள்ளிக்குச் சென்று பார்வையிட்டோம். ''வுழு'' எடுக்கும் நீர்த்தொட்டியில் வண்ண மீன்கள் (gold fish) வளர்ந்தன. பள்ளியில் நேர்த்திக்கடன் கழிப்பதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிகள் வழங்குவர். இக்கோழிகள் விற்பனைக்கு இருந்தது. கோழி இறைச்சி தேவையானால், உயிருடன் கோழியை ''பிஸ்மில்லாஹ்'' கூறி அறுத்துத் தருவார்கள். இங்கு முட்டையும் விற்கப்பட்டது. நாம் தேவையான முட்டையை இங்கேயே வாங்கினோம்.

இப்பள்ளியில் கொடியேற்றம், கந்தூரி வழங்கள், சந்தனக் கூடு, ஆகியன இடம் பெறும். எமது வீட்டிற்கு லெப்பையிடமிருந்து கந்தூரிச் சோறு வரும். அன்று நாம் இரவில் சமைப்பதில்லை. நோன்பு காலங்களில் மாலையில் ''கஞ்சி'' ஒரு முட்டி வீட்டிற்கு வரும். நாம் யாராவது சுகவீன முற்றால், டாக்டரிடம் போவதில்லை. லெப்பை வீட்டிற்கு வந்து ஒரு பீங்கானில் சந்தனம் அல்லது குங்குமப் புவினால் அராபி பாஷையில் ஏதோ எழுதுவார். அதை நீர் ஊற்றி கரைத்து குடிக்கத் தருவார். அது போல் பள்ளி வாசலில் வெள்ளைப் பூ மரமொன்று இருந்தது. கண் வலி, கண் வருத்தம் வந்தால் அந்தப் பூவை ஊற வைத்த நீரினால் கண்ணைக் கழுவுவோம். கண்டி நகரிலுள்ள பலரும் இந்தப் பூவைப் பறிப்பதற்காக இங்கு வருவார்கள். இங்கு ஸியாரம் பச்சை துணியால் மூடப்பட்டிருக்கும். இதில் நட்சத்திரம் பொறிக்கப்பட்டிருக்கும். பக்தர்கள் காணிக்கை போட்டு விட்டு எரியும் விளக்கின் எண்ணையைத் தொட்டு தலையில் தடவிக் கொள்வர்.

இங்கு ''கூடு'' விழா நடக்கும். தேர்த் திருவிழாப் போல் இருக்கும். இந்தத் தேரை இவர்கள் ''சந்தனக் கூடு'' என்பர். நிறைய சந்தனக் குச்சி களைக் கொளுத்தி நல்ல வாசனையுடன் வீதிகளில் ஊர்வலம் செல்லும். இரண்டு காளை மாடுகள் இக்கூட்டினை இழுத்து வரும். இக்காலத்தில் கொடியேற்றிய நாள் முதல் கொடியிறக்கும் நாள்வரை பள்ளி முன்றலில் பல்வேறு கலைகளைக் காணலாம். சிலம்படி, Bபாவா மார்களின் றபன், கண்கட்டி வித்தைகள், இஸ்லாமியப் பாடல்கள், பக்கீர்பதை பாடல்கள், தற்போதைய ரெஸ்லிங் - மல்யுத்தம் போன்ற நெத்தியடி சண்டை, புலியாட்டம், கோலாட்டம் ஆகியன இடம்பெறும். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், Bபாவாமார், பக்கீர்கள் தகாரா அடித்து பைத் ஓதிவர வார்கள். மதமுக்கியஸ்தர்கள் வருவார்கள். இவர்களில் சில பக்கீர்மார்கள் கண்ணுக்கு மை (சுருமா) பூசுவார்கள். நானும் ஒரு ரூபாய் கொடுத்து கண்ணுக்கு மை பூசியுள்ளேன். கண்கட்டி வித்தையில் - ஒரு சிறுவனை துண்டு துண்டாக வெட்டுவர், கத்தியால் குத்துவர் பின்னர் சிறுவன் எழுந்து வருவான். இவற்றைக் கண்டு களித்தோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒரு மேடை அமைந்திருந்தது. இந்த மேடையிலேயே இசை நிகழ்ச்சிகள் இடம் பெறும். இந்தியாவிலிருந்து வரும் ''தங்கள்'' மார்களின் பிரசங்கங்கள் (Bயான்கள்) இடம் பெறும். இந்த உரைகளில் சைவசமயத் திற்கு எதிராக பலர் உரையாற்றுவர். இதனால் சைவசமயத்தில் எமக்கு தெரியாத பல விடயங்களையும் நாம் இப் பிரசங்கங்கள் மூலமே தெரிந்து கொண்டோம். இந்த மேடையிலேயே நாம் விளையாடுவது வழக்கம்.

சந்தனக்கூடு காலங்களில் மண்சட்டிப் பானைகள், சிறுவர்கள் வீட்டில் சமைத்து விளையாடும் மண்சட்டிப் பானைகள், கூசாக்கள், விளையாட்டுப் பொருட்கள், கொத்து ரொட்டி, முட்டை ரொட்டிக் கடைகள், பொம்பே சுவீட், பம்பாய் முட்டாசுக் கடைகள், மஸ்கட் கடைகள் போன்ற பல தற்காலிக கடைகள் பள்ளிக்கு முன்பாக நிறுவுவார்கள். இந்திய சாரங்கள், மப்லர்கள், கைக்குட்டைகள், தொப்பிகள் போன்றவை இங்கு விற்பனைக்கு இருக்கும்.

நாம் பள்ளி முற்றத்திலேயே பட்டம் விட்டு விளையாடினோம். நோன்பு காலங்களில் கிளித்தட்டு - சால்பாய்தல், விளையாடுவோம். பள்ளிக்கு முன்பாக மாநகர சபை சந்தியில் கிளித்தட்டு விளையாட்டுக்கு சதுரங்கள் வரையப்பட்டிருக்கும். இரவு 9.00 மணிக்கு ஆரம்பித்தால் விடியற்காலை (சஹர்) வரை விளையாடுவோம். கண்டி மாநகர சபை சந்தியில் முஸ்லீம்களே அதிகமாக வாழ்ந்தனர். நான் இவர்களுடனேயே கிரிக்கட், உதைபந்து, விளையாடினேன். க. பொ. த. (சா. த) பரீட்சைக்காலத் தில் கண்டி மார்க்கட்டுக்கு அருகிலுள்ள லயின் பள்ளியிலேயே ''டீன்'' டியுசன் வகுப்புகள் நடந்தது. அதில் கற்றேன். எனது வகுப்பில் தொடர்ந்தும் முஸ்லீம் மாணவர்கள் கல்வி கற்றனர். உயர் வகுப்புக்கு வந்த பின் மௌஜூத் என்பவர் எமது வகுப்பு நண்பராக இருந்தார். இதன்போது பள்ளிவாசலில் கார் நிறுத்தப்பட்டிருந்த இடமான தேர்முட்டி போன்ற இடத்தில் நடந்த டியுசன் வகுப்பில் கல்வி கற்றோம். கல்லூரி ஹொக்கி குழுவில் என்னுடன் பல முஸ்லீம் மாணவர்கள் ஒன்றாக விளையாடினார்கள். இதன் பின்னர் இவர்களுடன் கழகம், மாவட்டம் என தொடர்ந்தது. எனது ஹொக்கி ஆசிரியராக அன்வர் என்பவரே இருந்தார். பல்கலைக்கழகம் சென்ற பின்னரும் முஸ்லீம் மாணவர்களே எமது வருடத்தில் (batch) அதிகமாக இருந்தனர். அவர்களுடன் காத்தான்குடி , நிந்தவூர், அட்டாளைச் சேனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களுக்கும், கிண்ணியா, மூதூர் ஆகிய இடங்களுக்கும் சென்று தங்கியிருந்துள்ளேன். கண்டியிலேயே மௌஜூத்துடன் கும்புக்கந்துர, சமீருடன் உடுதெனிய, நவ்பருடன் ஹெந்தெஸ்ஸவுக்கும் சென்று பல நாட்கள் தங்கியும், முஸ்லீம்களின் உணவுகளை ருசித்தும் வந்துள்ளேன். 32 வயதின் பின் கட்டுகஸ்தோட்டை வீதியில் அமைந்த எனது புதிய வீட்டுக்கு இடம் மாறிச் சென்றேன். இங்கும் காட்டுப்பள்ளியின் பாங்கோசை ஐந்து நேரமும் கேட்கும். சுற்றுச் சூழலிலும் முஸ்லீம்களே அதிகம் வாழ்ந்தனர். எனவே இந்த அனுபவங் களினால் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளின் மூலம் எனது அனுபவங்களை பகிரக் கூடியதாக அமைந்தது. இதன் மற்றொரு வடிவமே இந்த மாநாட்டு பயணக்கட்டுரை. மாநாட்டில் கண்டவற்றை, கேட்டவற்றை எழுதியுள்ளேன். தமிழ் முஸ்லீம் நண்பர்களுடன் வாசகர்கள் அனைவரும் இதனை ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றேன். ஏதாவது தவறான விடயங்கள் எழுதப்பட்டிருப்பின் அதற்காக மனம் வருந்துகிறேன். இது வேண்டுமென எழுதப்பட்டதல்ல, தவறுதலாக எழுதப்பட்டது என எடுத்துக் கொள்ளுங்கள். வாசகர்களின் கருத்துக்களை எதிர்பார்க்கிறேன்.

இக்கட்டுரையினை ஆர்வத்துடன் பெற்று, என்னையும் தொடர்ந்து எழுதத் தூண்டி இதனை மெருகூட்டி, சரி செய்து, செப்பனிட்டு வண்ண வானவில் பத்திரிகையில் தொடர் கட்டுரையாக வெளியிட்டு ஆக்கமும், ஊக்கமும் தந்து, இதற்கு முன்னுரையும் வழங்கிய வண்ணவானவில் ஆசிரியர் அருள்சத்தியநாதனுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளேன். அத்தோடு இக்கட்டுரையை நூலாக வடிவமைக்க உதவிய ரிபா ஷஹீட், ரொட்னி பெர்னாண்டோ, V. T. G. சந்திரசேகரன், C. ஸ்ரீதரன் ஆகியோருக்கும், ஈஸ்வரன் வெளியீட்டகத்திற்கும், குமரன் அச்சகத்திற்கும், ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

நன்றி

இரா. மகேஸ்வரன்
268 B, ஜயஸ்ரீஉயன
பள்ளேகள
குண்டசாலை
0777663709
maheswaranrasaiah@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

அணிந்துரை vii
முன்னுரை ix
என்னுரை xiii

1. ''இந்திய வர்த்தக சமூகத்தின் மூலமே
இஸ்லாம் மலேசியாவில் வேரூன்றியது'' 1

2. ஏற்பாட்டுக் குழுவின் குளறுபடிகளால் திண்டாடிப்போன
இலங்கைப் பேராளர்கள் 5

3. ஆய்வு மாநாடுகள் ஆய்வு மாநாடுகளாக
நடந்தால் மட்டுமே நோக்கம் நிறைவேறும் 9

4. பேராசிரியர் நுஃமானுக்கு தகுந்த
கௌரவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் 14

5. கிராமத்து கல்யாண வீடு போல
நடைபெற்ற காயல்பட்டண விருந்தோம்பல் 20

6. சர்ச்சையைக் கிளப்பிய
பர்வின் சுல்தானாவின் ஆவேச உரை! 26

7. காயல்பட்டணத்துக்கு
காயல் என்ற பெயர் ஏன் வந்தது? 32

8. அனாவசிய விஷயங்களை
கவியரங்கில் சேர்த்துக் குழப்பலாமா? 38

9. இலங்கைப் பேராளர்களுக்கு
கவிக்கோ எட்டிக்காயானது ஏன்? 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பேராசிரியர் எம்.எம்.உவைஸை கௌரவிக்கும்
மாநாடு இலங்கையில் நடத்தப்படாதது ஏன்? 50

11. சிறப்பாக அமைந்த கலாநிதி வ.மகேஸ்வரனின்
''சீறாப்புராணத்தில் உலா'' ஆய்வுக் கட்டுரை 56

12. முஸ்லிம் இலக்கியம் எழுச்சி பெற்ற
16-19ஆம் நூற்றாண்டு காலப்பகுதி 61

13. தமிழ் அரசர்களின் அன்பையும்
கௌரவத்தையும் பெற்ற இராவுத்தர்கள் 66

14. இஸ்லாமிய இசை மரபுக்கு சான்றாக
விளங்கும் ஃபகீர்களின் தப்ஸ் பாடல்கள் 71

15. நொண்டிச் சிந்தை முதலில் அறிமுகம் செய்தவர்
ஒரு முஸ்லிம் புலவரே 77

16. பள்ளு இலக்கியம் படைத்து
சாதியை மறுத்த இஸ்லாமிய இலக்கியம் 82

17. இஸ்லாமிய இலக்கியம் படைத்த
பெண் படைப்பாளர்கள் 88

18. இஸ்லாமிய நாட்டுப்புறவியல் துறை
தனிப் பிரிவாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

''இந்திய வர்த்தக சமூகத்தின் மூலமே இஸ்லாம் மலேசியாவில் வேரூன்றியது''

மலேசிய மாநாட்டு அரங்கில் நவமணி ஆசிரியர் என்.எம்.அமீன்

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2011, மே மாதம் 20ம் திகதி முதல் 22ம் திகதி வரை மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் வெகு விமரிசையாக நடைபெற்றது. கடந்த வருடம் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றிருந்த நான், இக் கோலாலம்பூர் இஸ்லாமிய இலக்கிய மாநாட்டை கோவை செம்மொழி மாநாட்டுடன் பொருத்திப்பார்தேன். ஊடக வியலாளன் என்ற வகையில் இது ஒரு தவிர்க்க முடியாத சிந்தனை.

கலைஞர் கருணாநிதி தலைமையில் அவரது அரசே ஏற்பாடு செய்திருந்ததால் சொல்லிமாளாத பிரமாண்டத்தை அது கொண்டிருந்தது என்பதில் ஆச்சரியம் இருக்க முடியாதுதான். ஆனால் அந்த பிரமாண்டத்தை மலேசிய நகரில் நான் காணவில்லையே தவிர, செம்மொழி மாநாட்டின் ஏற்பாடுகளும் நிகழ்வுகளும் எவ்வளவு கனகச்சிதமாக இருந்தனவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே அளவுக்கு சிறப்பாக மலேசிய ஏற்பாட்டாளர்களும் பார்த்துப் பார்த்துச் செய்திருந்தார்கள். நாம் விமான நிலையம் சென்றடைந்ததில் இருந்து மாநாடு முடிந்து விமான மேறும் வரையில் எம்மை அன்போடும் பண்போடும் கவனித்துக் கொண்டார்கள். சிறு குறையும் வந்து விடக்கூடாது என்பதில் முன்னெச்சரிக்கையாக இருந்தார்கள். சில சந்தர்ப்பங்களில், அட, கோவை மாநாடு போலவே இருக்கிறதே..! என நாங்கள் பேசிக் கொண்டோம்.

இது மாநாட்டின் இனிப்பான, பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டிய செழுமையான பகுதி என்றால், வெறுப்பையும் முகச்சுழிப்பையும் ஏற்படுத்திய இன்னொரு பகுதியும் உண்டு. ஆனால் இதற்கும் கோலாலம்பூர் ஏற்பாட்டாளர்களுக்கும் எந்தச்சம்பந்தமும் கிடையாது. இலங்கை ஏற்பாட் டாளர்கள் விட்ட தவறுகளினால் இங்கிருந்து சென்ற பேராளர்கள் சிரமப்பட நேர்ந்தது. இதைப்பின்னர் விரிவாகப்பார்ப்போம்.

இம்மாநாட்டின் விசேஷம், அதன் ஏற்பாட்டாளர்கள் அரசியல் கலப்பின்றி முழு மாநாட்டையும் ஏற்பாடு செய்திருந்தமையாகும். கோவை செம்மொழி மாநாடு ஏறக்குறைய தி.மு.க மாநாடு மாதிரி அமைந்திருந்ததை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். எங்கும் கலைஞர் எதிலும் தி.மு.க ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை என்றிருந்தது நாம் அறிந்த ஒன்றே.

மலேசியாவில் இஸ்லாமிய இலக்கிய மாநாட்டை நடத்துவதற்கு முக்கிய காரணம் ஒன்றிருந்தது. இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு மலேசியாவில் இதுவரை நடத்தப்பட்டிருக்கவில்லை. இது மலேசியா வாழ் தமிழ் முஸ்லிம்களுக்கு பெருங்குறையாக இருந்தது இதனால் கோலாகலமாக நடத்திக்காட்டினார்கள்.

மலேசியாவில் வேர்ள்ட் டிரேட் சென்டர் என்ற புத்ரா உலக வாணிப மையத்தின் 'மொர்டேகா' மண்டபத்தில் மாநாட்டின் ஆரம்ப தின நிகழ்வுகள் நடைபெற்றன. இது உலக மாநாடுகள் நடத்தப்படும் ஒரு சர்வதேச மண்டபம்.

ஆரம்ப விழாவில் முதலில் அறிமுக விழாவும், பின்னர் மாநாட்டு தொடக்கவிழாவும் சிறப்பு விருந்தும் நடைபெற்றன. அறிமுக விழா அரங்கிற்கு 'மாயின் அபுபக்கர் பரக்கத் அரங்கம்' என பெயரிடப் பட்டிருந்ததோடு மாநாட்டு தொடக்க விழா அரங்கிற்கு 'டான் ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.ஓ.கே உபைதுல்லாஹ் அரங்கம்' என பெயரிடப்பட்டிருந்தது. மலேசிய பிரதமர் துணை அமைச்சர் டான் ஸ்ரீ நூர் முகம்மது யாக்கோப், இந்த மாநாட்டு ஆரம்ப விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அறிமுக விழாவில் கோலாலம்பூர் நாணயமாற்று வியாபாரிகள் சங்கத் தலைவர் முனைவர் முகம்மது சுஐப் தலைமை தாங்கினார்.

இந்த நாணயமாற்று சங்கம் பற்றி வாசகர்களுக்கு சொல்ல வேண்டும். இந்திய தமிழ் முஸ்லிம்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளும் மலேசிய தமிழ் முஸ்லிம்கள் பரந்தளவில் இரண்டு முக்கிய தொழில் துறையில் கொடிகட்டிப் பறக்கின்றனர். அதில் ஒன்று நாணயமாற்றல். இவ்வியாபாரமானது முற்றுமுழுதாக தமிழ் முஸ்லிம்களின் கைகளிலேயே உள்ளது. அடுத்தபடியாக உணவகங்கள் அல்லது ஹோட்டல்கள் நடத்துவது. மலேசியாவில் எங்கு சென்றாலும் தமிழ் முஸ்லிம்களது உணவகங்களைக் காணலாம். நாணயமாற்று சங்க தலைவர் முகம்மது சுஐப் தலைமையில் நடைபெற்ற அறிமுக விழாவில் வாழ்த்துரைகள் வழங்குவதற்கு எல்லா நாட்டவர்களுக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. மலேசியா சார்பாக பெர்மிம் தலைவர் டத்தோ டாக்டர் சையது இப்ராஹிம், இலங்கை சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி, இந்தியா சார்பாக கவிஞர் அப்துல் ரஹ்மான், சிங்கப்பூர் சார்பாக எஸ்.எம். ஜலீல், தாய்லாந்து சார்பாக முனைவர் ரஃபியுத்தீன் ஆகியோர் உரையாற்றினர். வரவேற்புரையை மலேசிய கவிஞர் மைதி. சுல்தான் நிகழ்த்தினார்.

நிகழ்ச்சிகளை இன்பத்தமிழில் நடத்திச்சென்றவர் நமது பீ.எச். அப்துல் ஹமீத். சென்னையிலிருந்து வந்த ஹமீதும் மலேசிய வானொலி புகழ் நாச்சியா மஜீதும் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினர். எனவே சலிப்பில்லாமல் இருந்தது. மாநாட்டு தொடக்க விழாவில் டத்தோ ஜமரூல் கான் சையது காதிர் வரவேற்புரையாற்றினார்.

நமது நீதியமைச்சர் ரவுஃப் ஹக்கீம், அனைத்திந்திய ஹஜ் கமிட்டி துணைத்தலைவர் ஏ.அபூபக்கர், மலேசியா கிம்மா தலைவர் டத்தோ சையது இப்ராஹிம், மலாயப் பல்கலைக்கழக உதவி துணைவேந்தர் பேராசிரியர் குருநாதன் ரத்தினவேலு ஆகியோர் இங்கு உரையாற்றினர். இந்த மாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவர் டத்தோ முகம்மது இக்பால் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் மலேசிய பிரதம துறை அமைச்சர் டான்ஸ்ரீ நூர் முகம்மது யாக்கோப் சிறப்புரையாற்றினார். மலேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜிப்துன் ரசாக்கின் வாழ்த்துச்செய்தி வாசிக்கப்பட்டது.

பிரதம துணை அமைச்சர் டான்ஸ்ரீ நூர் முகம்மது யாக்கோப் சில விஷயங்களைத்தொட்டுக்காட்டினார்.

''அரச செலவில் தமிழ் பாடசாலைகள் நடைபெறுகின்றன. மலேசியாவில் 523 தமிழ்ப்பாடசாலைகள் உள்ளன. 8000 தமிழ் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். 523 தலைமை ஆசிரியர்கள் உள்ளனர். எக்காலத்திலும் மலேசிய இந்திய காங்கிரஸ் தமிழ் பாடசாலைகளை மூடுவதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். தோட்டப் புற இந்திய சமூகம் இன்று நகர சமூகமாக மாறியுள்ளது. இதற்கேற்ப தமிழ்ப்பாடசாலைகள் நகரங்களை நோக்கி நகர்த்தப்பட வேண்டும். பிரதமரின் ஆசியோடும், ஒத்துழைப்போடும் 23 கோடி வெள்ளிகள் அரசால் இதற்கென வழங்கப்படுகிறது. இதன் மூலம் 100 பாடசாலைகளை படிப்படியாக நகர பாடசாலைகளாக மாற்றி விடுவோம். சில பாடசாலைகளில் இக்கட்டான நிலை காணப்படுகிறது. ஒரு பாடசாலையில் இரண்டு மாணவர்கள் 6 ஆசிரியர்கள் உள்ளனர்.

மலேசியாவில் இந்தியத்தமிழரும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்வார்களானால் இன்னும் பிரகாசமாக இருப்போம். வணிகத் துறை வளர்ச்சிக்கு இச்சமூகம் பெரும் பங்களிப்பு செய்து வருகிறது. சில நூற்றாண்டுக்கு முன் இங்கு வருகை தந்த இந்திய வர்த்தக சமூகத்தின் வாயிலாகவே இஸ்லாம் மலேசியாவில் பரவியது. மலேசியா இஸ்லாமிய நாடானதற்கான பெருமை இந்திய முஸ்லிம்களையே சாரும்'' என்றார் நூர் முகம்மது யாக்கோப். இங்கு உரையாற்றிய மலாயப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் குருநாதன் ரத்னவேலு தனக்கு தமிழில் உரையாற்ற முடியாமைக்காக மன்னிப்பு கேட்டு ஆங்கிலத்தில் உரை யாற்றினார். இவர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர். இவரது யாழ்ப்பாணத்து தொடர்பை அறிந்ததும் மாநாட்டில் கலந்து கொண்ட பலரும் கவலையடைந்தார்கள். மலேசியாவில் வாழும் யாழ்ப்பாணத்து தமிழர்களின் வழித்தோன்றல்கள் தமிழை மறந்து விட்டனரே என்ற கவலை தான் அது. இங்குள்ள இந்தியத் தமிழரும், தமிழ் முஸ்லிம்களும் தமிழை போற்றிப் பாதுகாக்க முற்படுகையில் யாழ்ப்பாணத்து தமிழர் தமிழ் தெரியாது என்று கூறலாமா..? என்று கேள்வி எழுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

ஏற்பாட்டுக் குழுவின் குளறுபடிகளால் திண்டாடிப்போன இலங்கைப் பேராளர்கள்

இ-வ: கலாநிதி ஜமாஹிர், கட்டுரையாளர், அமைச்சர் ரவூப் ஹக்கீம், கவிக்கோ, படைப்பாளர் முத்துமீரான், கலாநிதி மகேஸ்வரன் மற்றும் கலாநிதி ரகுபரன்

யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் 40, 50 களிலேயே பர்மா, மலேசியா ஆகிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வேரூன்றிவிட்டனர். மலேசியாவில் இவர்கள் பெரிய பதவிகளில் இருந்து வருகிறார்கள். செல்வாக்கு மிக்கவர்களாகத் திகழ்கிறார்கள். மலாய் மொழியைப் பயின்று தேர்ச்சி பெற்றிருப்ப தால், தமது உத்தியோகங்களை திறம்பட நிர்வகிக்கவும் முடிகிறது. பெரும்பாலும் தமிழ் இவர்கள் மத்தியில் அந்நிய மொழியாகி விட்டது. பல வீடுகளில் வீட்டு மொழியாகவும் தமிழ் இல்லை என்றார் கள் மாநாட்டுக்கு வந்திருந்த மலேசியத் தமிழர்கள்.

இதைக் கேட்டபோது, ஐரோப்பிய மற்றும் ஸ்கென்டினேவிய நாடு களில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் எதிர் காலமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் அடுத்த தலைமுறையும் இப்படித்தான் மாறி விடுமோ என்ற எண்ணம் என்னில் உதித்தது. இந்த இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்கு மலேசியா வாழ் இந்தியத் தமிழர்கள் வழங்கிய ஆதரவை, இங்கு வாழும் இலங்கைத் தமிழர்கள் வழங்கவில்லை என்ற ஆதங்கம், மாநாட்டுக்கு வந்திருந்தவர்களிடம் காணப்பட்டது.

முதல் நாள் அமர்வின் பின்னர் அட்டகாசமான இராப்போசன விருந்து அளிக்கப்பட்டது. வகை வகையான ருசியான உணவுகளும், மாமிச வகைகளும் ஏராளமான கடல் உணவுகளும் பரிமாறப்பட்டன. எனினும் முக்கிய முஸ்லிம் பேராளர்களில் பலர் கடல் உணவுகளை கண்டு கொள்ளவில்லை. இறால், நண்டு உணவுகளைத் தொடவே இல்லை. இனி என்ன, நாங்கள் வெளுத்துக் கட்டினோம்.

எங்கள் வாய்ப்புகள் இப்படி என்றால் சைவ உணவுக்காரர்களின் நிலை படு திண்டாட்டமாக போய்விட்டது. மருந்துக்கும் சைவ உணவு இல்லை என்பதால் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் செ.யோகராசா தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ரகுபரன் இருவரும் இலை தழைகளைத் தேடி உண்ண வேண்டியதாயிற்று.

விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒருவரை இலங்கை பேராளர்கள் சுற்றி வளைத்துக் கொண்டு காரசாரமான கேள்விகளை கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்தான் இலங்கை ஏற்பாட்டுக் குழு சார்பாக விமான டிக்கட்டுக்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்த பயண முகவர்.

பேராளர் மற்றும் கட்டுரையாளர் ஆகியோர் தமது பயணத்தை உறுதி செய்யும் வகையில் பத்தாயிரம் ரூபாவை ஏப்ரல் 8 ம் திகதிக்கு முன் இந்த முகவரிடம் செலுத்தி பயணத்தை உறுதி செய்யும்படி இலங்கை எற்பாட்டுக் குழு எம்மிடம் கேட்டிருந்தது. நிறுவன வங்கிக் கணக்கிற்கே பணத்தைச் செலுத்துமாறு நாம் கேட்கப்பட்டிருந்தோம். பலரும் இக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தனர். ஆனால் டிக்கட்டுக்கள் பதிவு செய்யப்பபடவில்லை. பின்னர் டிக்கட் கட்டணங்களை அறிவித்த ஏற்பாட்டுக் குழுவினர், மிகுதி பணத்தைச் செலுத்தி டிக்கட்டுக்களை இந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு எமக்கு அறிவுறுத்தியிருந்தனர். எயார் ஏசியா டிக்கட்டுக்கள் ரூ 26,500 என அறிவிக்கப்பட்டது. சிலர் உடனடியாக இதனைச் செலுத்தினர். சிலர் தாமதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்லைன் டிக்கட் பதிவு முறையின் கீழ், முன்கூட்டி பெறுபவர்களுக்கு குறைந்த தொகையும், தாமதித்தவர்களுக்கு அதிகக் கட்டணமும் அறவிடப்படுவது நடைமுறை என்றும், தாமதித்தவர்கள் அதிக தொகை கொடுக்க வேண்டியதாயிற்று என்றும் காரணம் கூறிய பயண முகவர், சிலரிடம் 31,500 ரூபா வரை பெற்றாராம். இதில் ஆச்சரியம் என்னவென்றால், ஆரம்பத்தில் பணம் செலுத்தியவர்களில் சிலர் மீண்டும் 5000 செலுத்தி 31,500 ரூபா செலுத்த வேண்டியதாயிற்று. சிலரிடம் கடவுச் சீட்டும், பணமும் பெறப்பட்டும், டிக்கட் பதிவு செய்யப்படவில்லை. எனவே பலரிடமும் இந்த முணுமுணுப்பு காணப்பட்டது. ஏற்பாட்டுக் குழுவால் நியமிக்கப்பட்ட முகவர், டிக்கட் ஏஜன்ட் அல்ல என்பதும், அவர் வெளிநாட்டு வேலைக்கனுப்பும் முகவர் நிறுவனம் நடத்துபவர் என்பதும் பல நாட்களுக்குப் பின்னரே தெரிய வந்திருக்கிறது. விமான டிக்கட்டுக்கள் கூட அந்த நிறுவனம் மூலமாகவே பதிவு செய்யப்பட்டிருந்தன. ஏற்பாட்டுக் குழு ரூபா 10,000 செலுத்துமாறு கூறாமல், டிக்கட்டின் முழு பணத்தையும் பெற்று, டிக்கட் பதிவு வேலையை திறம்பட செய்திருக்கலாம் என்பதே பலரது அபிப்பிராயமாக காணப்பட்டது.

இந்த முகவர் ஒரு கட்சியின் முக்கியஸ்தர். சில அரசியல் பிரமுகர்கள் இவருக்கு நண்பர்கள். எனவே இவருக்கு ஆதரவு தரப்பு ஒன்றும் இருந்தது. இது இலங்கை பேராளர்கள் பலரையும் ஆத்திரமடையச் செய்தது. அந்த முகவரையே சிலர் ஆரம்ப விழாவில் சுற்றி வளைத்து கேள்விகள் கேட்கத் தொடங்கினர். இதனால் சிறு சல சலப்பு ஏற்பட்டது. முகவரை திட்டித் தீர்த்தனர். பின்னர் கட்சி முக்கியஸ்தர்களே பேராளர்களை சமாதானப்படுத்தி இரவு போசனம் அருந்தச் செய்தனர். இதன் பின்னர் இந்த முகவர் மாநாட்டுப் பக்கமே தலை காட்டவில்லை.

கண்டியைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் ஸ்டார் ராசிக் இந்த முகவரிடம் தனது கடவுச்சீட்டை கொடுத்து பணம் செலுத்திய போதும் டிக்கட் பதிவு செய்யப்படவில்லை. கடவுச்சீட்டும் நிறுவனத்திலேயே விட்டுச் செல்லப்பட்டுள்ளது. இதை அறிந்து கொண்ட அவர் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீனின் உதவியை நாடியிருக்கிறார். அவர் அன்றிரவே முகவரின் இருப்பிடம் சென்று அவரை கூட்டிச்சென்று நிறுவனத்தை திறந்து கடவுச்சீட்டை வாங்கியிருக்கிறார். பின்னர் ஸ்ரீலங்கனில் அதிக கட்டணம் செலுத்தி அவசர அவசரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவே டிக்கட்டை பதிவு செய்திருக்கிறார். ராஸிக் தனியாகவே கோலாலம்பூர் சென்றார். ஆனால் தனி ஆளாக கோலாலம்பூர் சென்றதால் அவரை வரவேற்க எவரும் இருக்கவில்லை. ராஸிக் சொந்த செலவில் டெக்ஸி பிடித்து விடுதிக்குச் செல்ல மேலும் ரூபா 6000 செலவிட வேண்டியதாயிற்று. இவ்வாறு பலரும் தமது குறைகளைக் கூறி மன வேதனைப்பட்டார்கள்.

மாநாட்டுக்கு வந்த சிலரை மாநாட்டு மண்டபத்தில் காணமுடியவில்லை. சிங்கப்பூர் செல்வதும், ஷொப்பிங் செய்வதுமே இவர்களது வேலையாக இருந்ததாம். ஆனால் வருகை தந்த இலக்கியவாதிகளும் ஊடகவியலாளர்களும் ஆர்வத்துடன் பங்குபற்றினர். முஸ்லிம் மீடியா போரம் தனது உறுப்பினர்களை ஆர்வத்துடன் பங்குபற்ற செய்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்வதாகவும் இதனால் மலேசிய ஏற்பாட்டுக்குழுவுக்கு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றும் அமைச்சர் ரவுப் ஹக்கீம் தமதுரையில் ஆதங்கப்பட்டார்.

எனினும் மலேசிய ஏற்பாட்டளர்கள் தமது பங்கை மிகச்சிறப்பாக செய்திருந்தனர். விமான நிலையத்தில் இருந்து விடுதிக்கும், மாநாட்டு மண்டபத்துக்கும் பின்னர் மண்டபத்தில் இருந்து தங்கு விடுதிக்கும் சொகுசு பஸ்களை ஏற்பாடு செய்திருந்தனர். உபசரிப்பும் பிரமாதமாக இருந்தது. மாநாடு முடிவுற்ற மறுதினம் கோலாலம்பூர் சுற்றுலாவையும் ஏற்பாடு செய்தருந்தனர். ஆனால் பல பேராளர்கள் இச்சுற்றுலாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழக்க நேரிட்டது. ஏனெனில் டிக்கட்டுகளை ஒழுங்கு செய்திருந்த முகவர், மாநாடு முடிந்ததுமே விமானமேறும் வகையில் ஒழுங்கு செய்திருந்ததால் அவர்கள் விமான நிலையம் செல்ல வேண்டியதாயிற்று. இதனால் ஏமாற்றமடைந்த அவர்கள், முகவரையும் இலங்கை ஏற்பாட்டுக்குழுவினரையும் திட்டித்தீர்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

ஆய்வு மாநாடுகள் ஆய்வு மாநாடுகளாக நடந்தால் மட்டுமே நோக்கம் நிறைவேறும்

மேடை: காயல் பட்டினம்

இரண்டாவது ஆய்வரங்கு மலாயப் பல்கலைக்கழக கலைத்துறை மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு ஆய்வரங்கம் ஒன்று அறிஞர் அல்லாமா கரீம் கனி அரங்கம் எனவும் அரங்கம் 2 மகதூம் சாயபு அரங்கம் என்றும் பெயரிடப்பட்டிருந்தது. ஆய்வரங்க தொடக்க விழா மலாயப்பல்கலைக்கழக பெர்டானா சிஸ்வா மண்டபத்தில் டத்தோ எஸ்.எம்.ஐ.ஷேக் அலாவுதீன் அரங்கத்தில் நடைபெற்றது.

ஆய்வரங்க தொடக்க விழாவில் மலேசிய மனிதவளத்துறை அமைச்சர் டத்தோ டாக்டர் எஸ்.சுப்பிரமணியம், முன்னாள் துணை யமைச்சர் டத்தோ சி.சுப்பிரமணியம், தேசிய கூட்டுறவுச் சங்கத்தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம், ஆஸ்டோ தலைவர் டாக்டர் செ.ராஜமணி, அக்மால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலாவுதீன், ஜவகர் அலி, ஹாஜி நஜ்முதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், மலாயப்பல்கலைக் கழக இந்திய ஆய்வுத்துறை தலைவர் முனைவர் எஸ்.குமரன், கவிஞர் சீனி நைனா முகம்மது, ஏற்பாட்டுக்குழு தலைவர் டத்தோ முகம்மது இக்பால், இலக்கியவாதி சைபீர் முகம்மது ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இலங்கை அரசு தமிழுக்கு அரச மொழி அந்தஸ்து வழங்கியுள்ளமை, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ ஐ.நா சபையில் தமிழில் உரையாற்றியமை போன்ற பல விடயங்களை ஏ.எச்.எம்.அஸ்வர் எடுத்து ரைத்தார். ஆனால் இறுதி அமர்வில் மேடையில் ஒரு கட்சி சார்ந்தவர்களுக்கு மட்டுமே மேடையில் ஆசனம் வழங்கப்பட்டிருந்தது. ஏ.எச்.எம். அஸ்வருக்கு உரிய ஆசனம் மேடையில் வழங்கப்படாமை பற்றியும் பலர் ஆதங்கப்பட்டனர். ஏனெனில் முஸ்லிம் கலாசார அமைச்சராக இவர் ஒரு காலத்தில் பதவி வகித்தவர் அல்லவா என்று இவர்கள் சுட்டிக்காட் டவும் செய்தனர்.

ஆய்வரங்க தொடக்க விழாவின் பின்னர் சகல ஆய்வரங்குகளும் டாத்தாரான் சாஸ்திரா (டி.கே.எப்) வளாகத்தில் நடைபெற்றன. ஆய்வு அரங்குகளுக்கு அறிஞர் அல்லாமா கரீம் கனி அரங்கம், மகதூம் சாயுபு அரங்கம், அப்துல்லாஹ் - மாஸா அரங்கம், பண்டிட் மு.அப்துல் மஜீது அரங்கம், டத்தோ சிக்கந்தர் பாட்சா அரங்கம், ஜே.எம்.ஹுசைன் அரங்கம், செய்குத்தம்பிப் பாவலர் அரங்கம், கன்னல்கவி நக்கம்பாடி கரீம் அரங்கம், இலங்கையை சேர்ந்த கலாநிதி டாக்டர் ம.மு.உவைஸ் அரங்கம், சித்தி லெப்பை அரங்கம், புலவர்மணி ஷர்புதீன் அரங்கம் எனமொத்தம் பதினொரு அரங்குகள் நடைபெற்றன. இதில் டத்தோ சிக்கந்தர் பாட்சா அரங்கில் நூல் வெளியீட்டு விழாவும், ஜே.எம்.ஹுசைன் அரங்கில் இஸ்லாம் காட்டும் இலட்சிய வாழ்வும் எதிர் நோக்கும் சவால்களும் எனும் தலைப்பில் கருத்தரங்கும் நடைபெற மீதி ஒன்பது அரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப்பட்டன. இந்த ஒன்பது அரங்குகளும் இரண்டு மண்டபத்திற்குள்ளேயே நடைபெற்றன.

ஒரு ஆய்வரங்கில் இரண்டு கட்டுரைகளாக நான்கு அரங்கு களில் 8 கட்டுரைகளும், ஒரு அரங்கில் மூன்று கட்டுரைகளாக 5 அரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் 15 கட்டுரைகளுமாக மொத்தம் 23 ஆய்வுக்கட்டுரை களே இரண்டு நாளும் சமர்ப்பிக்கப்பட்டன.

கோவை செம்மொழி மாநாட்டில் மூன்று நாட்களில் 22 ஆய்வரங்குகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அண்மையில் நடந்த காயல்பட்டண இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வரங்கில் சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 2 மணி வரை 11 ஆய்வரங்குகளில் 80க்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப் பட்டன. ஆனால் இங்கே இரண்டு மண்டபங்களில் அமைந்திருந்த 9 அரங்குகளில் வெறும் 23 ஆய்வு கட்டுரைகளே சமர்ப்பிக்கப்பட்டன. அதில் மூன்று கட்டுரைகள் இலங்கை ஆய்வாளர்களுடையதாகும்.

இந்த ஆய்வரங்குகளுக்கு முனைவர் ஹாஜா கனி (தமிழ் நாடு), டாக்டர் தாசிம் அஹமது (இலங்கை), டாக்டர் அஹமது காமில் மைதீன் மீரா (அனைத்துலக இஸ்லாமிய பல்கலைக்கழகம் - மலேசியா), எஸ்.எச். எம்.ஜமீல் (இலங்கை), முனைவர் ரெ.கார்த்தி கேசு (மலேசியா), கெப்டன் என்.ஏ.அமீர் அலி (தமிழ் நாடு), ஷாஹுல் ஹமீது (மலேசியா) முனைவர் முரசு நெடுமாறன் (மலேசியா), டாக்டர் அ.சையது இபுராஹிம் (ஹிமானா சையது, சிங்கை) ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் இலங்கைக்குழுத் தலைவரும், செயலாளரும் மட்டுமே தலைமை தாங்கியது பற்றியும் ஏனையோருக்கு சந்தர்ப்பம் வழங்காமை பற்றியும் ஏற்பாட்டு குழுவினரிடையே முணுமுணுப்பு காணப்பட்டது. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஏற்பாட்டாளர்களுள் ஒரு சிலர் மட்டும் மலாயா பல்கலைக்கழக வாடி வீட்டில் தங்கிக்கொண்டு ஏனையோரை ஏனைய பேராளர்களுடன் மாணவர் விடுதியில் தங்க வைத்தமையும் இந்த முணுமுணுப்புக்கு காரணமானது.

இனி ஆய்வு கட்டுரைகளையும், வெளியிடப்பட்ட மலரின் கட்டுரை களையும், நோக்குவோம்...

இவற்றில் சில கட்டுரைகள் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் மாநாடுகளில் முன்வைப்பதாகவும் சில கட்டுரைகள் ஒருவரைப் பற்றி மற்றொருவர் துதிபாடுவதாகவும் அமைந்திருந்தன.

இதைப்பலரும் சுட்டிக்காட்டினர். 1967ஆம் ஆண்டு மருதமுனையில் முதலாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொடக்கம் இன்று வரை நடைபெற்ற பல மாநாடுகளிலும் இஸ்லாமிய தமிழ் இலக்கிய வடிவம் பற்றிய அரைத்த மாவையே திரும்ப திரும்ப அரைத்து வருகின்றனர். அவற்றிற்கு உள்ளே சென்று அது எவ்வாறு ஏனைய இலக்கியங்களிலிருந்து மாறுபட்டுள்ளது. அவை அற்புதமான வடிவங்கள் என ஏன் கொள்ளப்பட வேண்டும். அவற்றின் சிறப்புத்தன்மைகள், கருப்பொருள், உவமைகள் எனப்பல கூறுகளாக ஆராயலாம். ஆனால் மேலோட்டமாக முனாஜாத்து, கிஸ்ஸா, மசாலா, நாமா, ஏசல், பல்சந்த மாலை, ஆராட்டு, கீர்த்தனை, கும்மி, பிள்ளைத்தமிழ், சிந்து என மேலெழுந்தவாரியாகவே பேசப்படுகிறது. இவற்றில் உள் அம்சங்கள், பாடுபொருள், மரபுகள் கையாண்ட நடை இவை பற்றி ஆய்வுகள் மிகக்குறைவே. எனவே இந்த ஆய்வு மாநாடுகள் ஒரே பொருளை, ஒரே தலைப்பை மீண்டும், மீண்டும் பேசுவதாக அமைந்து விடுகின்றன.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் பல புதிய வடிவங்கள் உண்டு. அவை பற்றி ஆராயப்பட வேண்டும்.

இவ்வாறான புதியன பற்றி ஆராயப்படாமைக்கு மற்றொரு காரணம் உண்டு.

1967ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இந்த மாநாடுகளில் குறிப்பிட்ட நபர்களே பங்குபற்றி வருகின்றனர்.

புதிய ஆய்வாளர்களை சேர்த்துக்கொள்வது குறைவாகவே உள்ளது. இன்று இலங்கை பல்கலைக்கழகங்களை எடுத்துக்கொண்டால் 15 பல்கலைக்கழகங்களிலும் பல புதிய இஸ்லாமிய விரிவுரையாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு சந்தர்ப்பங்களும், ஊக்குவிப்பும் வழங்கப் படுவது குறைவு,

1967ஆம் ஆண்டு இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றிப்பேசிய வரே இன்றும் கலந்து கொண்டு கட்டுரை படிக்கிறார். ஏற்பாட்டுக் குழு விலும் இடம்பெறுகின்றார். இதனால் இஸ்லாமிய விரிவுரையாளர்களே பாதிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழகத்தில் பதவி உயர்விற்கு ஆய்வுகள், கருத்தரங்குகள் இன்றியமையாதவை. புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமற் போகும்போது இளைய இஸ்லாமிய தலைமுறையினர் பாதிக்கப்படுகின்றனர். இது பற்றி எதிர்கால இஸ்லாமிய இலக்கிய ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் சிந்தித்து அவர்களையும் பயன்படுத்தி ஊக்கு விக்க முயல வேண்டும். அரசியல்வாதிகளுக்கு மேடையில் கொடுக்கப் படும் முக்கியத்துவம் ஏன் ஆய்வாளர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை..? என்ற கேள்விக்கு நியாயமான பதில் தேவை. ஆய்வு மாநாடு ஆய்வு மாநாடாகவே இருக்க வேண்டும். ஏனெனில் ஏற்பாட்டுக்குழுவினரின் பெயர்ப்பட்டியலை கண்டவுடனேயே சில ஆய்வாளர்கள் இது நமக்கு சரிப்பட்டு வராது என்று கூறி தவிர்த்துக் கொள்வதை நான் அறிவேன். இலக்கிய ஆய்வு மாநாடுகள் அப்பொருளிலேயே நடைபெற்றால் தான் நோக்கம் நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

பேராசிரியர் நுஃமானுக்கு தகுந்த கௌரவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்

அமர்வொன்றில் பேராசிரியர் துரை மனோகரன்

இன்று இலங்கைத் தமிழ் அறிஞர்களில் முக்கியமானவராகக் கருதப் படுபவர் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான். இவர் பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர். இன்றும் வருகை தரு பேராசிரியராக பட்டப் பின் படிப்புக்கு விரிவுரையாற்றுகிறார். இவரது இலக்கண நூலே க.பொ.த உயர்தரம் தொடக்கம் கலாநிதி பட்டம் வரை உபயோகிக்கப்பட்டு வருகிறது.

பேராசிரியர் சிவத்தம்பி கூட எம்.ஏ.நுஃமானையே தமிழறிஞர் என்ற வகையில், தன் வாரிசாக அடையாளப்படுத்தியிருந்தார். அப்படிப் பட்டவர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லையே.. எனப் பலரும் பேசிக் கொண்டனர். அவருக்குப் பல தனிப்பட்ட பிரச்சினைகள் இருந் திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அரசியல்வாதிகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம், அறிஞர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்பதே வருத்தத் துக்குரியது. தமிழ் ஆய்வு மாநாட்டையும், தமிழ் அறிஞர்களையும் அது இரண்டாம் பட்சமாக்குகிறது என்பதை ஏற்பாட்டாளர்கள் உணர வேண்டும். பேராசிரியர் நுஃமான் தனக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாக மட்டுமே தெரிவித்திருந்தார்.

தென் கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் ரமீஸ் அப்துல்லாஹ் ஒரு சிறப்பு ஆய்வாளர் என்பதை விட ஒரு இளம் ஆய்வாளர் என்பதே முக்கியம். அவர் ஏற்பாட்டுக் குழுவில் இடம்பெற்றிருந்தார். ஆனால். விமான டிக்கட் குளறுபடி காரணமாக அவரது பயணம் தடைப்பட்டது. ஏற்கனவே கையளித்திருந்த கடவுச் சீட்டை, அவர் மீளப் பெற்றுச் சென்றுள்ளார். மாநாட்டில் அவர் கலந்து கொள்ளாதது பற்றி பலரும் வருத்தப்பட்டனர். இவர்களைத் தவிர்த்து, எப்படி இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றி பேச முடியும்..?

1967 இல் மருதமுனையில் முதலாவது இஸ்லாமிய மாநாட்டை நடாத்திய ஹஸன் மௌலானாவை ஒரு அரங்கிற்கு தலைமை தாங்க சந்தர்ப்பம் வழங்கியிருக்க வேண்டும். அவரை கௌரவித்து உரிய இடம் வழங்கியிருக்க வேண்டும். ஏற்பாட்டாளர்கள் இதைச் செய்யவில்லை. இதைக் குறையாக சுட்டிக்காட்டினார்கள். இவரைக் கௌரவித்தால் மட்டும் போதாது. இவருக்கு மாநாட்டில் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு ஆய்வரங்கிற்கு இலங்கை சார்பாக தலைமை வகிக்க இவரை அழைத்திருக்க வேண்டும். ஏனெனில் இது அவருக்கு வழங்கப் பட்டிருக்க வேண்டிய நியாயமான கௌரவம்.

அதே போல ரமீஸ் அப்துல்லாவும் பிரச்சினைகளை மறந்து கலந்து கொண்டிருக்க வேண்டும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். ஏனெனில் ஏற்பாடு எக்கேடு கெட்டாலும் சரி. இஸ்லாமிய தமிழ் இலக்கியம் முக்கியமல்லவா ?

நூல் வெளியீட்டு விழாவில் எஸ்.எம்.ஹிதாயத்துல்லாஹ் தலைமை தாங்கினார். எம்.ஆர்.எம்.அப்துல் ரஹீம் எழுதிய ''இறைத் தூதர் முஹம்மது'' வரலாறு, கவிஞர் காரை மாழிறையன் எழுதிய ''நபிகள் நாயகம்'' காப்பியம், வண்ணக் களஞ்சிய புலவரின் இராஜநாயகம், மணிப்புலவர் மருதூர் மஜீதுவின் 'போருக்கு அப்பால்', (இலங்கை),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் தாசீம் ''கண் திறவாய்'' (இலங்கை) வீர மந்திரி 'இஸ்லாமிய சட்டவியல்', ஏ.எல்.எம். அப்துல் கபூர் ''நிதித் தேவைகளும் வட்டி யில்லாத் தீர்வுகளும்'' ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

இம் மாநாட்டில் ''ஆலிம்கள் அரங்கு'' காதர் முஹையித்தீன் கப்பித்தான் அரங்கில் இடம்பெற்றது. மலேஷிய தமிழ் மின்னூடகப் பிரிவின் தலைவர் உஸ்தான் ஜமால் அப்துல் ஹமீது தலைமை தாங்கினார். கோலாலம்பூரைச் சேர்ந்த மிஸ்பாஹுல் ஹுதா மதரசா ஆசிரியர், உஸ்தாத் கம்பம் பீர் முகம்மது பாக்கவி, மஜீத் இஸ்தியா இமாம், மௌலவி நாசிர் அலி, ஸ்தாப்பா ஜெயா மதரசா மௌலவி, சம்பை ஹிதாயத்து ல்லாஹ் அருசி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் இலங்கை ஆலிம்கள் கலந்து கொள்ளாமை பற்றியும் பலர் மனவிசனம் அடைந்தனர். இலங்கை யிலிருந்து பல மௌலவிகள் கலந்துகொண்ட போதும், அரங்கு பற்றி தமக்கு முன்கூட்டியே ஏற்பாட்டுக் குழு தெரிவிக்காமை பற்றி பல மௌலவிகள் குறை கூறினர்.

இம் மாநாட்டில் முக்கிய மற்றொரு நிகழ்வாக ''கவியரங்கம்'' குறிப்பிடப்பட வேண்டும். இக் கவியரங்கமே இலங்கைக்கு அதிகப் புகழை பெற்றுத்தந்தது.

இக் கவியரங்கிற்கு கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமை தாங்கினார். இவரைப் பற்றி குறிப்பிடத் தேவையில்லை. உலகம் அறிந்த சிறப்புக் கவிஞர். இந்த கவியரங்கிற்கு சிறப்பு விருந்தினராக, மலேசிய கூட்டரசு பிரதேச, புறநகர் மேம்பாட்டுத் துணையமைச்சர் டத்தோ மு. சரவணன் கலந்துகொண்டார். சரவணனின் உரை வேறாக ஆராயப்பட வேண்டியது. இவர் ஒரு கவிஞர். கவிதையாலேயே வாழ்த்துக் கூறி, தனது கவிப் புலமையை வெளிப்படுத்தினார். இது இலங்கை மேடைகளில் காசி ஆனந்தன், கா.பொ.ரத்தினம், முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் கவிஞர் அஸ்ரப் ஆகியோரை ஞாபக மூட்டுவதாக அமைந்தது. அவ்வளவு கவித்திறன் கொண்டவராகக் காணப்பட்டார். கவியரங்கிற்கு பொருத்தமான சிறப்பு விருந்தினர்.

இவரது உரையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மலேசியாவில் இந்தியத் தமிழர்கள் மட்டுமல்ல, இந்தியத் தமிழ், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து எமது உரிமையை பெற வேண்டும் என்று கூறிய இவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தமிழ், முஸ்லிம்களின் முக்கியத்துவத்தினை பலமுறை வலி யுறுத்தினார்.

இந்தியத் தமிழர்கள் என்னும்போது, அது இந்தியத் தமிழ், முஸ்லிம் களையும் சேர்த்தே குறிப்பிடுகிறது. 21 லட்ச தமிழர்களது பிரச்சினைக்கு போராடும்போது, அதில் இந்திய தமிழ் முஸ்லிம்களது பங்களிப்பு பற்றியே அவர் வலியுறுத்தினார்.

மலேசியா ஒரு முஸ்லிம் நாடு. எனவே இந்தியத் தமிழ் முஸ்லிம்கள், மலேசியா முஸ்லிம்களோடு ஒன்று சேர்ந்தால், இந்தியத் தமிழர்கள் தனித்துப் போய் விடுவர் என்ற மனப்பயம் இதற்குக் காரணமாயிருக்கலாம். இதனாலேயே இந்தியத் தமிழர்கள், இந்தியத் தமிழ் - முஸ்லிம்களின் ஒற்றுமை பற்றியே பலமுறை அழுத்தமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இனி கவியரங்கிற்குச் செல்வோம். "அண்ணல் நபியின் அழகிய பண்புகள்" என்ற தலைப்பில் இக் கவியரங்கம் நடைபெற்றது. இறையம்சம் என்ற தலைப்பில் மலேசியப் புலவர் ப.மு.அன்வர், பணிவு என்ற தலைப்பில் தமிழ் நாட்டுக் கவிஞர் தரை மாலிறையன், எளிமை என்ற தலைப்பில் இலங்கை கவிஞர் எம்.எம். நஜ்முல் ஹுசைன், நட்பு என்ற தலைப்பில் மலேசிய கவிஞர் மைதீன் சுல்தான், அன்பு என்ற தலைப்பில் சிங்கை கவிஞர் க.து.மு.இக்பால், வள்ளன்மை என்ற தலைப்பில் மலேசிய கவிஞர் கே.ஏ.ஹாஜா மைதீன், வீரம் என்ற தலைப்பில் தமிழ் நாடு கவிஞர் ஏம்பல் தஜம்முல் முகம்மது, பொறுமை என்ற தலைப்பில் இலங்கை கவிஞர் பொத்துவில் முகம்மது அஸ்மின், அருள் என்ற தலைப்பில் மலேசிய கவிஞர் செ.சீனிநைனா முகம்மதுவும், நபியின் பண்புகளை கவிதைகளால் எடுத்துரைத்தனர். இதில் இலங்கை கவிஞர்களான நஜ்முல் ஹுசைன், முகம்மது அஸ்மின் சிறப்பாக தமது கவிதைகளை சமர்ப்பித்தனர். பலரது பாராட்டுக்களையும் பெற்றனர். கவிஞர்களுக்கான தெரிவு, மலேசிய குழுவினரால் நடத்தப்பட்டதாக பத்திரிகை விமர்சனங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

பத்திரிகை விமர்சனங்கள் என்கின்ற போது, சில விடயங்களை குறிப்பிட்டாக வேண்டும். ஒரு பத்திரிகை, ஹஜ் ஊழலை விசாரிக்க கமிட்டி போட்டது போல, மலேசிய உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் ஊழல்களை விசாரிக்க கமிட்டி நியமிக்கப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஒரு கருத்தை வெளியிட்டிருந்தது. மற்றொரு பத்திரிகையில், நான் ஸ்டார் ராசிக்குக்கு நடந்த சம்பவத்தைக் குறிப்பிட்டது போல, வேறு இரு வருக்கு நடந்த சம்பவங்களை குறிப்பிட்டிருந்ததோடு, இதில் ஒருவருக்கு போலி விமான டிக்கட் வழங்கப்பட்டதாகவும் சுட்டிக் காட்டியிருந்தது.

இம் மாநாட்டின் சிறப்பம்சமாக இரு நூல்கள் வெளியிடப்பட்டன. ஒன்று, ஆய்வுகள் உள்ளடங்கிய ஆய்வு நூல், மற்றது மாநாட்டு மலர். ஆய்வரங்கில் இடம்பெற்ற ஆய்வு கட்டுரைகளை கொண்ட நூலாக ஆய்வு நூல் அமைந்ததோடு, மாநாட்டு மலர் பிரதமரின் வாழ்த்து செய்தியுடன், மலேசிய, தமிழக மற்றும் இலங்கை முக்கியஸ்தர்களின் வாழ்த்துச் செய்திகளைத் தாங்கியதாக அமைந்திருந்தது. மலரில் வெளியான ஒரு கட்டுரையை தமிழ் நாடு, கோட்டாறு அகமது கபீர் எழுதியிருந்தார். ''மலையாளக் கரையும் மலாயா வரையும்'' என்பதே இக்கட்டுரை. இதில் சில வரலாற்று சிறப்புமிக்கத் தகவல்கள் காணப்படுகின்றன.

மலேசிய வரலாறு கி.பி.1400 ஆம் ஆண்டிலிருந்துதான் தொடங் குகிறது. அதிலும் கிழக்கு ஜாவா வட்டாரத்தின் (சாவகம்) 'பலேம்பாங்' பகுதியில், அங்குள்ள அரண்மனையில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து, அதன் இளவரசர்களில் ஒருவன் இங்குள்ள மலாக்கா வட்டாரத்துக்கு ஓடி வந்து, தனக்கென ஒரு சூழலை அமைத்துக் கொண்டதாக அந்த வரலாறு தொடங்கு கின்றது.

அரபிகளும், சீனர்களும் நடத்திய வர்த்தக பரிமாற்றங்களுக்கு கடாரக்கரையான மலேசியாவே கைகொடுத்தது. இந்தப் பயணப் பாதையில் தமிழகம் தொட்டு, கடாரம் வரையுள்ள வங்கக் கடல் கி.பி.1500 வரை தமிழர்களின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளது. குறிப்பாக கி.பி.800 முதல் கி.பி.1500 வரையுள்ள காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம்கள் வசமே இவ் வர்த்தகம் இருந்துள்ளது. இதன் மூலம் கடைய நல்லூர், தென்காசி, கோட்டாறு, தக்கலை, திருவிதாங்கோட்டு பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் மலேசியா வர ஆரம்பித்தனர்.

ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை பரவிவந்த சோழராட்சி தமிழகத்தின் பொற்காலமாகும். மாமன்னன் இராச ராச சோழனும், மகன் இராசேந்திரனும், கலிங்கத்துப் பரணி பாடும் குலோத் துங்கனும் அரபுக் கடல் தொட்டு இந்தோனேசிய தென் சீனக் கடல் வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது ஆதிக்கத்தை விஸ்தரித்திருந்தனர். குலோத்துங்க சோழன், திருவனந்தபுரம், சாந்தனூர் சாலை, கோட்டாறு பகுதிகளை கைப்பற்றிய கையோடு, கடற்கரையில் படை நிறுத்திச் சென்றான். இதனால், கடற் கொள்ளையரால் அல்லல்பட்டிருந்த தமிழக வாணிகம் மீண்டும் தலைதூக்கியது. கோட்டாறும். கோலாலம்பூர் கடாரமும் ஒரே கொடியின் கீழ் ஆளப்பட்டது.

இவ்வாறு தனது ஆய்வுக் கட்டுரையில் எழுதிச் செல்லும் அகமது கபீர், கோட்டாறுக்கும், மலேசியா, சிங்கப்புர் நாடுகளுக் குமான தொடர்பை விவரிக்கிறார்.

மலேசியாவுக்கு முஸ்லிம்கள் வந்து குடியேறிய பின்னரேயே கல்லையும், மரத்தையும் வழிபட்டிருந்த ஒரு சனக்கூட்டம், இஸ்லாத்தைத் தழுவியதாக அவர் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

கிராமத்து கல்யாண வீடு போல நடைபெற்ற காயல்பட்டண விருந்தோம்பல்

புவியியல் மாற்றங்களால் குமரிதுறைமுகத்தில் மணல் திட்டுகள் ஏற்பட்டு மணக்குடி ஊராகிவிட்டது. இதனால் கோட்டாற்றின் கடல் வழி முகம் அடைபட்டுப்போனது எனவும் கூறப்படுகிறது. அதுபோல் முதலாம் உலகப்போருக்கு பின் இலங்கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரித்தானிய மலாய் ரெஜிமேண்ட் படைப்பிரிவினருக்கு தொழுகை நடத்து வதற்காக கோட்டாற்றின் சூராவீட்டு ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் நியமனம் பெற்றிருந்தார். இவரது மலேசிய சீடர் மற்றும் நண்பர்களின் தொடர்புகளினால் பல கோட்டாறு வாசிகள் மலேசியாவில் குடியேறினார் எனவும் கூறப்படுகிறது.

இந்த வரலாற்றை இங்கே குறிப்பிடுவதற்கு காரணம் உள்ளது. ஏனெனில் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் இரண்டு தவறுகளை செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வரலாற்று ஆவண கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் வரலாற்று நூல்களையாவது காட்சிப் படுத்தியிருக்கலாம். எனினும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லை. மலேசியாவில் நடத்தப்படும் முதல் இஸ்லாமிய தமிழ் மாநாடு என்ற வகையில் இதனை செய்திருக்க வேண்டும்.

காயல்பட்டண இஸ்லாமிய தமிழ் மாநாட்டில் இந்த வரலாற்று ஆவண கண்காட்சி முக்கிய இடம் வகித்தது. பழைய குர்ஆண் பிரதிகள், நாணயங்கள், பாவனை பொருட்கள், நூல்கள் எனப்பல வரலாற்று ஆவணங்களின் இருப்பையும் வரலாற்றினையும் இவை பறைசாற்றின.

2. மாநாட்டு தீர்மானங்கள் பிரேரிக்கப்படாமை ஒரு குறைபா டாகும். எந்த ஒரு மாநாட்டின் முடிவிலும் முக்கிய தீர்மானங்கள் முன்வைக்கப்பட வேண்டும். இவை நிறைவேற்றப்பட வேண்டும். மலேசிய மாநாட்டு குழு இதில் கவனம் செலுத்தவில்லை. அர சியல்வாதிகளை கௌரவப்படுத்துவதிலும் சால்வை போர்த்துவ திலும் இருந்த கரிசனை மாநாட்டு விடயங்களில் காட்டப்பட வில்லை. இது முதல் மாநாடு என்பதால் கவனத்தில் கொள்ளப்பட வில்லை என்றும் சொல்வதற்கில்லை. ஏனெனில் மாநாட்டு ஏற்பாட் டாளர்கள் பல மாநாடுகளில் பங்குபற்றி அனுபவம் பெற்றவர்கள்.

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவுத் முடிவுரையில் சில விடயங்களை பிரேரித்து இவற்றை மாநாட்டு தீர்மானமாக முன் மொழிவதாக தெரிவித்தார். அதற்குக்கூட மலேசிய ஏற்பாட்டளர்களிட மிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

ஆனால் காயல்பட்டண மாநாட்டில் தீர்மானங்களை நிறைவேற்று வதில் ஏற்பாட்டாளர்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர். உலக முஸ்லீம்களின் இன்னல்கள், இந்திய முஸ்லீம்களின் இன்னல்கள் ஆய்வுத்து றை, கல்வித்துறை, கப்பற்போக்குவரத்து எனப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அமைச்சர் வாசன் தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அறிவிக்காமல் கப்பல் சேவையை ஆரம்பித்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கப்பற் சேவை நிறுத்தப்பட வேண்டும் எனக்கோரி முதல்வர் ஜெயலலிதா அறிக்கை விட்டபோதும் இந்த மாநாட்டில் கப்பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை தொடர்ந்து நடாத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஆணித்தர மாக நிலைநிறுத்தப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

இதற்கு முக்கிய காரணமாக காயல்பட்டண வரலாற்றுடன் கப்பல் சேவை வகிக்கும் பங்கைக்குறிப்பிடலாம். அரேபியர் வருகை, இஸ்லாமிய மதம் பரப்பப்பட்டமை, உலகின் பல பாகங்களுக்கும் வணிகர்கள் சென்றமை, இஸ்லாத்தை பரப்பியமை போன்ற காரணிகளோடு அக்கால இளைஞர்கள் இலங்கை வந்து கொழும்பு சாகிரா கல்லூரியில் உயர் கல்வி கற்றமை ஆகிய பல காரணங்களை குறிப்பிடலாம். இது போலவே மலேசிய மாநாட்டு ஏற்பட்டாளர்களும் இவ்வாறான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கலாம்.

இவ்வகையில் மலேசிய இஸ்லாமிய தமிழ் மாநாட்டிற்கும் காயல் பட்டண இஸ்லாமிய தமிழ் மாநாட்டுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க பல வித்தியாசங்களை அடையாளப்படுத்தலாம்.

காயல்பட்டணத்தில் ஈரோடு தமிழன்பன் தலைமையில் நடந்த கவியரங்கில் 33 கவிஞர்கள் பங்குபற்றினர். இது மெகா கவியரங்கு. மருதூர் மஜீத், பாலமுனை பாருக், கிண்ணியா ஏ.எம்.எம்.அலி, கவிஞர் பௌஸ் மௌலவி ஆகியோர் பங்கு பற்றினர். இக்கவியரங்கை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க முடியாமல் மூன்றாவது நாளும் இழுபட்டது. ஆனால் மலேசியாவில் நம்மவர்களில் இருவரே பங்குபற்றினர்.

மலேசியா வரவேற்பு உபசரிப்பு உத்தியோகபூர்வமாக அமைந் திருந்தது. மொகமட் தனது குடும்பத்தவர்களுடன் மலர்ந்த முகத்துடன் வந்து சகலரையும் கவனிக்க பெரும்பாடுபட்டார். பல்கலைக்கழக ஹொஸ்டலில் சாப்பாடு. இது ஆரம்ப விழாவில் மெகா விருந்தாகவே இருந்தது. ஆனால் காயல்பட்டணத்தின் வரவேற்பு தொப்புள்கொடி உறவை பறை சாற்றுவதாக அமைந்தி ருந்தது. பெண்களும், ஆண்களும் குடும்பமாக ஒன்றிணைந்து சுற்றம் சூழ வரவேற்று தமது வீடுகளிலேயே பேராளர்களை தங்க வைத்தனர். ஒரு வகை சகோதர பாசத்துடனேயே விருந்தோம்பலும் நிகழ்ந்தது. வஜீஹா வனிதையர் கல்லூரியில் இளைஞர்கள் ஒன்றிணைந்து உணவு பரிமாறினர். ஒரு கிராம சூழலில் நடக்கும் கல்யாண வீடு போல என இதைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசிய மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் என்ற வகையில் அவரை முன்னிலைப்படுத்தி கூடவே கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மேடையேற்றி ஒரு வகையான அரசியல் கலாசாரத்தை அரங்கேற்றினர். ஆனால் காயல்பட்டணத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகத்தின் பொதுச்செயலாளர் பேராசிரியர் மு.சாய்பு மரைக்கார் துவக்க விழாவில், 'கவிஞர், இலக்கியவாதி, இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டை கொழும்பில் வெற்றிகரமாக நடத்திய ரவுப் ஹக்கீம்' என்றே விளித்தார். எனவே காயல்பட்டணத்தில் தமிழுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது எனக் கொள்ளலாம்.

நான் முதலில் ரவுப் ஹக்கீம்மைச் சந்தித்தது கண்டியில் நடைபெற்ற மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்களது 'நான் எனும் நீ' கவிதை நூல் வெளியீட்டு விழாவில். இந்த விழாவில் ரவுப் ஹக்கீம் ஒரு சிறந்த கவிஞனாக கவி மழை பொழிந்தார். கேட்க சந்தோஷமாக இருந்தது. அன்று மேடையிலிருந்து இதை அவதானித்த கலாநிதி துரை மனோகரன், உங்களுக்குள்ளே ஒரு கவிஞன் இருக்கிறான். அதை வெளியே கொண்டு வாருங்கள் என ஹக்கீமிடம் பல முறை கூறியுள்ளார். அதே போல நாம் செம்மொழி மாநாட்டுக்கு சென்றிருந்தபோது கோவை கொடிசியா வளாகத்தில் பல்கலைக்கழக ஆய்வாளர்களைக்கண்ட ரவுப் ஹக்கீம், ஆய்வு தலைப்பு களை விசாரித்ததுடன் தனது கருத்துக்களையும் கூறியதோடு தமிழ்ப் பற்றின் காரணமாகவே வருகை தந்துள்ளோம் என்றும் தமிழுக் கான இந்த மாநாட்டில் பங்குபற்ற எமக்கு கௌரவ அழைப்புகள் தேவையில்லை என்றும் உடல் புல்லரிக்க சொன்னபோது நாங்கள் பூரித்துப்போனோம். எனவே அவரை ஒரு இலக்கியவாதியாகவே கருதி தொடக்க விழா மேடைக்கு அமைச்சரை காயலில் அழைத்தார்கள். தொடக்க விழாவிலும் இலக்கியமே பேசினார் ரவுப் ஹக்கீம்.

மலேசியா விழாவில், 'நாம் இலங்கையில் வடகிழக்கில் நடைபெற்ற போரில் அரசியல் நடுவர்களாக நின்று இரு சமூகங்களுக்கும் உறவுப் பாலமாக செயற்பட்டோம்' எனக்கூறினார். தன்னுடன் ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி செயலாளர், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதி அமைச்சர்கள் பிரதேச சபை உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களையெல்லாம் படைதிரட்டி அழைத்து வந்திருந்தார். காயல்பட்டண மாநாட்டில் தனியே வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் பேசினார். காலம், பொருள், இடம் பார்த்து பேசுவதில் இவரை விட வல்லவர் யார்?

''நான் பிறந்த கண்டிப்பிரதேசத்தின் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றியே நான் பேச விரும்புகிறேன்.'' எனக் கூறிய அமைச்சர் ஹக்கீம் கசாவத்த ஆலிம் புலவர், அறிஞர் சித்திலெப்பை, அப்துல் காதிர் புலவர் பற்றியெல்லாம் தன்னுரையில் குறிப்பிட்டார்.

மலேசிய மாநாட்டு மேடையில் உரையாற்றிய ஏ.எச்.எம்.அஸ்வர் மகிந்த சிந்தனையில் தமிழுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் பற்றி பேசி னார். இலங்கையில் ஆட்சி மொழியில் ஒன்று தமிழ் என்றும் கற்கும் மொழிகளில் தமிழும் ஒன்று எனவும் குறிப்பிட்ட அவர், ஐ.நா சபையில் முதலாவதாக தமிழில் உரையாற்றியது எமது தலைவர் மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே என்று குறிப்பிட்டார். அப்போது மலேசிய தமிழ் முஸ்லிம்கள் மண்டபத்திலிருந்தவர்களிடம் அப்படியானால் அங்கு ஏன் சண்டையிடுகின்றனர்.? அவர்களுக்கு என்ன பிரச்சினை? என்று கேட்குமளவுக்கு இந்த உரை அமைந்திருந்தது.

ஆனால் காயல்பட்டணத்தில் இடம், காலம், பொருள் உணர்ந்து அரசியலை முற்றாக தவிர்த்திருந்தார்.

எது இலக்கிய மாநாடு, எது அரசியல் கலந்த இலக்கிய மாநாடு என்பதை வாசகர்கள் உணர்ந்து கொள்வதற்காகவே இதை இங்கே குறிப்பிடுகிறேன்.

அடுத்ததாக தமிழ்நாடு பேராசிரியர் முனைவர் பர்வீன் சுல்தானா பற்றியும் கருத்தரங்கு பற்றியும் குறிப்பிட வேண்டும்.

இஸ்லாம் காட்டும் இலக்கிய வாழ்வும் எதிர்நோக்கும் சவால்க ளும் என்ற தலைப்பில் மலாயப்பல்கலைக்கழக பெர்டானா சிஸ்வா மண்டபத் தில் ஜே.எம்.ஹுசைன் அரங்கில் இக்கருத்தரங்கு நடை பெற்றது. சிறப்பு விருந்தினராக டத்தோஸ்ரீ ச.சாமிவேலு கலந்துகொண்டார். முகம்மது இஸ்மாயில் ஹரீஃப் தலைமை தாங்கினார்.

பொது இடங்களில் தமிழ் நாட்டு தொலைக்காட்சியில் இஸ்லாமிய பெண்ணாக தன்னை அடையாளம் காட்டாத பர்வீன் சுல்தானா, இஸ்லாமிய பெண்ணாக காட்சியளித்ததோடு இஸ்லாமிய பெண்கள் பற்றி இக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்கிலும் காயல்பட்டண கருத்தரங்கிலும் முன்வைத்த பல கருத்துகள் ஒன்றுக்கொன்று முரணானவையாகவும் விவாதத்திற்குரியவையாகவும் அமைந்திருந்தன என்று எனது நண்பர்கள் சிலர் கூறத் தொடங்கினர். நான் இஸ்லாமைப்பற்றி தெரிந்திருந்தாலும் தெரியாதவை பல. எனது நண்பர்கள் பர்வினா சுல்தானா இஸ்லாமிய சூரத் பேணுவதில்லை என குறை கூறியபோது சூரத் (தோற்றம்) என்றால் என்ன என்று அப்போது எனக்குப் புரியவில்லை.

ஆனால் மலேசிய உரையில் பர்வினா இஸ்லாமிய மரபு ரீதியான கருத்துகளை மறுதலித்துப் பேசினார் என்பது மட்டும் புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

சர்ச்சையைக் கிளப்பிய பர்வின் சுல்தானாவின் ஆவேச உரை!

பர்வின் சுல்தானாவின் உரையின்போது அவர் தெரிவித்த இரண்டு விடயங்கள் பற்றி அன்றைய இரவு உணவு வேளையின் போது பலரும் விவாதித்து கலந்துரையாடினர்.

நபிகள் நாயகத்திற்கும் அவரது துனைவியார் ஆயிஷாவுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் அதன்போது ஆயிஷா வின் தகப்பனாரான அபுபக்கர் சித்திக் (ரலி) இதில் தலையிட்டதாகவும் அப்போது நபிகள் இது எனக்கும் என் மனைவிக்கும் இடையிலான பிரச்சினை எனக்கூறியதாகவும் பர்வின் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை என்று பலரும் கருத்து தெரிவித்தனர்.

இது பற்றி நான் எதுவும் அறிந்திருக்க வில்லை என்பதால் என்னோடு இருந்தவர்கள் உண்மை தன்மையை எனக்கு தெளிவு படுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூபக்கர் நபிகள் நாயகத்தின் உண்மையான தோழன். முதல் கலிபாவும் இவரே. தனது சொத்துக்களை எல்லாமே இஸ்லாத்திற் காக தியாகம் செய்தவர். இப்படிப்பட்ட தோழனுக்கு நாயகம் இவ்வாறு காரமாக ஒரு பதிலை கூறியிருப்பார்களா? இதற்கு ஆதாரம் உண்டா? ஏனெனில் இதற்கு ஆதார பூர்வமான ஹதீஸ் எதுவும் கிடையாது என்று அவர்கள் கூறினார்கள். பர்வின் சுல்தானின் சொற்பொழிவை கணக் கெடுக்கக் கூடாது என்றனர். அத்தோடு ஆணாதிக்கவாதம் பற்றி பர்வின் சுல்தானின் கருத்துக்களை பார்வையாளர்கள் ஏற்கவில்லை என்பதையும் புரிந்துகொண்டேன். ஆணாதிக்கவாதம் பற்றிய தப்பான புரிதலுக்கு பர்வின் இட்டுச்செல்கிறார் என்பது பெரும்பாலோரின் கருத்தாக இருந்தது.

ஆனால் பர்வின் சுல்தான் தன் வாதத்துக்கு ஒரு உதாரணத்தையும் கூறியிருந்தார். பர்வினாவுக்கு முன்னர் உரையாற்றியவர் சமையலில் சிறந்தவர் ஆண்களே என்றும் பெரிய ஹோட்டல்களில் தலைமை சமையல்காரார்களாக ஆண்களே உள்ளனர் என்றும் கூறி, பெண்களை கிண்டலடித்தார். விருந்தினர்கள் விரும்பி ருசித்து உண்ணுவது ஆண்களின் சமையலைத்தான் என்றும் கூறினார். பெண்களின் சமையல் அந்த அளவுக்கு சிறப்பாக அமைவதில்லை என்பது அவர் வெளியிட்ட கருத்து,

பெண்ணியவாதியான பர்வினாவுக்கு இது எரிச்சலை ஏற்படுத்தி விட்டது. வெகுண்டெழுந்தார். ஆஹா, ஆண்களின் சமையல் சிறப் பானதாமே! இருக்கும், ஏனெனில் அவர்கள் காசுக்காக, சம்பாதிப்பதற் காகத்தானே சமைக்கிறார்கள்! பெண்கள் அப்படியா? அவர்கள் சம்பளம் எதிர்ப்பார்க்காமல் தன் கணவருக்காகவும், குடும்பத்துக்காகவும் ஆரோக்கிய சமையல் செய்கிறார்கள். அந்தச் சமையலில் உப்பும், மசாலாவும், காரமும் மட்டுமன்றி அன்பையும் பாசத்தையும் சேர்த்தே சமைக்கிறார்கள். இந்தச் சமையலில் விரவிக்கிடக்கும் அன்பையும் பாசத்தையும் ஆண்கள் புரிந்து கொள்வதில்லை. சமையல் என்பது வெறுமனே நாக்குக்கு தீனி போடுவது மட்டும்தானா? பணத்துக்கும் பாசத்துக்கும் இடையில் உள்ள தெளிவான வேறுபாட்டை இந்த ஆண்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று போட்டார் ஒரு போடு!

பர்வினாவின் இந்த உரை சபையிலிருந்த பெண்களுக்கு உப்பும் காரமுமான விருந்தாக அமைந்ததில் வியப்பிருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்வின் சுல்தான் தனது உரையின்போது 'தற்பெருமை'யை விட்டுவிடவில்லை. நான் உரையாற்ற வந்தால் என்னை மதிய போசனத்தின் பின்னரே உரையாற்ற அழைக்கிறார்கள். உணவின் பின் நித்திரையில் இருப்போரை எழுப்புவதாக எனது உரை அமைவதே இதற்கு காரணம் என்றார். இன்றைய தினத்தை எடுத்துக்கொண்டாலும் இந்த இரவிலும் தாமதித்தே என்னை உரையாற்ற அழைத்துள்ளனர் என்று தனது பேச்சாற்றலை தானே புகழ்ந்து கொண்டார்.

பர்வின் சுல்தான் காயல்பட்டணத்தில் உரையாற்ற வந்தபோதும் டி.வியில் வருபவராக இல்லாமல் ஒரு இஸ்லாமிய பெண்ணாக தோற்றமளித்தார். இங்கு அவருக்கு கொடுக்கப்பட்ட தலைப்பு முஸ்லீம் பெண்கள் முன்னேற்ற பாதையில் செல்கிறார்களா, இல்லையா? என்பதாகும்.

தனது உரையில் தீண்டாமை பற்றியும் தீண்டப்படாதவர்கள் பற்றியும் காந்தீயம் பற்றியும் பேசினார். முன்னேற்றப்பாதையின் புதிய வழி எது என்பதை இனங்காணவேண்டும் என்றார்.

முஸ்லீம் பெண்களின் கல்வி உரிமை பற்றியும் எல்லா மார்க்கங்களும் அதையே வலியுறுத்துகின்றன எனவும் குறிப்பிட்ட அவர் 1400 வருடங்களுக்கு முன்னரேயே இஸ்லாத்தில் ஆண், பெண்களுக்காக கல்வி கடமையாக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டினார். ஆனால் இன்றைய நிலை என்ன? என்று கேள்வி எழுப்பியவர், பால்ய திருமணம் காயல்பட்டணத்திலேயே அதிகம் என்றார்.

கல்லூரிக்கு வரும் பெண்களுக்கு பெற்றோர் திருமணம் செய்விப்பதால் அப்பெண்கள் கல்லூரிகளில் இருந்து விலகிவிடுகிறார்கள். இதனால் அவர்களின் கல்விக்காக செலவிட்ட பணம் பாழாகிறது. அளிக்கப்பட்ட கல்வியும் வீணாகிறது. இதனால் பெண்களை சேர்த் துக்கொள்ள கல்லூரிகள் தயக்கம் காட்டும் நிலை உருவாகியுள்ளது. இதற்காக யாரை நொந்து கொள்வது? எனவே இவை தொடர்பாக பெண்கள் கேள்வி எழுப்ப வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் பெண்களின் பாதுகாப்பு அரணாக கல்வியே விளங்குகிறது. இங்கே பெண்கள் அரங்குகளில் பெண்கள் பேச, பெண்கள் அதை கேட்கும் நிலை காணப்படுகிறது. இதனால் எந்தப்பிரயோசனமும் இல்லை. பெண்கள் பேசுவதை ஆண்கள் செவிமடுத்தால் தானே உரியவர்களுக்கு போய்ச்சேரும் என்று தனது உரையில் குறிப்பிட்டார் பர்வின் சுல்தானா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியாவைப் போலன்றி அந்த கூட்டத்துக்கு ஆண் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பதால் இப்படி காரமாக அவர் உரை அமைந் திருந்தது.

பார்வின் சுல்தானா

பெண்கள் தமது உரிமைகளை பெற அவர்களே குரலை உயர்த்தி கதைக்க வேண்டும். எனவும் பர்தா அணிவது பெண் களின் உரிமையுடனும் சுயமரியாதையுடனும் தொடர்புபட்டது எனவும் அவர் சொன்னார்.

இந்தியாவில் ஒரு காலத்தில் பெண்கள் தம் உடலை மறைக்க முடியாத வகையில் சட்டங்கள் இருந்தன என்ற தகவலையும் தந்ததோடு பெண்களுக்கு மார்க்கக் கல்வியும், உலகக் கல்வியும் முக்கியம் என்றார்.

மலேசிய மாநாட்டுக்கு முந்தியநாள் மாலை நாங்கள் தங்கியிருந்த கொலேஜ் ஹவுசில் மலேசிய மத்ராஸாக்களின் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. போதை வஸ்துவினால் இளைஞர்கள் பாதிக்கப்படுவதையும், பின்னர் திருந்தி ஐந்து நேர தொழுகை கடமையில் ஈடுபடுவதையும் சிறப்பாக எடுத்துக்காட்டினார். இங்கு பாடல் காட்சி கள் பலவும் இடம்பெற்றன. எமது இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அன்பர்களும் தமது திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் குறிப்பிட்டு கூறக்கூடிய அம்சமாக காத்தான்குடியைச் சேர்ந்த கே.எல். கமர்தீனின் பாடல் அமைந்திருந்தது.

காத்தான்குடியைச்சேர்ந்த கண் தெரியாத கவிஞர் ஒருவர் சிறப்பாக கவிதை எழுதுவதாகவும் அக்கவிதைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்து வதற்காக அவற்றை பாடி வருவதாகவும் தெரிவித்து கமர்தீன் பாடிய பாடல் சபையோரை மிகவும் கவர்ந்தது. இதே கமர்தீன் காயல்பட்டண இஸ்லாமிய மாநாடு பற்றியும் ஒரு சிறந்த பாடலை காயப்பட்டண மேடையிலும் பாடினார்.

எமது வானொலி அறிவிப்பாளர்கள் பற்றியும் குறிப்பிட வேண்டும். இவர்கள் பிறை எப்.எம் சேவைக்கு நிகழ்ச்சிகளை நேரடியாக நேர்முக வர்ணணை செய்தனர். இந்த பாடல்களையும் ஒலிப்பதிவு செய்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயல்பட்டண மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்ச்சி ஆரம்பத்திலும் இவ்வாறான இறை பாடல்கள் இடம்பெற்றன. இஸ்லாமியருக்கே உரிய தனிப்பாணியில் இசையின்றி இப்பாடல்கள் பாடப்பட்டன.

இதில் வடக்குக்கோட்டையார் வ.மு.செய்யது அஹமது, ஆழ்வை எம்.ஏ. உஸ்மான் குழுவினர், நெல்லை அபூபக்கர் குழுவினர், சங்க நாத செம்மல் ஏ.ஆர்.சேர் முஹம்மத் அரங்கில் நடைபெற்ற இஸ்லாமிய பாடல் அரங்கில் முகவை எஸ்.ஏ.சீனி முகம்மது குழுவினர், மகளிர் அரங்கல் சர்மிளாபானு, நிறைவு விழாவில் தேரிழந்தூர் தாஜுதீன், கலைமாமணி இகுல் முஹம்மது ஆகியோரின் பாடல்கள் சிறப்புற அமைந்தன.

காயல்பட்டண இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் மற்றொரு சிறப்பு அம்சமாக அதிக அளவில் தமிழர்கள் (இஸ்லாமியர் அல்லாதோர்) கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியமையை குறிப்பிட வேண்டும். இவர்களுள் பலர் இஸ்லாமியரை விட அதிகம் இஸ்லாத்தை அறிந்தவர் களாக உரையாற்றினர்.

அதுபோலவே தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம்பெற்றது.

கவியரங்கம் ஈரோடு தமிழன்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் சென்னை சொர்ண பாரதி, கூடலூர் துரை முனுசாமி, இளையான்குடி மு.சண்முகம் ஆகியோரும் ஆய்வரங்க துவக்க வாழ்த்துரையை இலக்கிய செம்மல் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் குமரி அனந்தன், பட்டி மன்றத்தில் சிவகங்கை அரச கலைக்கல்லூரி பேராசிரியர் சுபாஷ் சந்திரபோஸ் சென்னை புதுக்கல்லூரி பேராசிரியர் லிவிங்ஸ்டன், நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றிய தமிழக இந்திய அற நிலையத் துறை மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன், வாழ்த்துரை வழங்கிய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஆர்.செல்வராஜ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கருத்தரங்கில் முத்தமிழ்க்காவலன் கி.ஆ.பே.விஸ்வநாதம் அரங்கில் தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார் தலைமை தாங்க ம.தி.மு.க கொள்கை விளக்க அணிச்செயலாளர் நாவுக்கரசர் நாஞ்சில் சம்பத் 'இனிய வாழ்வுக்கு இஸ்லாமிய நெறிகள்' என்ற தலைப்பில் சகோதரத்துவம் பற்றி இனிக்க இனிக்க உரையாற்றினர். முனைவர் ராஜகோபால் சமத்துவம் பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாற்றினார். அதுபோல் இலங்கையிலிருந்து ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்த கலாநிதி துரை மனோகரன், ஓர் ஆய்வரங்கிற்கு தலைமை தாங்கினார். அதுபோல் திருநெல்வேலி முனைவர் க.அழகேசன், முனைவர் அறிவு நம்பி, முனைவர் நா.இளங்கோ ஆகியோரும் ஆய்வரங் குகளுக்கு தலைமை தாங்கினர்.

இவ்வகையில் காயலில் சகோதரத்துவம் சிறப்பாக பேணப்பட்ட துடன், இஸ்லாமியரல்லாதோர் இஸ்லாமியரைப்பற்றி உரையாற்றுவ தற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இதனை விட சிறந்த முன்னெடுத்துக் காட்டு வேறு ஏதேனும் இருக்க முடியுமா? இலங்கையிலும் இலக்கிய துறையிலும் ஏனைய துறைகளிலும் இந்த ஒற்றுமை பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

காயல்பட்டணத்துக்கு காயல் என்ற பெயர் ஏன் வந்தது?

மலேசியா மாநாட்டையும், காயல்பட்டண மாநாட்டையும் மாநாட்டு மலர்கள் வலிமைப்படுத்தின. மலேசிய மலரில் இலங்கையர் பலரது கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. ஆனால் காயல்பட்டண மாநாட்டில் காயல்பட்டண சிறப்புப் பற்றியே எழுதப்பட்டிருந்தது. இரண்டு மலரிலும் ரவுப் ஹக்கீமின் வாழ்த்து செய்திகள் காணப்பட்டன. மலேசிய மலரில் மு.கருணாநிதி இடம் பிடித்திருந்தார். காயல்பட்டண மாநாட்டு மலரில் ஜெயலலிதாவின் படத்துடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதனின் வாழ்த்துச் செய்தி காணப்பட்டது. அ.தி.மு.க. காரர்களின் காலில் விழும் கலாசாரத்தின் பிரதிபலிப்பாக இதை எடுத்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயல்பட்டணம் அமைந்துள்ள சட்டமன்ற தொகுதி திருச்செந்தூர். லோக்சபா அதாவது பாராளுமன்ற தொகுதி தூத்துக்குடி. பாராளுமன்ற உறுப்பினராக இருப்பவர் எஸ். ஆர்.ஜெயதுரை. திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருப்பவர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். இவர்களது வாழ்த்து செய்திகள் காணப்பட்டன.

இந்த மலரின் மலர்க்குழு தலைவர் காயல் மகபுர் தமது செய்தியில், 1978ம் ஆண்டு ஜனவரி 13, 14, 15 தினங்களில் காயல்பட்டணத்தில் அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மூன்றாம் மாநாடு நடைபெற்றதன் பலனாக இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சித்துறை தொடங்க தமிழக அரசு நிதி ஒதுக்கியதோடு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறை தொடங்கப்பட்டது என்று குறிப்பிடுகின்றார். இந்த 15வது மாநாட்டின் பின் உலகில் புத்தெழுச்சியும், புதிய மறு மலர்ச்சியும் உருவாகும். அழகு தமிழ் பேசும் தமிழக முஸ்லீம்களை இழிவுபடுத்து கின்ற எழுத்தும், பேச்சும், காட்சிகளும், ஊடகங்களிலும், திரைப்படங் களிலும் இடம் பெறுகின்றன. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

செம்பி, பவுத்திர மாணிக்கம் என்ற இரு செல்விகள் நவீன காயல் பட்டணம் அமைவதற்கான இடங்களை அளித்ததாக பரம்பரை பரம்பரை யாக கூறப்படுகிறது. அந்த பாரம்பரிய பெருமையின் வழியில் வந்தவன் நான் எனவும் கூறுகிறார் இவர்.

இந்த மலரில் மார்கோபோலோ சீனாவுக்கு போகும் வழியில் 1288 இல் ஒருமுறையும், சீனாவிலிருந்து வரும் வழியில் கி.பி. 1293 இல் மறுமுறையும் காயல்பட்டணத்திற்கு வந்ததாக கூறப்படுகிறது. டெல்லி ஆதிக்கம் தெற்கே பரவி சோழ அரசு வீழ்ந்ததும் கடல் வலிமைமிக்க பாண்டியர்கள் மதுரையை தலை நகராகவும் காயல்பட்டணத்தை துறைமுக நகராகவும் கொண்டு ஆண்டுவந்த போது அரபு வர்த்தகர்களின் நாவாய்கள் கூட்டம் கூட்டமாக வந்துபோகும் புகழ்மிக்க துறைமுக நகராக காயல் விளங்கியதாக மார்கோபோலோ வர்ணித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

முத்தமிழ் காவலர் டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம் காயல்நகர் பற்றி கூறுகையில், ஐந்து கண்டங்களிலும் அறிஞர்கள் காண முடியாத பட்டிணம்; கள்ளுகடைகளே இல்லாத பட்டிணம்; காவல் துறை நிலையங்களே இல்லாதபட்டிணம்; திரைப்பட கொட்டடைகை ஒன்று கூட இல்லாத நகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதோடு சாதிவேற்றுமை இல்லாத நகரம், தெருவெல்லாம் கோயில்கள்(பள்ளிகள்), வீதிதோறும் வேத பாடசாலைகள் (மத்ரஸாக்கள்), செத்தும் கொடை கொடுத்த வள்ளலான சீதக்காதி மரைக்கார் பிறந்து வளர்ந்த பட்டணம் என்கிறார். இதுபோல இறைவன் திருவருளால் தமிழ் நாட்டிலுள்ள நகரங்கள் பல 'காயல்பட்டணமாக' மாறி காட்சியளிக்க வேண்டும் என்றும் சொல்கிறார்.

ஆம், நாம் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் முற்றிலுமாக இஸ்லாமியர் வாழும் நகர் என்று மட்டுமே காயலைப் பற்றி அறிந்திருந்தோம். ஆனால் தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டு காயலில் இறங்கிய போது பஸ்நிலையத்தில் கோயில் கும்பாபிஷேகம் கண்டோம். நாம் தங்கியிருந்த வீட்டின் முன் கிறிஸ்தவ கோயில் கண்டோம். எம்முடன் வந்த மார்க்கண்டு ரூபவதனன் ஒரு கிறிஸ்தவர். இந்த ஆலயம் சென்று ஞாயிறு பூசையில் கலந்துகொண்டார்.

இந்த இஸ்லாமிய மாநாட்டுக்கு சென்ற பெரும்பாலானோர் நான்கு கிலோமீட்டர் தூரத்தில் அமைந்திருக்கும் செந்தில் நாதன் கோவில் சென்று பார்வையிட்டனர். அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் கோவிலை கடல்அலை முத்தமிட்டுச் செல்கிறது. இக்கோயிலின் வடிவமைப்பினை பார்வையிட பலரும் சென்றனர். நானும், கலாநிதி துரை மனோகரனும் விசேட பூஜை செய்து வழிபட்டோம்.

தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூருக்கு பத்து நிமிடத்துக்கு ஒரு பஸ் புறப்பட்டுச் செல்கிறது. இது காயல்பட்டணம் ஊடாகவே செல்கிறது. இங்கு பனைவளம் சிறப்பாக உள்ளது. யாழ்ப்பாண சூழல் காணப்படுகிறது.

இந்த மாநாட்டுக்கு சென்ற பலர் திருநெல்வேலிக்கும் சென்றனர். அது போல குற்றாலத்தில் குளிக்கவும் செய்தனர். பல திரைப்படங்களில் பார்த்து ரசித்திருந்த குற்றால அருவியில் குளித்து சுகம் கண்டோம்.

இஸ்லாமிய தமிழ் இலக்கிய 15வது மாநாட்டில் வெளியிடப்பட்ட மலரில் முனைவர் ஆர்.எஸ். அப்துல் லத்தீப் எனும் வரலாற்று ஆய்வாளரது கட்டுரை பற்றி குறிப்பிட்டாக வேண்டும்.

சங்ககால பாண்டியர்களின் தலைநகரான கபாடபுரம் என்ற இடமே காயல்பட்டணமாகும். காயல்பட்டணத்தில் அரேபியர்களின் முதற் குடியேற்றம் கி.பி 633இல் நடைபெற்றிருக்கிறது. அதாவது இஸ்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுவதற்கு முன்னரேயே காயல்பட்டணத்தில் வாணிபத்திற்காக அரபு வர்த்தகர்கள் வந்து போயுள்ளனர். முகம்மது நபிகள் இஸ்லாம் மார்க்கத்தை பரப்புவதற்கு இந்தியாவுக்கு அனுப்பிய தூதுக்குழுவில் மக்காவையும் மதினாவையும் சேர்ந்த ஸஹாபாக்கள், கேரளாவில் கொடுங்கலூரில் ஒரு பள்ளியையும் காயல்பட்டணத்தில் ஒரு பள்ளியையும் கட்டியுள்ளனர். கேரளாவைச் சேர்ந்த மன்னர் சேர பெருமான், நபிகள் பெருமானாரின் வேண்டுதலையடுத்து சந்திரன் பிளவுண்டதாக ஒரு செய்தியைக் கேள்விப்பட்டு நபிகள் பெருமானாரை சந்திக்க மக்கா சென்றாராம். சந்திப்பின் பின்னர் இஸ்லாத்தைத் தழுவினாராம். தானே இஸ்லாத்தை கேரளாவில் பரப்ப ஸஹாபாக்களுடன் கேரளாவுக்கு திரும்பி வரும் போது ஓமான் நாட்டில் சுகவீனமுற்று காலமானாராம். மரணப் படுக்கையில் அவர் அத்தூதுக்குழுவிடம் ஒரு கடிதத்தை கொடுத்து கேரளாவை ஆளும் தன் மருமகனிடம் சேர்க்கும்படி கூறினாராம். அக் கடிதத்தினை கண்ட மருமகனே இப் பள்ளிவாசலை அமைக்க உதவி யுள்ளார்.

காயல்பட்டணத்தின் தாமிரபரணி நதியை பற்றி மார்க்கோபோலோ குறிப்பு எழுதியுள்ளார்.

காயல்பட்டணத்தில் அரேபியர்களின் இரண்டாவது குடியேற்றம் கி.பி 842ல் நிகழ்ந்துள்ளது. எகிப்திலுள்ள கெய்ரோ (காஹரா) விலிருந்து முஃதஸிலாக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்களில் சிலர் அபூபக்கர் சித்திக் அவர்களின் பரம்பரையில் தோன்றிய முஹம்மது கல்ஜீ தலைமை யின் கீழ் கப்பல் மார்க்கமாக காயல்பட்டணம் வந்து சேர்ந்தார்கள். இவர் களே இரண்டாவது பள்ளிவாசலான பெரிய ஜூம் ஆ பள்ளியை 843ல் அமைத்தார்கள். இப்பள்ளி மைய வாடியில் சுமார் 25,000 இறை நேசச் செல்வர்கள் அடங்கியுள்ளார்கள். இப்பரம்பரையினர் தொடர்ந்தும் அங்கேயே வாழ்ந்து வந்ததால் இது காஹிரா என்று அழைக்கப்பட்டு நாளடைவில் காயலாக மாறியது.

காயல்பட்டணத்தில் அரேபியர்களின் மூன்றாம் குடியேற்றம் கி.பி. 1284 இல் நடந்துள்ளது. சுந்தரபாண்டிய மன்னர் கி.பி. 1293 இல் இறந்த பின் சுல்தான் ஜமால்தீன் மதுரையில் ஆட்சி புரிந்தார். இப்னு பதூதா கி.பி 1348 இல் பத்தன் என்ற ஊருக்கு இலங்கை புத்தளத்திலிருந்து புறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு வந்துள்ளார். இந்த பத்தன் எனும் இடம் காயல்பட்டணத்திலேயே அமைந்துள்ளது எனக் கூறுகிறார்.

இதே போலவே, 'அரபு - தமிழ் உறவின் பாலம் காயல்பட்டணம்' என்ற கட்டுரையை ஹாபிஸ் எம்.கே. செய்யது அஹமது எழுதியுள்ளார்.

இதில் மாபர் கரையில் முஹம்மதிய அரபிகள் 9 ஆம் நூற்றாண்டில் குடியேறி கீழ் கடலோரக் கரைப் பகுதியிலும், இலங்கையிலும் குடியேறியதாக டாக்டர் கோல்ட்வெல் பாதிரியார் தமது திருநெல்வேலி சரித்திரம் நூலில் குறிப்பிட்டுள்ளார். அரபு வணிகர்களின் வழித்தோன்றல் களாகிய கலப்பு இன மக்கள், மேற்குக் கரையில் மாப்பிள்ளைகள் எனவும் கிழக்குக் கரையில் லெப்பைகள் எனவும் தமிழர்களால் துலுக்கர் எனவும் சோனகர் என்றும், அழைக்கப்படு கின்றனர். 'மரைக்கான்' 'மரக்கான்' என்பது இவர்களின் பட்டப் பெயர். மாலுமி அல்லது கப்பலோட்டி என்பது இதன் பொருள் என கோல்ட்வெல் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

காயல்பட்டண முஸ்லிம்களின் இலங்கைக் குடியேற்றம் பற்றி இதில் கூறப்பட்டுள்ளது. 875 இல் காயல்பட்டணத்தில் குடிபுகுந்த அரபிகள் தமிழர் களுடன் கலப்பு மணம் செய்து கொண்டனர். மூன்று தலைமுறைகளுக்குப் பின் கி.பி 1024இல் இலங்கை மேற்கு கரையிலுள்ள பேருவளையில் குடியேறினர். இதை இலங்கையில் முஸ்லீம்களின் குடியேற்றத்தின் ஆரம்பப் பருவம் என்று டாக்டர் டென்ஹாம், சேர்ப் ஸைமன் காசி செட்டி, சேர் பொன்னம்பலம் இராமநாதன், டாக்டர் புரோஹியர், சேர் அலேக்ஸாண்டர் ஜோன்ஸ்டன், சேர். ஜேம்ஸ் மேர்ஸன், ஏ.ஜி. ரனசிங்ஹ ஆகிய வரலாற்று ஆய்வாளர்களும் கல்விமான்களும் குறிப்பிட்டுள்ளனர்.

காயல்பட்டணம் சோனகர்களின் தந்தை நாடாக இன்றும் மதிக்கப் படுவதாக சேர்.ஸைமன் காசி செட்டியும், சேர் பொன்னம்பலம் இராம நாதனும் ரோயல் ஆசியா சஞ்சிகையில் எழுதியுள்ளனர்.

காயல்பட்டணத்தில் அராபியர்களின் அடுத்த குடியேற்றம் 1280 இல் எகிப்தில் இருந்து வந்தது.

இக்காலப் பகுதியில் வெள்ளை அடிமைக் குலத்தைச் சேர்ந்த மம்லூக் சுல்தான் கலாவுன் எகிப்து வேந்தனாக இருந்தான். இவனது கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து மக்கள் புரட்சி நிகழ்ந்தது. வழமைபோலவே கடுமை யான அடக்கு முறைகளைப் பயன்படுத்தி புரட்சியை ஒடுக்க அரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாஞ்சில் சம்பத்

முயன்றதால் ஒரு கூட்டம் எகிப்தை விட்டு வெளியேறியது. ஐந்து கப்பல் களில் புறப்பட்டுச் செல்கையில் ஒரு கப்பல் வழி தவறி காணாமற் போனது. அந்திலாந்து சமுத்திரத்தில் அது மூழ்கியிருக்கலாம் என ஏனையோர் கருதினர். இரண்டாவது கப்பல் இந்தியாவின் சூரத் பட்டினத் திலும், மூன்றாவது கப்பல் கோகாலூரிலும், நான்காவது கப்பல் அச்சின் என்ற ஊரிலும், ஐந்தாவது கப்பல் காயல்பட்டணத்திலும் கரை கண்டன என குறிப்பிட்டுள்ளார்.

மன்னர் சுந்தர பாண்டியன் இவர்களை வரவேற்று உபசரித் துள்ளார். இந்தக் குடியேற்றத்துக்கு தலைமை தாங்கிய செய்யிது ஜமாலுத்தீன், நபிகள் நாயத்தின் 21வது தலைமுறையை சேர்ந்தவர் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அக்காலத்தில் பாண்டிய நாட்டிற்கு வருடம் ஒன்றுக்கு 11,400 குதிரைகள் தேவைப்பட்டன குதிரை ஒன்று 2,200 ரூபா வீதம் அரபுநாடு களிலிருந்து தருவித்து கொடுக்க செய்யது ஜமால்த்தீன் மன்னருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு குதிரை வணிகத்தில் ஈடுபட்டார். அதன் பின் மன்னர் அவரை பாண்டிய நாட்டு தளபதியாக நியமித்தார். 1292 இல் மன்னர் சுந்தரபாண்டியன் இறந்ததும் செய்யது ஜமால்தீன் மன்னரானார். இது ஒரு அகதி மன்னரின் வரலாறு எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

அனாவசிய விஷயங்களை கவியரங்கில் சேர்த்துக் குழப்பலாமா?

சாஹிப் அப்பா தைகா

காயல்பட்டண மாநாட்டு மலரில் வெளியாகியுள்ள கட்டுரைகளில் கல் வெட்டுகளில் காயல்பட்டணம் என்ற கட்டுரை, கவன ஈர்ப்பைப் பெறும் கட்டுரைகளில் ஒன்று. இதை எஸ். இராமச்சந்திரன் எழுதியுள்ளார். இதில் பள்ளி வாசல்களின் சரித்திரங்கள் இடம்பெற்றுள்ளன. 'முஸ்லீம்களுக்கு எதிராக போர்த்துக்கேயர் தொடுத்த போர்' என்ற தலைப்பில் சென்னை புதுக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ஹ.மு. நந்தர்ஷா எழுதிய கட்டுரையும் இம்மலரில் இடம்பெற்றுள்ளது.

அல்லாமா பட்டம் பெற்ற தமிழ் அறிஞரும் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தினை ஆய்வு செய்து முதன் முதலில் முனைவர் பட்டம் பெற்றவரும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத் துறையின் தலைவராகவும் பணியாற்றிய கலாநிதி எம்.எம். உவைஸ்சின் ''சீறாப்புராணத்தை நிறைவுபடுத்திய பனி அகமது மரைக்கார்'' என்ற கட்டுரையும் இம்மலரில் இடம்பெற்றுள்ளது. இஸ்லாமிய இலக்கிய கழகத்தினை தோற்றுவித்த, காயல்பட்டணத்தில் அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மூன்றாம் மாநாட்டை முன்நின்று நடத்திய அறிஞர், புலவர், பேராசிரியர் சி.நெய்னார் முஹம்மதுவின் 'காசிம் திருப்புகழ்' என்ற கட்டுரையும், சென்னை புதுகல்லூரி பேராசிரியர் முரளி அரூபன் எழுதிய 'கண்ணருமது மசூதூம் முஹம்மது புலவரின் தமிழிலயக்கியத் தொண்டு' என்ற கட்டுரையும், திருமலர் எம்.எம். மீரான்பிள்ளை எழுதிய 'புலவர் நாயகம் காயல் செய்துனாவின் திருவாழ்வும் பெருவாக்கும்' என்ற கட்டுரையும் தக்கனம் பஷீர்ரின் 'வேதபுராணம் - ஓர் ஆய்வு' என்ற கட்டுரையும், சன்மார்க்க பணி செய்த சங்கைக்குரிய உலமாக்கள் 50 பேருடைய புகைப்படங்கள், காயல்பட்டண பள்ளிவாசல்களின் புகைப் படங்கள், பள்ளிவாசல்கள் பற்றிய வரலாற்று கட்டுரைகள், வரலாற்றில் ஒரு வைர நிகழ்வு 'இலங்கை-யாழ் மண்ணில்' என்ற மானாமக்கீன் எழுதிய கட்டுரையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர பல் வேறு நிகழ்வுகளை பதிவு செய்யும் ஒரு முழுமையான மலராக இம்மலர் அமைந்திருப்பது மாநாட்டிற்கு வளம் சேர்ப்பதாக இருக்கிறது என்பதே பலரது கருத்தாகும்.

மானா மக்கீனின் 'வரலாற்றில் ஒரு வைர நிகழ்வு - இலங்கை, யாழ் மண்ணில்' என்ற கட்டுரையை கொஞ்சம் பார்ப்போம். 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டில் தோன்றியதும், புத்தகுருமார்களால் பாடபட்டதுமான தூது பிரபந்தங்களாகிய 'கிரா சந்தேச' (கிளிவிடுதூது) மற்றும் 'ராஜாளிய', 'திசா சந்தேசய' நூல்கள் காயல்பட்டணத்திலிருந்து வந்த முஸ்லிம்களின் கடல் ஆதிக்கம் மற்றும் அவர்களது வர்த்தகம் பற்றியும் கூறுகின்றன என குறிப்பிட்டுள்ளார்.

காயல் மக்கள் தங்கியிருந்த 'சோனகர் கிட்டங்கி' எனப்பட்ட இடத் தினை 1560களில் போர்த்துக்கேயர் சூறையாடினர். பின் 1591 இல் அவர்கள் கட்டியிருந்த பண்டசாலையையும் தமதாக்கினர். இதுபற்றி யாழ்ப்பாண வைபவ மாலையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த டச்சுக்காரர்களும் முஸ்லீம்கள் பட்டினப் பகுதிகளில் வசிப்பதற்கு அனுமதிக்கவில்லை. சில ஊர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட அனுமதியின்றி பிரவேசிக்க முடியாதிருந்தது. பல காயல் வாசிகள் தமது தொழில், செல்வம் அனைத்தையும் இழந்து குடாநாடெங்கும் தறிகெட்டோடி பல்வேறு இடங்களில் புதுக்குடியேற்றம் கண்டனர். இதில் முக்கியமாகப் பாதிப்புற்றது இரண்டாவது பெரிய குடியிருப்பான மிருசுவில் (குட்டி காயல்பட்டி னம்). இது உசைன்கிராமம் என அழைக்கப்பட்டது. இங்குள்ள ஒரு இடம் 'சோனகன்புலவு' என்று அழைக்கப்படுகிறது. இதைத் தொடர்ந்தே முஸ்லிம்கள் நல்லூரில் குடியேறினர். நல்லூரில் அவர்கள் வாழ்ந்த இடம் 'சோனகத் தோப்பு' என வழங்கப்படுகிறது. இதுபற்றி 'யாழ் முஸ்லீம்களும் வரலாறும் பண்பாடும்' என்ற நூலில் குறிப்புகள் உள்ளன. யாழ்நகரில் காயல்பட்டண நகைக் கடைகளுக்கு ஒரு பெயரைப் பெற்றுக் கொடுத்த பெருமை ஏ.கே.எஸ்.மகுதூம் முஹம்மதுவை சாரும்! அவரது பெரிய தந்தையே புலவர் முஹம்மது மொஹிதீன். இது போலவே எல்.கே.எஸ்.கடையாகும். இது எல்.கே. லெப்பைதம்பியுடையது. இவரே காயல்பட்டண கல்வித்தந்தை எனப் போற்றப்படுபவர். எல்.கே.சேகுனா லெப்பை பிரதர்ஸ் என்பதே இதன் விரிவாக்கம். மொத்தம் ஏழு சகோதரர்கள். யாழ் கன்னாதிட்டியில் இவர்களது நகைக்கடை அமைந்திருந்தது. கீரிமலை கேணியை புனர்நிர்மாணம் செய்தவர் இவரே. வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரர் கோவிலுக்கு நூல் நிலைய மாடிக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்து உபகரணங்களையும் வழங்கியவர். இக்குடும்பத்தினரே எல்.கே.மேல் நிலைப் பள்ளிக்கான கட்டடத்தை அமைத்துக் கொடுத்தார்கள். அது போல எல்.கே.மெட்ரிகுலேஷன் பள்ளி அமைப்பை ஆரம்பித்து ஆங்கில பள்ளியையும் நடத்தினார்கள்.

யாழ் மண்ணில் எஸ்.டி.அப்துர் ரஜ்ஜாக் அன்கோ கன்னா திட்டியில் இயங்கியது என்ற தகவலையும் இக்கட்டுரையில் மானா தந்துள்ளார்.

இக்காயல்பட்டண விழாக்குழுத்தலைவர் காயல் எஸ்.இ.அமானுல்லாஹ் தமது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கும் ஒரு சம்பவம் மனோகரமானது.

1978 ஆம் ஆண்டு ஜனவரி 13, 14, 15 தினங்களில் காயல்பட்டணத்தில் அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மூன்றாவது மாநாடு நடைபெற்றது. அதில் கவிக்கோ அப்துல் ரஹ்மான் பாடிய வரிகளை அவர் நினைவுபடுத்துகிறார்.

''வீதிகளெல்லாம் வேதத்தின் வாயில்கள். ஏடுகள் எல்லாம் இலக்கியப் பூக்கள். சமாதிகள் எல்லாம் சரித்திரப் பேழைகள். இங்குள்ள ஏரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்திலும் (நத்தைகளும், நண்டுகளும், சிப்பிகளும் கடலோர மண்ணில் உருவாக்கும் வரிக் கோடுகள்) இறை மறை இருக்கும்'' என்ற வரிகளை கவிக்கோ உரைத்தபோது அரங்கில் எழுந்த கரகோஷத்தை மறக்கவே முடியாது இன்றும் என்று தன் கட்டுரையில் அமானுல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.இ.அமானுல்லாஹ்
விழாக்குழுத்தலைவர்

காயல் மகபூர்
மணிச்சுடர் ஆசிரியர்

மானா மக்கீன்

1923 இல் திருநெல்வேலியிலிருந்து காயல்பட்டணம் வழியாக திருச்செந்தூருக்கு ரயில் பாதைபோடப்பட்டது. காயல்பட்டணத்திற்கு மின் இணைப்பு 1955 இல் வழங்கப்பட்டது. 1955 இல் குழாய் நீர் வசதி, காயலுக்கு வந்தது. 2004 இல் காயல் பேரூராட்சி நகராட்சியாக தரமுயர்த்தப்பட்டது. 12.5 சதுர மீட்டர் பரப்புள்ள காயல் பட்டினத்தில் 12,942 வீடுகள் உள்ளன. 1971 இல் காயல்பட்டண மக்கள் தொகை 18,560 ஆக வும், 2011 இல் இத்தொகை 40,542 ஆகவும் வளர்ச்சி அடைந்தது. இங்கு முஸ்லீம்கள் தொகை 77.35 வீதமாகும். புறநகர் பகுதியில் ஆதிதிராவிடர், நாடார், விஸ்வகர்மா, தேவர், செட்டியார் ஆகியோர் வாழ்கிறார்கள் என்ற நமக்கு மிக முக்கியமான தகவல்களை மணிச்சுடர் நாளிதழ் ஆசிரியர் காயல் மகபுர் தெரிவித்துள்ளார்.

முத்துக்களையும் பவளத்தையும் கடலிலிருந்தும், இரத்தினத்தை பூமியிலிருந்தும் எடுத்து வியாபாரம் செய்பவர்களாக விளங்குவதால் காயல் வர்த்தகர் பலருக்கு 'முத்துவாப்பா' என்ற பெயர் உண்டு. இவர்கள் பல்வேறு ஊர்களில் 'முத்துச்சாவடிகள்' ஏற்படுத்தியுள்ளனர். மதுரை முத்துச்சாவடி 1720 இல் ஏற்படுத்தப்பட்டது, திருநெல்வெலியில் குற்றாலம் வீதியில் 1898 இல் முத்துச்சாவடி அமைக்கப்பட்டது. பாளையங் கோட்டையில் 1988 இல் முத்துசாவடி அமைக்கப்பட்டது. காயல்பட்டணத்தை பூர்வீகமாகக் கொண்டு இங்கேயே பிறந்து வாழ்கிற காயல்பட்டண முஸ்லீம்கள் அனைவருக்கும் இந்த சாவடிகள் சொந்தம். சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், தேவகோட்டை, பாளையங்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிட்ட 32 முத்துச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. முத்துச்சாவடிகளை நிர்வகிக்கவும், பாதுகாக்கவும் 'காயல் பட்டின நாட்டாமை முஸ்லீம் முத்துச்சாவடி' என்ற பெயரில் ஒரு அமைப்பு 1989 இல் பதிவு செய்யப்பட்டது என்ற தகவலும் இந்த மலர் மூலமாகவே அறியமுடிகிறது.

எனவே இச் சிறப்பு மலர் காயல்பட்டணத்தின் பெருமைகளை பதிவு செய்யும் மலராக, ஒரு வரலாற்று ஆவணமாக திகழ்கிறது என்று உறுதியாகச் சொல்லலாம்.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் கூறியது போல காயல் பட்டினத்தில் பழம் பெருமைகளைப் பகுத்தாய்ந்து புதுமைகளைப் புகுத்தி வாழும் புரட்சிப் பட்டினமாக எழுச்சி பெறுவதற்கு இந்த சிறப்பு மலர் பயன்பட வேண்டும். இந்த மாநாடு மலர் மூலம் காயல்பட்டணத்தின் தனிச்சிறப்பு தரணியெங்கும் பரவ வேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். முஸ்லீம் மக்கள் வடமாகாணத்திலிருந்து விரட்டப்பட்ட சம்பவம் தொடர்பாக விரட்டியவர்களே பிற்காலத்தில் வருத்தம் தெரிவித்தனர். எந்தத் தமிழரும் அதை அனுமதிக்கவில்லை. அதற்காக வேதனைப்படுகின்றனர். இதை சகலரும் மறக்கவே முயற்சிக்கின்றனர். இனி எப்போதும் அப்படி நடைபெறக்கூடாது. ஆனால் சர்வதேச மட் டத்தில் நடைபெறும் இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில் இதனை ஞாபகப்படுத்தி கவிபாடுவது கசப்பான உணர்வுகளை மீளவும் ஞாபகப்படுத்துவதாகவே அமையும்.

காத்தான்குடி பள்ளி வாசல் கொலைகளை சர்வதேசமும் கண்டித்தது. அதனாலேயே விடுதலை இயக்கமாகப் பார்க்கப்பட்ட அமைப்பு பயங்கர வாத இயக்கம் என்ற பெயரைப் பெற்றது. பல நாடுகள் தடை விதிக்க இதுவும் ஒரு காரணமாயிற்று. எனவே என்றோ நடந்த துரதிர்ஷ்டமான அச்சம்பவத்தை மீண்டும் மீண்டும் ஞாபகமூட்டி இன ஐக்கியத்தை குழப்பக்கூடாது. மலேசிய மாநாட்டில் கவியரங்கத்திற்கு வழங்கப்பட்ட தலைப்பு 'அண்ணல் நபிகள் நாயத்தின் அழகிய பண்புகள்' என்பதாகும். காயல்பட்டினத்தில் வழங்கப்பட்ட தலைப்பு 'ஊடகம்' என்பதாகும். காத்தான் குடி பள்ளிவாசல் கொலைகள், இந்த இரண்டு தலைப்புகளுடனும் தொடர்பில்லாதது. ஆனால் தொடர்புபடுத்த முயற்சித்து கவித்து வத்தையும் இழந்து வெறும் வசனங்களாக வெளிப்படுத்தியதைக் கண்ட இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராளர்களில் பலர் இதை அநாவசியம் என்றே கருதினர். இனிமேலாவது வலிந்து முடிச்சு போட்டு தமக்கு தாமே மன நிறைவு அடைவதைத் தவிர்ப்பதே நல்லது.

மலேசிய மாநாட்டின் கவியரங்கத் தெரிவு கட்டுரையில் முன்னர் கூறப்பட்டது போல சிறப்பாக அமைந்திருந்தது. ஆனால் காயல் பட்டின கவிஞர் தெரிவு எப்படி அமைந்தது என்பதை பேராளர்கள் நேரடியாகவே கண்டனர். கவிஞர்கள் காலம், இடம், பொருள் அறிந்து கவிபாட வேண்டும். கவிதையில் கவித்துவமும், தனித்துவமும், கவர்ச்சியும், ஆளுமையும் ஒருசேர கலந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

இலங்கைப் பேராளர்களுக்கு கவிக்கோ எட்டிக்காயானது ஏன்?



எம்.எம்.உவைஸ் எம்.ஜி.ஆருடன்...

தமிழ் இலக்கிய மாநாடுகளின் கவியரங்குக்கு தலைமை தாங்குவது பொதுவாகவே கவிக்கோ அப்தல் ரகுமானாகவே இருப்பார். இவரே மலேசிய உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டு கவியரங்குக்கும் தலைமை தாங்கினார். ஆனால் காயல்பட்டணத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகம் நடாத்திய 15வது மாநாட்டில் இவரைக் காணவில்லை.

மலேசியாவில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் மாநாட்டின் போது 'கவிக்கோ' தலைமை தாங்கிய போது இலங்கை பேராளர்களிடம் சிறு சலசலப்பு காணப்பட்டது. இதற்கான காரணத்தைத் தேடிப் பார்த்தேன். பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த உலக இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாட்டை இவரே தலைமைதாங்கி நடத்தினார். இந்த மாநாட்டிலேயே இலங்கை பேராளர்கள் பலர் உதாசீனப்படுத்தப்பட்டனர். இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கியவாதிகள் சரியாகக் கவனிக்கப்படாததால் அவர்கள் சீற்றமடைந்திருந்தனர். இறுதி விழாவில் கலைஞர் மு. கருணாநிதியுடன் மேடையில் அமர்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமிற்கு ஆசனம் வழங்கப்படவில்லை. இலங்கைப் பேராளர்கள் பின் ஆசனக்காரர்களாகக் கருதப்பட்டு அப்படியே கவனிக்கப்பட்டமை, பிரச்சினையை உருவாக்கியது. இதன் காரணமாகவே பலர் முகம் சுழித்து அப்துல் ரகுமானை வெறுப்புடன் நோக்கினர். இவர் உருதுமொழிக்காரர். தமிழர் அல்ல என்ற விமர்சனத்தையும் கேட்கக் கூடியதாக இருந்தது. சென்னை மாநாட்டு மலரில் கவிக்கோ எழுதியிருந்த கட்டுரையில் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு மாநாடுகள் பற்றிக் குறிப்பிட்டு பட்டியலிட்டிருந்தார். அந்தப்பட்டியலில் 1973, 1974, 1978 மாநாடுகள் பற்றிக் குறிப்பிடும் அவர் 1979 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த மாநாட்டை முற்றிலும் தவிர்த்திருந்தார். மீண்டும் 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டைப் பற்றியே குறிப்பிட்டிருந்தார். இவர் இலங்கையில் 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டினை வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்திருந்தார். என்று இலங்கைப் பேராளர்கள் விசனத்துடன் சுட்டிக் காட்டினர். அன்றைய முரண்பாடுகள் இன்றளவுக்கு தீர்ந்த பாடாக இல்லை என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. எனவே காயல்பட்டண மாநாட்டுக்கு அவர் வருகை தராதது பற்றி எவரும் கவலை அடையவில்லை.

காயல்பட்டண மாநாட்டு நிறைவு விழாவில் இந்திய யுனியன் முஸ்லீம் லீக் தலைவரும் இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழக உலக இணைப்பாளருமான பேராசிரியர் கே.எம்.காதர் மொஹிதீன் உரையாற்றினார். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறைக்கு பேராசிரியர் எம்.எம். உவைசே வழிகாட்டி. இவரது மறைவு பேரிழப்பாகும். எம்.எம்.உவைஸ் நினைவாக 2012 ஆம் ஆண்டிலிருந்து முஸ்லீம் லீக் இலக்கிய அணி பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் எம்.எம்.உவைஸ் ஆய்வரங்கினை நடத்தவுள்ளது. இந்த பேராசிரியர் நினைவு ஆய்வரங்கு வருடாவருடம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று தனது உரையில் ஒரு தகவலை வெளியிட்டார். தனது 35 நிமிட பேச்சில் 20 நிமிடங்களை பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எம்.உவைஸ் பற்றிப் பேசுவதிலேயே செலவிட்டார். இலங்கையைப் பற்றி எப்போதும் குறைவான மதிப்பீட்டையே கொண்டிருக்கும் இந்தியர்கள் மத்தியில் இந்தப் பேச்சு ஒரு விழிப்பை ஏற்படுத்தியிருக்கும் என்ற நினைப்புடன் நாம் மகிழ்ச்சியடைந்தோம். மலேசிய மாநாட்டிலும் ஆய்வரங்கு-7, கலாநிதி டாக்டர் ம.மு.உவைஸ் அரங்கு என்றே அழைக்கப் பட்டது என்பதை வாசகர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

கவிக்கோ அப்துல் ரகுமானால் இருட்டடிப்பு செய்யப்பட்ட 1979 கொழும்பு மாநாடு பற்றி எம்.எம்.உவைஸ் தனது 'பிறைக் கொழுந்து' நூலில் குறிப்பிட்டுள்ளார். 1979 ஜீன் 29, 30 ஜீலை 1 ஆகிய தினங்களில் இந்த மாநாடு நடைபெற்றது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

இம்மாநாட்டில் அப்போதைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ கலந்து கொண்டார். பாக்கீர் மாக்கார் வரவேற்புரையாற்றினார். இந்த மாநாட்டு செயலாளராக எம்.எம்.சமீம் கடமையாற்றியுள்ளார். பாராளுமன்ற உறுப்பினரான அஸ்வர் ஆற்றிய பங்கும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவை சார்பாக 24.02.1992ஆம் ஆண்டு அல்லாமா எம்.எம். உவைசுக்கு வரவேற்பும் பாராட்டும் நடைபெற்றபோது கவி. கா.மு.ஷெரீப், பேரவைத் தலைவர் எஸ்.எம்.இதாயத்துல்லாஹ் மற்றும் செயலாளர் கவிஞர் கி.பத்ருத்தீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு சிறப்பு நிகழ்வும் காயல்பட்டணத்தில் இடம்பெற்றது. 'இலக்கிய இணையம்' என்ற பெயரில் இலக்கியவாதிகளின் பெயர் முகவரியுடன் ஒரு நூல் வெளியிடப்பட்டது. இதில் இலங்கை இலக்கிய வாதிகளின் 75 பேர்களுடைய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இனி இஸ்லாமிய தமிழ் மாநாட்டு வரலாற்றைக் கொஞ்சம் பார்ப்போம்.

இந்த உலக இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகம், இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகம் ஆகியன ஆரம்பிக்கப்படுவதற்கு முன் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவில் நடைபெற்றது. பின் அதனை ஒத்ததாக 1966 இல் இலங்கை மருதமுனையில் எஸ்.எ.செய்யத் ஹசன் மௌலானாவினால் முதலாவது இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்தப்பட்டது. எனவே இலங்கையிலேயே இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வு மாநாடு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. என்பது தெளிவு.

இதன்பின் 'இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி' என்ற வாசகத்துடன் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகம் உதித்தது. இதன் முதல் மாநாடு 1973 இல் திருச்சியில் நடைபெற்றது. இங்கு தான் இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இக்கழகம் 1973 மே மாதம் 12 ஆம், 13 ஆம், திகதிகளில் ஜமால் முகம்மது கல்லூரியில் மாநாட்டை நடத்தியது. இலங்கை பேராளர் குழுவுக்கு பாராளுமன்ற உறுப்பினரும், கல்விமானுமான எ.எம்.எ. அஸீஸ் தலைமை தாங்கினார். எ.எம்.எ.அஸீஸ், இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரைவிலக்கணம் என்ற ஆய்வுக் கட்டுரையை இங்கு சமர்ப்பித்தார். எம்.அஸ்ஸலாம் '20 ஆம் நூற்றாண்டு ஈழத்து தமிழர் ஆக்க இலக்கியத்திற்கு முஸ்லீம்களின் பங்களிப்பு' என்ற ஆய்வையும், எஸ்.எம்.எ.ஹஸன், 'ஈழத்து இஸ்லாமிய தமிழ்ப் புலவர்கள்' என்ற கட்டுரையையும் சமர்ப்பித்துள்ளனர். இந்த ஆய்வு மாநாட்டில் கலாநிதி எம்.எம். உவைஸ் பங்குபற்றி இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

ஆனால் இதற்கு முன் 1968 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த 2வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 'தமிழிலுள்ள முஸ்லீம் பிரபந்தங்கள்' என்ற கட்டுரையை எஸ்.எம்.ஹனிபா சமர்ப்பித்துள்ளார். இதில் பேராசிரியர் நெய்னா முகமதுவின் 'சீறாப் புராணம் காப்பிய பண்புகள்' என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. இவையே இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென தனியான மாநாடு ஏன் நடத்தப்படக்கூடாது என்ற உத்வேகத்தை இஸ்லாமிய தமிழறிஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் மத்தியில் ஏற்படுத்தி யிருக்க வேண்டும். 2வது உலக இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு 1974 இல் சென்னையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் பல நூல்கள் வெளியிடப்பட்டன. இதில் அறிஞர் சித்திலெப்பையின் முதல் நூலான 'ஹசன்பே சரித்திரம்' மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஈழத்து முஸ்லீம் முதுசொம் என்ற நூலும், கலாநிதி எம்.எம். உவைஸ் எழுதிய 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய திருச்சித் திருப்பம்' நூலும் வெளியிடப்பட்டன. எஸ்.எம்.கமாலுதீன் ஒரு ஆய்வரங்கிற்கு தலைமைதாங்கினார். இந்த அரங்கில் கலாநிதி எம்.எம். உவைஸ் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

3வது மாநாடு 1978 ஆம் ஆண்டு ஜனவரி 13, 14, 15 ஆம் திகதிகளில் காயல்பட்டணத்தில் நடைபெற்றுள்ளது. இங்கு கலாநிதி சு. வித்தியா னந்தன் தலைமையில் நூல் வெளியீடு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த மாநாடே காமராஜ் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறை அமைய காரணமானது.

4வது மாநாடு 1979 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்றுள்ளது. ஜூன் 29,30 மற்றும் ஜூலை 1 ஆம் திகதி நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு நீதிபதி எம்.எம்.இஸ்மயில் தலைமைதாங்கியுள்ளார். சபாநாயர் எம்.எ.எம். பாக்கீர் மாக்கார் வரவேற்புரையாற்ற செனட்டர் மசூர் மௌலானா நன்றி யுரையாற்றியுள்ளார்.

5வது மாநாடு 1990 டிசம்பர் 29,30,31 ஆம் திகதிகளில் கீழக் கரையில் நடைபெற்றுள்ளது இதில் டாக்டர் பட்டம் பெற்ற முஸ்லீம் அறிஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். இலங்கையைச் சேர்ந்த கலாநிதி எம்.எம். உவைஸ் கலாநிதி எம். ஏ.நுஃமான் ஆகியோர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

6வது மாநாடு 1999 இல் சென்னையில் நடைபெற்றுள்ளது. 7வது மாநாடு 2002 அக்டோபர் 22, 23, 24 ஆம் திகதிகளில் ரவுப்ஹக்கீம் தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.

8வது மாநாடு 2007 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது. இதன் பின்னரே 2011 இல் மலேசியாவில் நடைபெற்றுள்ளது. 1990 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழக்கரை மாநாட்டில் வைத்து அடுத்த மாநாடு மலேசியாவில் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்ட போதும் அது 2011 ஆம் ஆண்டே கை கூடியது.

இது போலவே இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகம் நாகூர், நீடூர், காரைக்கால், சென்னை, திருச்சி, கோட்டக்குப்பம், முத்துப்பேட்டை, ராஜகிரி, புதுச்சேரி, மயிலாடுதுறை, பள்ளபட்டி, பரமக்குடி, தஞ்சாவுர், அதிராமபட்டினம், ஆகியவற்றில் 14 மாநாடுகளை நடாத்தி 15வது மாநாட்டினை காயல்பட்டணத்தில் நடத்தியுள்ளது.

காயல்பட்டண மாநாடு வரை இக்கழகம் 180 நூல்களை வெளியிட்டுள்ளது. எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிகையாளர்கள், புரவலர்கள் என 225 பேருக்கு விருது வழங்கி கௌரவித்துள்ளது என கழகச் செயலாளர் பேராசிரியர் சாய்புமரிக்கார் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

பேராசிரியர் எம்.எம். உவைஸை கௌரவிக்கும் மாநாடு இலங்கையில் நடத்தப்படாதது ஏன்?

கலைஞர் கருணாநிதி பொற்கிழி வழங்கி கௌரவிக்கிறார்

முஸ்லீம் லீக்கின் இலக்கிய பிரிவு, பேராசிரியர் எம்.எம். உவைஸ் ஞாபகார்த்தமாக வருடா வருடம் சர்வதேச ஆய்வரங்கினை பல்கலைக்கழகத்தில் நடத்தவுள்ளதாக இந்திய தமிழ்நாட்டு முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொய்டீன் அறிவித்த போது நம்மவர்கள் பேராசிரியர் எம்.எம். உவைஸ் அவர்களை ஞாபகப்படுத்தும் வகையில் என்ன செய்திருக்கிறார்கள் என்ற கேள்வி என்னில் எழுந்தது.

கடல்கடந்த நாட்டில் இலங்கையரான உவைஸ் ஞாபகார்த்தமாக ஆய்வரங்கு நடத்தப்படுகிறது. இலங்கையில் 1994 ஆம் ஆண்டு அவருக்கு மணிவிழா நடத்தப்பட்டது ஞாபகத்துக்கு வருகிறது. 1996 ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மறைந்தார். அதன் பின்னர் அவர் சேகரித்து வைத்திருந்த நூல்கள் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்டன அங்கு பேராசிரியர் எம்.எம். உவைஸ் பிரத்தியேக நூலகம் என்று அந்நூல் தொகுதிக்கு பெயரும் சூட்டப்பட்டது.

இவைதவிர உவைஸ் பங்குபற்றிய, முன்னின்று நடத்திய இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளுக்கு பின் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் 'எம்.எம்.உவைஸ் அரங்கம்' என அரங் கொன்றுக்கு பெயர் சூட்டியுள்ளனர். இதுதவிர பேராசிரியர் எம்.எம். உவைஸ் ஞாபகார்த்தமாக ஏதேனும் நடந்தேறியுள்ளதா?

பேராசிரியர் எம்.எம்.உவைஸின் பிரத்தியேக நூலகத்தினை பெற்றுக் கொண்ட தென்கிழக்கு பல்கலைக்கழகம் இன்று பல சர்வதேச, தேசிய ஆய்வு மாநாடுகளை, கருத்தரங்குகளை நடத்திவருகின்றது. ஆனால் பேராசிரியர் எம்.எம்.உவைஸ்சின் பெயரில் ஞாபகார்த்தமாக ஒரு இலக்கிய மாநாடு ஒன்றை இதுவரை நடத்தவில்லை. அவரது படைப்புகளை ஆராயவுமில்லை.

பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோரினது தூண்டுதலாலும், அஸீஸின் இலங்கை முஸ்லீம் சகாய நிதி உதவிகளின் மூலமும் இலங்கையிலும், இந்தியாவிலும் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களை தேடும் பணியில் தம்மை அர்ப்பணித்த உவைஸ், அத்துறையிலேயே முதுமாணி பட்டமும் பெற்றார். முஸ்லீம்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு என்ற ஆய்வின் கீழ் அவரால் கிட்டத்தட்ட 210 நூல்களை சேர்க்க முடிந்தது. காயல்பட்டண இஸ்லாமிய தமிழ் மாநாட் டுக்குப் பின்னரேயே மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறை ஆரம்பிக்கப்பட்டது. அதன் இருக்கை பேராசிரியர் பதவி முதன்முதலில் எம்.எம். உவைஸுக்கு கிடைத்த பின்னர் 2000கும் மேற்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கிய நூல்களை வெளிக்கொண்டு வர அவரால் முடிந்திருக்கிறது.

உவைஸ் எழுதிய இஸ்லாமும் இன்பத் தமிழும் (1957), ஞானச் செல்வர் குணங்குடியார் (1965), நெஞ்சில் நிலைத்த சுற்றுலா (1987), இஸ்லாமிய இலக்கியத்தின் திருச்சி திருப்பம் (1974) என்பனவற்றோடு மாட்டின் விக்ரமசிங்கவின் 'கம்பெரலிய' நூலை கிராமப் பிறழ்வு என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் மொழிபெயர்த்தார். சாகித்திய மண்டலம் அதனை 1964 இல் வெளியிட்டது. (அரச கருமநல) மொழி திணைக்களம் முதலில் மொழி பெயர்த்த 'இலங்கை பொருளாதார முறை' என்ற நூலை மொழி பெயர்த்து 1962 இல் வெளியிட்டது. இதனை ஐ.எ.எஸ்.வீரவத்தன சிங்களத்தில் எழுத எம்.எம்.உவைஸ் தமிழில் மொழி பெயர்த்தார். சீ.என்.தேவராஜன் எழுதிய வாணிக எண் கணிதம் எனும் தமிழ் நூல் வாணிஜ அங்க கணிதய என சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. அரசகரும மொழி திணைக்களம் இதை வெளியிட்டது.

பொருளியற் துறை பேராசிரியர் எப்.ஆர்.ஜயசூரிய எழுதிய 'ஆர்த் திக்க விக்ரஹாய' எனும் சிங்கள நூலை பொருளியற் பாகுபாடு என்ற பெயரில் மொழி பெயர்த்து கல்வி வெளியீட்டு திணைக்களம் 1962 இல் வெளியிட்டது. இதனை மொழி பெயர்த்தவர் எம்.எம்.உவைஸ்.

1970 இல் மக்காப்பயணம் பற்றி தினகரனில் எழுதிய கட்டுரை 'மக்காப் பயணம்' என்ற பெயரிலேயே நூலுருப் பெற்றது. தமிழ்-அரபு அகராதியைத் தயாரிக்க அதை மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் வெளியிட்டது.

கலாநிதி பட்டம் பெற்ற உவைஸை பாராட்டி ஸாஹிராக் கல்லூரியில் விழா நடைபெற்ற போது இஸ்லாமும் இன்பத் தமிழும் என்ற நூலை பேராசிரியர் கா.சிவத்தம்பியும், 'தித்திக்கும் திருமுறைகள்' சிங்கள மொழி பெயர்ப்பை கே.ஜி.அமரதாஸவும், முஸ்லீம் தமிழ் காப்பியங்கள் என்ற ஆங்கில நூலை துணை வேந்தர் சு.வித்தியானந்தனும் அறிமுகம் செய்து உரையாற்றினர். 'முஸ்லீம் தமிழ் காப்பியங்கள்' என்ற ஆய்வே கலாநிதி பட்டத்திற்கான ஆய்வாகும். இந்தப் பாராட்டு விழாவிற்கு சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் எம்.எம்.இஸ்மாயில் தலைமை வகிக்க, பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளை சிறப்புரையாற்றினார்.

எனவே பேராசிரியர் எம்.எம்.உவைஸ் எவ்வளவு சிறந்த ஆய் வாளராகவும், கல்விமானாகவும் மேலும் இஸ்லாமியத் தமிழ் என்ற துறை யின் தோற்றத்துக்கு கால்கோளாகவும் விளங்கிய பெருமகன் என்பதை மேற்கண்ட தகவல்கள் விவரிப்பதாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால்தான் இலங்கையில் இவருக்காக ஒரு நினைவு மாநாடு ஏன் நடத்தப்படவில்லை என்ற கேள்வி எழுகிறது. இது ஒரு நியாயமான கேள்வி. இவர் காமராஜ் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியதால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பல்கலைக்கழகங்கள் அவரை மறந்து விட்டனவோ? அவரது படைப்புகளை ஆராய ஏன் இந்த பல்கலைக்கழகங்கள் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்யவில்லை என்ற கேள்வி ஒரு புறமிருக்க முஸ்லிம் பிரமுகர்களும் கல்விமான்களும் இவர் தொடர்பில் ஒரு அசட்டைப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கான காரணம் என்ன என்பதையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

நடத்தப்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் டாக்டர் எம்.எம்.உவைஸின் பங்களிப்பு தனியாக ஆராயப்படக் கூடிய ஒன்று. 1966 ஆம் ஆண்டு மருதமுனை அல்மனார் மகாவித்தியாலயத்தில் ஏ.செய்யது ஹஸன் மௌலானா நடத்திய மாநாட்டில் கலாநிதி ம.மு.உவைஸ் 'முஸ்லீம் தமிழ் இலக்கிய மரபு' என்ற கட்டுரையை சமர்ப்பித்துள்ளார்.

முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நெடுந் தீவைச் சேர்ந்த தனிநாயகம் அடிகளார் தலைமையில் 1966 ஆம் ஆண்டு நடைபெற்றது. 2வது மாநாடு தமிழக முதல்வர் அறிஞர் அண்ணாதுரை தலைமையில் 1968 ஆம் ஆண்டு சென்னையிலும், 3வது மாநாடு 1970 இல் பிரான்சிலும், 4வது மாநாடு 1974 இல் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் யாழ்ப்பாணத்திலும், 5வது மாநாடு 1981 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் தலைமையில் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்திலும், 6வது 1987 இல் மலேசியாவிலும், 7வது மாநாடு 1989 இல் மொரிசியசிலும் நடைபெற்றுள்ளது. ஆனால் 1973லேயே திருச்சியில் முதலாவது இஸ்லாமிய தமிழ் மாநாடு நடத்தப்பட்டுள்ளது. இதன் பின்னரே தொடர்ச்சியாக இஸ்லாமிய தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இதனை மையமாகக் கொண்டே எம்.எம்.உவைஸ் 'திருச்சி திருப்பம்' என்ற நூலை எழுதினார் எனக் கூறப்படுகிறது. இந்த மாநாடு எஸ்.ஜே.சாதிக் பாட்சா தலைமையில் நடைபெற்ற போது இந்த மாநாட்டில் எம்.எம். உவைஸ் கௌரவிக்கப்பட்டுள்ளார். அங்கே பிச்சை இப்ராஹிம் அரங்கில் முதலாவது கருத்தரங்கு நடைபெற்ற போது அதற்கு எம்.எம். உவைஸ் தலைமை தாங்கியுள்ளார். இவரது தலைமையில் இலங்கையைச் சேர்ந்த அஸ்லாம் என்பவர் 'ஈழத்து தமிழின் ஆக்க இலக்கியத்திற்கு முஸ்லீம் பங்களிப்பு' என்ற கட்டுரையையும், கண்டியைச் சேர்ந்த எம்.ஏ.ஹசன் 'ஈழத்து இஸ்லாமிய தமிழ் புலவர்கள்' என்ற கட்டுரையையும் சமர்ப்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாநாட்டில் 'இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் காப்பியங்களில் திர்குர்ஆனும் முஸ்லீம்களின் தமிழ் பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும்' என்ற ஆய்வை எம்.எம்.உவைஸ் சமர்ப்பித்துள்ளார்.

1974 ஆம் ஆண்டு இரண்டாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் 'முற்கால இலக்கியம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கிற்கு எம்.எம். உவைஸ் தலைமை தாங்கியுள்ளார். இந்த மாநாட்டிலேயே கலைஞர் மு.கருணாநிதி, தமிழகத்தின் ஒரு பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்விற்கு ஒரு இருக்கையை உரு வாக்கவிருப்பதாக அறிவித்துள்ளார். இந்த மாநாட் டில் எஸ்.எம்.கமால்தீன் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இவர் கட்டுரையாளரின் முன்னோடி நூலகர்களுள் ஒருவர். எஸ்.எம்.கமால்தீன் தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கில் எம்.எம்.உவைஸ் 'ஈழத்து முஸ்லீம்களின் தமிழ் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் செந்தமிழ் சொற்கள்' பற்றி கட்டுரையைச் சமர்ப்பித்துள்ளார்.

1978 ஆம் ஆண்டு காயல்பட்டண மாநாட்டில் ஏ.எம்.ஏ.அஸீஸ் அரங்கில் நடைபெற்ற ஆய்வரங்கிற்கு டாக்டர் எம்.எம்.உவைஸ் தலைமை தாங்கியுள்ளார். 4வது மாநாடு கொழும்பில் 1979 இல் நடைபெற்ற போது எம்.எம்.உவைஸ் முன்னனின்று நடத்தியுள்ளார். இங்கு புதூகுஷ்ஷாம் என்ற தலைப்பிலான கருத்தரங்கிற்கு எம்.எம்.உவைஸ் தலைமை தாங்கியுள்ளார்.

1990 இல் 5வது மாநாடு கீழக்கரையில் நடைபெற்றபோது எம்.எம். உவைசுக்கு பொற்கிழி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். ஆய் வரங்கம் எம்.எம்.உவைஸ் தலைமையிலேயே நடைபெற்றுள்ளது. இதில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டபோது எம்.எம்.உவைஸும் கௌரவிக்கப்பட்டுள்ளார். எனவே அவரது பங்களிப்பு ஆழமானது, விரிவானது.

எனவே கலாநிதி எம்.எம்.உவைஸுடைய ஆய்வுகளை ஆய்வு செய்யும் ஒரு மாநாடு இதுவரை இலங்கையில் ஏன் நடத்தப்பட வில்லை, ஏன் நடத்தப்படக்கூடாது என்ற கேள்விக்கு இஸ்லாமிய கல்விமான்கள் பதில் அளிக்கக் கடமைப்பட்டவர்களாக உள்ளனர். தென்கிழக்கு பல்கலைக் கழகம் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் பற்றிய தகவல்களை பின்வரும் நூல்களில் பெற்றுக் கொள்ள முடியும். இக் கட்டுரைக் கான தகவல்களையும் இந்நூல்களிலேயே பெற முடிந்தது.

எம்.எம்.உவைஸ் எழுதிய இஸ்லாமிய இலக்கியத்தின் திருச்சித் திருப்பம், சி.நயினார் முகம்மது எழுதிய இஸ்லாமிய இலக்கியக் கருத்தரங்க முதல் மாநாடு-1973, எஸ்.எம்.ஏ.ஹஸன் எழுதிய நெஞ்சத் தாமரையின் இன்ப நினைவுகள்-பயண அனுபவம் (1975), இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு (ம.ம. உவைசும், பீ.மு. அஜ்மல்கானும் எழுதியது - 1994), எஸ்.எம்.ஹனிபா எழுதிய இஸ்லாமிய இலக்கிய மறுமலர்ச்சி: வரலாற்று நோக்கில் அனைத்து மாநாடுகளும் (1991), எஸ்.எம்.ஹனிபாவின் இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சி (1982) ஆகியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

சிறப்பாக அமைந்த கலாநிதி வ.மகேஸ்வரனின் ''சீறாப்புராணத்தில் உலா'' ஆய்வுக் கட்டுரை

இஸ்லாமிய கீதங்கள் நிகழ்ச்சி

பேராசிரியர் ம.மு.உவைஸ் பற்றிய எனது குறிப்புகள் வண்ணவானவில் மார்ச் 2012 இதழில் வெளிவந்த பின்னர் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மார்ச் 25ம் திகதி பேராசிரியரின் நினைவு தின ஒன்று கூடலுக்கான அழைப்பிதழைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். இந் நினைவுதின ஒன்று கூடலின் பின்னர் ஏப்ரல் இதழில் பெரியார் உவைஸ் பற்றிய மேலும் தகவல்கள் வெளியாயின. அவர் பெயரில் ஆய்வு மாநாடு அல்லது அவரது படைப்புகளைப் பற்றிய ஆய்வு மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கை. அதுவும் நடை பெறும் என்ற நம்பிக்கை இப்போது எனக்கு ஏற்பட்டுள்ளது. நினைவு தின ஒன்றுகூடலை நடாத்திய பெருந்தகைகளே இதையும் முன்னின்று நடத்த வேண்டும். அது நடைபெற இறைவன் அருள் கிட்டுவதாக.

இனி மலேசிய மாநாட்டு ஆய்வரங்கை கொஞ்சம் பார்ப்போம். பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன் 'சீறாப்புராணத்தில் உலா-பழமையும் புதுமையும்'' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வினை சமர்பித்தார். அவர் சீறாப்புராண உமறுப்புலவர் பற்றி கூறுகையில், உமறுப்புலவர் தமிழ் இலக்கிய சூழலுக்குள் நன்கு ஊறித் திளைத்தவர் என்கிறார்.

அது அவரது படைப்பாற்றல் திறனில் வெளிப்படுகிறது. அவர் தமிழ்ச் சூழல், இஸ்லாமியச் சூழல் எனும் இரு மரபுகளுக்கும் இடையே நின்று மரபு பிசகாமலும் மரபு வழுப்படாமலும் இலக்கியம் செய்ததே அவரது தனிச் சிறப்பு என்கிறார் கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன். 'பாட்டுடைத்தலைவன் ஒருவனது தன்னிகரில்லா சிறப்புகளை விரித்து ரைப்பதற்கு தமிழ்ப்புலவர்கள் பல்வேறு இலக்கிய வடிவங்களைக் கையாண்டனர். அந்த வகையில் உலா, பிள்ளைத் தமிழ், தூது, மெய்க்கீர்த்தி, பரணி, என்பதாக அவை வடிவமைக்கப்பட்டன. பாட்டுடைத் தலைவன் மீது கொண்ட ஈடுபாட்டைத் தம் புலமை நெறியினூடாகப் புதுப்புது உபாயங்களைப் புகுத்திய வெளிப்பாட்டு திறன்களின் அடையாளமே இவ்வகையான வடிவங்கள்.

உலா என்பது பொது வழக்கில் இடம் பெறும் ஒரு நிகழ்வாகும். அரசர் இராஜ வீதிகளில் உலாவருவதும், பின்னர் கடவுளர் திருவீதியில் உலாவருவதும் மரபு. இந்த மரபு இலக்கியத்தில் பாடு பொருளாக அமைந்த போது 'உலா' என்று தனி இலக்கிய வடிவம் பிறந்தது. இயல்பான நிகழ்ச்சி ஒன்றுக்கு கற்பனை வடிவம் கொடுக்கும் போது அதில் பல்வேறு அழகியல் அம்சங்களையும் சேர்ப்பது இயல்பு. இந்த வகையில் உலா என்ற இலக்கிய வடிவம் பின்னாட்களில் கட்டமைக்கப்பட்டது. என்று கூறி உமறுப்புலவரின் சீறாப்புராணத்தில் உலா பற்றிய விளக்கத்தை அவர் தந்தார்.

உமறுப்புலவரின் சீறாப்புராணத்தைப் பற்றிக் மகேஸ்வரன் மேலும் குறிப்பிடுகின்றார்: ''தமிழகச் சூழலில் இஸ்லாத்தின் பிரவேசம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. எனினும் மத்திய காலத்திலேதான் அவர்களது இலக்கிய வெளிப்பாடுகளை அறியமுடிகின்றது. இதற்கு அவர்களது தமிழ்ச் சூழலின் இசைவாக்கமே காரணமாகியது எனலாம். தமிழ்ச்சூழலுள் நுழைந்த சமண, பௌத்த, சைவ, வைணவ நெறிகள் தமது நெறிகளை வெளிப்படுத்துவதற்கு தமிழை ஊடகமாகக் கருதியது போல இஸ்லாமி யரும் கருதினர். நபிமார்களது வாழ்வும், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களது உப தேசங்களும் (ஹதீஸ்கள்), திருக்குர்ஆனும் தப்ஸீரும் தாய் மொழியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் இருந்தால், இதயத்திற்கு இன்னும் நெருக்கமாக இருக்கும் என்ற எண்ணங்கள் அவர்களிடையே இழையோடின. இவ்வாறான மனப்பாங்கும் தமிழ்ச் சூழலின் இசைவாக்கமும் அவர்களில் ஒன்றிணையவே தமிழில் இஸ்லாமியப் இலக்கியம் என்ற சிறப்பு அம்சம் உருவெடுத்தது எனலாம். இவ்வாறானதொரு பின்னணியில் தான் இஸ்லாமிய பண்பாட்டையும், வடிவங்களையும் அடிப்படையாகக் கொண்ட பல இலக்கியங்கள் தோன்றின. அதன் கொடுமுடி சீறாப்புராணம் எனலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

சாமநகர் புக்கப் படலம், மணப்புரி படலம் மதினம் புக்கபடலம், பாத்திமா திருமணப் படலம் ஆகிய படைப்புகளில் உலாப்பிரபந்த அமைப்பை அவதானிக்க முடிகிறது. இதில் முஹம்மது நபியின் எழிலும் சிறப்பும் விபரிக்கப்பட்டுள்ளன.

சிவந்த பாதபங்கய நபி திருநகர் புறத்துக் கவிந்த கார்க்குடை நிழலிட வருவது கண்டு சிவந்த வெண் சுதைப் பளிக்கு மேநிலை வாயிலிநின்று குவிந்த கைவிரித்து அழைத்தது போல அசைந்தன கொடிகள்.

சூழ்முகிற் கவிகையில் பல்லர் சூழ்வர மீன்னடு மதியென விளங்கித் தோன்றியதானவன் யாவன் என்று உளத்திற் தான் உணர்ந்து ஈனமில் முகம்மதாம் என்று தோன்றினான்.

இவ்வாறான விபரிப்புகள் பொதுமையானவை தமிழ் இலக்கிய பாரம்பரியத்தின் வழிவந்தவை என்கிறார்.

நபிகள் உலாப் போந்த போது வாத்தியங்கள் கடலொலி அடங்க ஆர்த்தன, சூரியன் போன்ற தேஜஸ் உடைய நபிமேல் குளிர் நிலவு போல வெண்கொற்றக்குடை கவிந்திருந்தது, அழகான கொடிகள் அசைந் தாடின, மிகவும் வேகமாக செல்லும் குதிரைகள் புழுதி எழச் சென்றன. மதங் கொண்ட யானைகள் மதஞ் சொரிந்து அலைந்தன. கொடிகள் அசைந்தாட தேர்கள் நெருங்கின. ஒளி பொருந்திய வீதியில் சிவிகைகள் மொய்த்தன. பாட்டுடைத் தலைவனை முதலிற் காணும் பெண்கள் ஆமினா பற்றியே நினைக்கின்றனர். கதிஜா அம்மையார் பெற்றது போல வேறு எவரும் பேறு பெறவில்லை என்கின்றனர். கதிஜாவை பலவாறு புகழ் கின்றனர். இவ்வாறான பவனிகாண யாதுதவம் செய்தோம், முஹமதுவை தரிசிக்க நம்மைப்போல நல்ல பிறப்பை யார் பெறுவார், பாட்டுடைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராளர் பதிவு நடைபெறுகிறது

தலைவர் ஊர்ந்து செல்லும் குதிரையைத் தாமதமாகவே செல் என்பர். இவ்வாறு சில பெண்கள் காணப்பட, இன்னும் சில பெண்கள் முகமதுவின் அழகு, தோள் வனப்பு ஆகியவற்றின் சிறப்பை எடுத்துக்கூறி தாம் தம்மையறியாது நிலைதடுமாறியதை நினைப்பர். சிலர் கிளியை தூதுவிட முயல்வர், சிலர் மாலையை வாங்க விரும்புவர், சிலர் உலா காட்சியை கனவென மயங்குவர், சிலர் தம் ஆயட்மறப்பர், சிலர் தலைவன் நினைப்புத் தந்த சுணங்கே போதுமென்பர், சிலர் முத்தம் சிந்தினர், சிலர் பாவை போல் நின்றனர். பூலோகத்தின் பெண்கள் மாத்திரமன்றி தேவலோக அரம்பையர்தம் பாட்டுடைத் தலைவன் உலாவரும் காட்சி கண்டு மகிழ்ந்து பொலிந்து பூமாரி பெய்தனர் எனக்குறிப்பிடுகின்றார் உமறுப்புலவர்.

அவர் பெண்களின் இயல்பான உணர்வுகளுக்குத் தடை போட வில்லை. அவர்களது இயல்புகளை வெளிப்படுத்திய அவர், அவர்களை வரம்பு மீறாமல் படைக்க முயற்சித்துள்ளார். அக்கால இலக்கியத்தில் அவர் நிகழ்த்திய புதுமை இது என ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். இதற்கு பருவமங்கையர் காமம் தொடர்பான செயற்பாடுகளை குறிப் பிடலாம். அதே சமயம், மிக நிதானமாக நின்று பருவப் பெண்கள் தங்கள் எல்லைகளிலேயே நின்று மயங்கினர் என எல்லை தாண்டாமற் படைத் துள்ளார் என ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமறுப்புலவர் தமிழ் இலக்கிய சூழலுக்குள் நன்கு ஊறித் திளைத்தவர். அது அவரது படைப்பாற்றல் திறனில் புலப்படுகிறது. எனினும் அவர் தமிழ்ச் சூழல், இஸ்லாமிய சூழல் எனும் இரு மரபுகளுக்கும் இடையே நின்று மரபு பிசகாமலும் மரபு வழுப்படாமலும் இலக்கியம் செய்ததே அவரது புதுமை எனக் கூறி தனது ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்தார் கலாநிதி வ.மகேஸ்வரன்.

ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்த பின் மகேஸ்வரன் மண்டபத்திலிருந்து வெளியே வந்ததார். அவரிடம் சிலர் ''நீங்கள் இந்த தலைப்பில் மாட்டிக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள் என்று எமக்கு கவலையாக இருந்தது. இதை இங்குள்ளவர்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் எனப் பார்க்காது மார்க்கக் கண்கொண்டு நோக்கினால் பிரச்சினையாகி விடலாம் என்றும் இதிலிருந்து நீங்கள் எப்படி தப்பப் போகிறீர்கள் என்றும் கவலைப் பட்டோம். ஆனால் சிறப்பாக செய்து முடித்தீர்கள்'' எனக் கூறி வாழ்த்தி னார்கள். அத்தோடு இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தினை மார்க்கக் கண்கொண்டு மட்டும் பார்க்க இயலாது. தமிழ் இலக்கியக் கண்கொண்டும் நோக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

முஸ்லிம் இலக்கியம் எழுச்சி பெற்ற 16–19ஆம் நூற்றாண்டு காலப்பகுதி

தமிழ் நாடு உத்தம பாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் மு.அப்துல் சமது இஸ்லாமிய இலக்கியங்களில் தமிழ் இலக்கிய மரபுகள் என்ற ஆய்வை சமர்ப்பித்து உரையாற்றினார்.

தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று டில்லி பாராளு மன்றத்தில் முதல்குரல் எழுப்பியவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் சாஹிப். தாய்தமிழுக்கு முதலில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்று ஆட்சிமன்றத்தில் முன்மொழிந்தவர் திருச்சி எம்.எல்.சி.கௌஸ் மியான்கான் எனத் தெரிவித்த அவர் தனது ஆய்வினை மூன்று நிலைகளில் முன்வைத்தார். தமிழகப் பண்பாட்டு சூழலில் முஸ்லீம்கள், தமிழக பண்பாட்டு சூழலில் இஸ்லாமிய இலக்கியங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய இலக்கியங்களில் தமிழிலக்கிய மரபுகள் என்பனவே இம் மூன்று பிரிவுகளாகும். இதில் 1827 இல் வெளியான சேகுனாப் புலவரின் 'புதுகுஷ்ஷாம்' (சிரி யாவின் வெற்றி) காப்பியம் பற்றி குறிப்பிடுகையில், 22 ஆண்டு களாகக் கையெழுத்துப் பிரதியை பாதுகாத்து பதிப்பித்தார் என்றும் ஓர் இந்துவான பவளக்காட்டி கோட்டைக் குப்பம் உபதேசிப் பாவலரின் குமாரரர் செல்வராயன் என்றும் குறிப்பிடுகிறார் இவர். காதல் சிறப்புகளைக் கூறி கற்பைப் பாடுதல் தமிழிலக்கிய மரபு. எனவே உமறுப்புலவர், நபிகள் - கதிஜா திருமணத்திற்கு முன்பேயே கதிஜா கனவு கண்ட படலத்தை அமைத்து,

''வஞ்சிறுநுண் ணிடையார்த் தம்மிடத்துறை
முகம்மது மனத்திடத் துறைத்தார்''

(கதிஜா கனவு கண்ட படலம்)

என்று பாடியுள்ளார் என்பதையும் சுட்டிக் காட்டினார்.

பேராசிரியர் மு.சாயபு மரைக்கார் 'முஸ்லீம் புலவர்கள் கையாண்ட இலக்கிய வடிவங்கள்' என்ற ஆய்வு கட்டுரையை சமர்ப்பித்துப் பேசினார்.

''இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி என்ற இலட்சிய நோக்கோடு இஸ்லாமியக் கோட்பாடு, பண்பாடு, வரலாறு, வாழ்வியல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழில் அவர்கள் படைத்து ள்ள இலக்கியங்களே இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள். கடந்த 400 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான இஸ்லாமிய புலவர்கள் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியங்களை படைத்துள்ளனர். தமிழிலக்கிய வராலாறு பற்றி எழுதியோர் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றிப் போது மான அளவு குறிப்பிடவில்லை. இஸ்லாமிய தமிழ் பரப்பும் அனைவரா லும் உணரப்படவில்லை. மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய தமிழியல்துறை 1979 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் நாளிலிருந்து செயற்படத் தொடங்கியபின் இத்துறை முனைவர் ம.மு. உவைஸ், முனைவர் பீ.மு.அஜ்மல்கான் ஆகியோரின் கடுமையான உழைப்பின் காரணமாக இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாற்றில் 4 தொகுதிகள் 2500 பக்க அளவில் வெளியிடப்பட்டன. எஞ்சிய இரு தொகுதிகளும் விரைவிலேயே வெளியானால் இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு ஓரளவு முழுமை பெறும்'' என்றார் இவர். அவரது கட்டுரையில் பல தரவுகள் உள்ளன. ம.மு.உவைஸ் 'இஸ்லாமியத் தமிழ் நூல் விபரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவை' என்ற ஓர் அரிய நூலை வெளியிட்டார். அந்நூலில் கி.பி.1950 வரை வெளியான 2000 இஸ்லாமிய தமிழ் நூல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. கடந்த 60 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 50 புதிய இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் வெளியானதாகக் கணக்கிட்டாலும் மேலும் 3000 இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் வெளியாகியிருப்பதாகக் கொள்ளலாம்.

இது போன்றே இலங்கை இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களை கால வரிசையில் தொகுத்துக் கூறும் 'சுவடி ஆற்றுப்படை' என்ற நூல் அறிஞர் எஸ்.எச்.எம்.ஜமீல் அவர்களால் 4 பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் இருபதாம் நூற்றாண்டு வரை வெளியான 1977 இஸ்லாமிய நூல்களை சுவடி ஆற்றுப்படை சுட்டிக்காட்டுகிறது.

சுவடி ஆற்றுப்படையில் கி.பி.2000 வரை இலங்கையில் வெளியான 1977 நூல்களில் 1613 நூல்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கிய நூல்கள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதோடு இவை காலவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

1859-1899-43 நூல்கள்

1900-1924-49 நூல்கள்

1925-1949-61 நூல்கள்

1950-1959-98 நூல்கள்

1960-1969-186 நூல்கள்

1970-1979-162 நூல்கள்

1980-1989-250 நூல்கள்

1990-1995-265 நூல்கள்

1996-2000-499 நூல்கள்

ஆக மொத்தம் 1613 நூல்கள்

இதுபோல மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வெளியான இஸ்லாமிய தமிழ் நூல்களை அட்டவணைப்படுத்த வேண்டும். எல்லாம் சேர்ந்தால் கடந்த நானூறு ஆண்டுகளில் ஏறத்தாழ 7000 இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் வெளிவந்ததிருக்கலாம் என்று தனது உரையில் குறிப்பிடுகிறார் சாயபு மரைக்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 19 ஆம் நூற்றாண்டு வரை 'இருண்ட காலம்' எனக் குறிப்பிடப்படுகிறது. இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம் என்று கால வரிசையாக வரலாறு எழுதுவதைப் போன்று 16-19ம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தினை 'முஸ்லீம்கள் காலம்' எனக் குறிப்பிடப்படுவது பொருத்த முடையதாகும் என்கிறார் இவர்.

இசைத் தமிழுடன் தொடர்புடைய 'தீர்த்தக்கரை' 'வண்ணங்கள்', 'ஆனந்தகளிப்பு' என்பதாக வடிவங்களைப் படைத்துள்ளனர். 'கும்மி', 'சிந்து', 'ஏசல்', 'கப்பல் பாட்டு', 'தாலாட்டு', முதலிய நாட்டுப் பாடல்களையும், 'புராணம்', 'பிள்ளைத்தமிழ்', 'அம்மானை', 'அந்தாதி', 'ஆற்றுப்படை', 'மாலை', 'கலம்பகம்', 'கோவை', 'பாவை' போன்ற பழைய இலக்கிய மரபுகளையும், போர்க்காட்சியை சித்திரிக்கும் 'படைப்போர்' கதைகளும் 'கிஸ்ஸா', வரலாற்றை விளக்கும் 'நாமா', இறைவனை நல்லடியார்கள் போற்றி புகழும் 'முனாஜத்து', இஸ்லாமிய அடிப்படை கொள்கைகளை வினாவிடை முறையில் விளக்கும் 'மசலா' போன்ற புதிய இலக்கிய வடிவங்களையும் அறிமுகப்படுத்தியவர்கள் இஸ்லாமிய தமிழ் புலவர்களே.

சமணர்கள் சீவகசிந்தாமணி, வளையாபதி, பெருங்கதை என்னும் மூன்று பெருங்காப்பியங்களையும், சூளாமணி, நீலகேசி, யசோதா காவியம், நாககுமார காவியம், உதயண குமார காவியம் என்னும் ஐஞ் சிறு காப்பியங்களை மட்டுமே பாடியுள்ளனர். எல்லாம் சேர்த்து எட்டு காப்பியங்களே சமணர்கள் தமிழுக்கு தந்தவையாகும். ஆனால் முஸ்லீம்கள் இருபதுக்கு மேற்பட்ட காப்பியங்களைத் தமிழில் படைத்தளித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி.1648-கி.பி. 1894 ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் 16 இஸ்லாமிய காப்பியங்கள் தோன்றியுள்ளன. அதுவும் 12 ஆண்டு களுக்குள் (கி.பி 1809- கி.பி.1821) 9 காப்பியங்கள் தோன்றியமை முஸ்லிம் சமுதாயத்துக்கு மட்டுமே உரிய பெருமையாகும். 19 ஆம் நூற்றாண்டில் தோன்றியுள்ள 16 இஸ்லாமியக் காப்பியங்களும் தண்டியலங்காரம் குறிப்பிடுகின்ற பெருங்காப்பிய நிலை பிறழாமல் பாடப்பட்டவையாகும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட காப்பியங்களைப் படைத்த புலவர்கள் மூன்று பேர் இஸ்லாமிய இலக்கிய உலகில் உள்ளனர். சேகனாப் புலவர் 'குத்பு நாயகம்', 'திருகாரணப் புராணம்', 'திருமணிமாலை', 'புதுகுஷ்ஷாம்' ஆகிய நான்கு காப்பியங்களையும் இயற்றியுள்ளார். வண்ணக் களஞ்சியப் புலவர் 'இராஜநாயகம்', 'தீன்விளக்கம்' ஆகிய காப்பியங்களையும், நாகூர் குலாம் காதிறு நாவலர் 'நாகூர்புராணம்', 'ஆரிபு நாயகம்' ஆகிய காப்பியங்களையும் இயற்றியுள்ளனர்.

இஸ்லாமிய காப்பியங்கள் நபிகள் நாயகம், சுலைமான் நபி, இபுராஹிம் நபி, யுசுஃப் நபி, இமாம் ஹுசைன், முஹ்யித்தீன் ஆண்டகை, நாகூர் ஆண்டகை, ரிஃபாயி ஆண்டகை போன்ற வரலாற்று நாயகர்களைப் பாட்டுடைத் தலைவர்களாக் கொண்டு பாடப்பட்டவை. எனவே இஸ்லாமிய காப்பியங்களில் வரலாற்றுக் குறிப்புகள் மலிந்திருப்பதில் ஆச்சரியம் இல்லை.

மேலும் இந்த காலக்கட்டத்தில் ஆலிப் புலவரின் 'மிஃராஜ் மாலை' முகம்மது நூருத்தீன் புலவரின் 'மூசாநபி புராணம்' பக்கீர் மதார் புலவரின் 'இராஜமணிமாலை' குஞ்சு மூசுப் புலவரின் 'செய்யித்ததுப் படைப்போர்' போன்ற 9 சிறுகாப்பியங்களையும் இஸ்லாமிய புலவர்கள் எழுதியுள்ளனர்.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் மிளிர்வதே பெருங் காப்பியம் என்றும், அவற்றுள் ஏதேனும் ஒன்று குறையுமானால் அது காப்பியம் என்று அழைக்கப்படும் என்றும் தண்டியலங்காரம் குறிப்பிடு கிறது. இவ்வகையில் நோக்கும்போது இஸ்லாமியச் சிறு காப்பியங்கள் என்று முன்னர் குறிப்பிட்ட ஒன்பதும் காப்பியத்தகுதியைப் பெறுகின்றன என்றும் 16 பெருங்காப்பியத்துடன் 9 சிறுகாப்பியமும் சேர்த்து 25 காப்பியங்களை படைத்துள்ளனர்'' என்றும் குறிப்பிட்டார் சாயபு மரைக்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

தமிழ் அரசர்களின் அன்பையும் கௌரவத்தையும் பெற்ற இராவுத்தர்கள்

காயல் பட்டணத்தின் அழகிய கடற்கரை வாசல்

ஹாஜி கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரியின் தமிழ்த்து றை இணைப் பேராசிரிய ரான மு.அப்துல் சமது, இஸ்லாமிய இலக்கியங்களில் தமிழ் இலக்கிய மரபுகள் பற்றி ஒரு சிறந்த ஆய்வினை சமர்ப்பித்தார். அவரது ஆய்வு கி.பி. 7 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையில் அமைந்திருந்தது. இக் காலப்பகுதியில் பல சமயப் போராட்டங்கள் தமிழகத்தில் நடை பெற்றன. சைவமும் வைணவமும் தம்மை நிலைநிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு கொள்கை அடிப்படையில் மோதிக் கொண்டன. அரசுக் கட்டிடங் களில் கோலோச்சிய சமணத்தை அகற்றிவிட்டு சைவம் அரச அங்கீகாரத்துடன் வளர ஆரம்பித்தது. இக்காலச் சூழலில் தான் இஸ்லாம் தமிழக மண்ணில் கால்பதித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வெளிநாட்டு சமய நெறியாக தமிழக மண்ணில் நுழைந்த இஸ்லாத்திற்கு எதிராகவோ, முஸ்லீம்களுக்கு எதிராகவோ தமிழக வரலாற்றில் ஒரு சிறு புள்ளியைக்கூட பார்க்க முடியவில்லை. இதற்குக் காரணம் தமிழகப் பண்பாட்டுச் சூழலில் அங்கீகாரத்துடன் வளர்ந்த மார்க்கமாக இஸ்லாம் திகழ்ந்ததே.

இஸ்லாம் ஓரிறைக் கோட்பாடான ஏகத்துவத்தை (தௌஹீத்) மூலமாகக் கொண்டது. இக் கொள்கை ஏற்கனவே தமிழகத்தில் வழங்கிய ஒன்றே. பண்டையத் தமிழர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த 'ஆசிவகம்' என்ற சமயம் உருவ வழிபாடில்லா ஓரிறைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. திருமூலர் இக் கொள்கையை சமய நெறியாகக் கொண்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று பாடினார். ''தமிழக மண்ணில் ஏகத்துவத்தை அடித்தளமாகக் கொண்ட இஸ்லாம் வந்தபோது தமிழர்கள் அம் மதத்தை மானசீகமாக அங்கீகரித்தனர்'' என அண்ணா குறிப்பிட்டுள்ளார். ஏகத்துவத்தோடு சகோதரத்துவத்தை யும் தமிழக மண்ணில் நிலை நிறுத்தி அங்கீகாரத்தைப் பெறுவ தற்கு இஸ்லாம் மதத்தால் எளிதில் முடிந்தது.

சரக்குகள் விற்கும் சோனகர்களாகவும் குதிரைகள் விற்கும் ராவுத்தர்களாகவும் அறிமுகமாகி மன்னர்களுடன் வர்த்தகம் செய்த காரணத்தினால் அவர்களால் தமது செல்வாக்கை நிலை நிறுத்த முடிந்தது. கம்மாளர், ஆசாரியர்களுடன் நெருங்கிய உறவு கொண்டனர். அவர்கள் 'அப்பச்சி' என்று அழைத்து கொள்ளும் வகையில் தந்தை பிள்ளை உறவாக வளர்ந்தது.

மக்கத்து துலுக்கரு
மாந்த கம்மாளரு
பக்கத்துப் பள்ளரு
அப்பன் புள்ளமாரு

என நாட்டுப்புறங்களில் பாடும் அளவிற்குச் சமூக உறவாக முஸ்லீம் களின் தொடர்புகள் வளர்ந்தன. குதிரை விற்க வந்த ராவுத்தர்கள் பின்னர் குதிரை பராமரிப்பாளராகவும், குதிரையேற்றப் போர் பயிற்சி அளிப்பவர் களாவும் குதிரைப் படை வீரர்களாகவும் தளபதிகளாகவும் கூட மாறினர். மாணிக்கவாசகர் திருவாசகத் தில் சிவபெருமானை ராவுத்தர் கோலத்தில் பாடுவதும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் ''எய்யபே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருலகுக் கெல்லாம் துலங்கி ராவுத்தர் ராயன், பொய்யிலா மன்னன் காணப் பொய்பரி மாற்றஞ் செய்தான்'' என சிவனை ராவுத்தராக பாடுவதும். அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் ''மாயிலேறும் ராவுத்தனே'' என்றும் கந்தர் கலிவெண்பாவில் 'சூர்கொன்ற ராவுத்தனே'' என்றும் முருகப் பெருமானை ராவுத்தராக பாடுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குதிரைப்படை சார்ந்த ராவுத்தர்களின் பாதுகாப்பிற்காக அரண் மனை அருகிலேயே அவர்களுக்கான குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டன. குதிரை களோடு ராவுத்தர்கள் தங்கும் அப்பகுதிகள் தான் முதலில் 'பாளையம்' என்று அழைக்கப்பட்டன.

அடித்தட்டு மக்கள்-பிறப்பால் இழிந்தவர்கள் என்று கருதப்பட்ட மக்கள்-கோயில் அரண்மனை வீதிகளில் நுழைவதற்கு தடைவிதிக்கப் பட்டிருந்தது. இதே சமயம் வீரம் சார்ந்த ராவுத்தர்கள் பெருங் கோவில்கள் அருகில் குடியிருப்புகளைப் பெற்றனர். எனவே இயல்பான அங்கீகாரத் துடன் வாழ்ந்த முஸ்லீம்கள் படைத்த இஸ்லாமிய இலக்கியங்களும் தமிழிலக்கிய பரப்பில் பொதுப்பார்வையுடன் தான் வரவேற்கப்பட்டன.

இஸ்லாமிய இலக்கியங்களில் மூத்த இலக்கியம் 'பல்சந்த மாலை'யில் இன்று நமக்கு கிடைப்பன எட்டே பாடல்கள்தான். இந்த எட்டுப் பாடலும் கிடைக்கக் காரணமாக இருப்பவர் களவியல்காரிகை' உரையாசிரியரே. களவியல்காரிகையில் எட்டுப் பாடல்கள் மட்டுமே மேற்கோள்களாக ஆளப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றார். அவர் கன்னியாகுமரி மாவட்டத் தில் 'கோட்டாறு' நகரில் செட்டியார் சமூகத்தில் ஒரு வழக்கம் இருந் துள்ளது. மார்கழி மாதத்தில் சில நாட்கள் செட்டியார் வசிக்கும் வீதிகளில் வீடுகளுக்கு முன்னால் அகல் விளக்குகளை வரிசையாக ஏற்றி வைப்பது வழக்கம். இதற்கு 'சாஹிபு வருகிற புண்ணிய ராத்திரிகள் வீடு வாசல் வெளிச்சமாக இருக்கணும்' என்று கூறும் வழக்கம் இருந்துள்ளது. யார் இந்த சாஹிபு?

1581 இல் திருநெல்வெலியைச் சேர்ந்த புலவரே ஆலிப் புலவர். இவர் தனது 'மிகுராசுமாலை' இலக்கியத்தை அரங்கேற்ற முஸ்லீம் தனவந்தர்களை நாடிய போது யாரும் அதற்கு முன்வரவில்லை. கோட் டாறில் வாழும் பாவாடைச் செட்டியார் எனும் சிவலிங்க செட்டியாரை அணுகினால் அரங்கேற்றத்திற்கு வழிபிறக்கும் என்று சீடர் ஒருவர் கூற, ஆலிப் புலவரும் செட்டியாரை அணுகினார். செட்டியார் பேரார்வத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்துள்ளார். இதன் பின்னர் இரு கண்களும் பார்வையற்றிருந்த பாவாடை செட்டியாருக்கு கண்ணொளி கிடைத்ததாம். அரங்கேற்றத்தின் போது நபிகள் நாயகம் (ஸல்) விஜயம் செய்ததால் இந்த அற்புதம் நடந்தது என்ற நம்பிக்கையில் நபிகள் வந்த புனித இரவில் விளக்கேற்றும் மரபு செட்டியார் சமூகத்தில் தோன்றியதாக ஆய்வாளர் செந்தீ நடராசன் குறிப்பிட்டுள்ளதாக அப்துல் சமது குறிப்பிடுகிறார்.

தமிழ் காப்பியங்கள், காவியம், இதிகாசம், புராணம் என மூன்றாக பிரிக்கப்படுகின்றன. காப்பியப் பண்புகளை தண்டியலங் காரம் வரை முறைபடுத்தியுள்ளது. வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், வருபொரு ளுரைத்தல் என்னும் மூன்றில் ஒன்று முதலில் அமைய வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பயத்தல் வேண்டும். மாலை வருணனை நாடு- நகரம் மற்றும் இதர வருணனைகளைப் பெற்றிருக்க வேண்டும். நன்மணம் புணர்தல், பொன்முடி கவித்தல், சிறு வரைப் பயத்தல், புலவியிற் புலத்தல், கலவியிற் கலத்தல் முதலான செய்கை சிறப்புகள் இடம்பெறுதல் வேண்டும். சருக்கம். இலம்பகம் போன்ற பகுப்புகள் அமைதல் வேண்டும். இந்த மரபினை சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலில் காண்கிறோம். இந்த மரபினை தமிழ் இலக்கி யத்திலிருந்து முஸ்லீம்கள் பின்பற்றியுள்ளனர். இதனை குத்பு நாயகம் கடவுள் வாழ்த்தில் காணலாம் என்கிறார் அப்துல் சமது. காப்பியத்தை காண்டங்களாகவும், காண்டத்தை படலம், இலம்பகம், காதை எனப்பகுத்துப் பாடும் மரபினை காப்பியம் பாடிய முஸ்லீம் புலவர்கள் பின்பற்றியுள்ளனர்.

கம்பன் இராம காவியத்தில் 'பாற்கடலை ஒரு பூனை நக்கிப் பருக நினைக்கும் முயற்சி' எனக் குறிப்பிட்டது போல சேகுனா புலவர் குத்பு நாயத்தில் 'பாரடை மணவிலக்கம்படுத்துவர் முன்னொன்றெண்ணான் போல' என்றும், வண்ணக் களஞ்சியப் புலவர் இராஜநாயகம், கடவுள் வாழ்த்துப் பகுதியில், 'கடல் ஓசையில் முன்னே, ஒரு பெண் எடுத்த குடத்து நீரின் ஓசை போல' என்றும் சேகாதி நைனாப் புலவர் தமது திருமணக் காட்சியில் 'கடல்வாழ் மீன் வான் மீனாக மாற முயல்வது போல' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

காப்பியச் சூழலை தமிழ் இலக்கிய முறைப்படி பின்பற்றியது போலவே, தமிழகச் சூழலைக் கதைக்களனாக்கும் மரபு காணப்படுகிறது. சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவை அயலகக் கதைகளைக் காவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாக்கும் முயற்சிக்கு முன்னோடிகள். கதைக்களன், சூழல், கதைமாந்தர், பழக்க வழக்க பண்பாடுகள் எனத் தமிழகப் பின்புலம் கதையில் மெரு கேறும் போது நமது மண்ணில் கதை, வரலாறு, வாழ்வியல் என்ற உணர்வு வாசிப்போருக்கு ஏற்படுகிறது. இவ்வுணர்வு இலக்கியம் படைத்த நோக்கத்தை பூர்த்தி செய்கிறது: என்கிறார் ஆய்வாளர்.

நபிகளார் வாழ்ந்த சூரியனை திருப்பிச் சுடும் பாலைவனம், சீறாப்புராணத்தில் செந்நெல்லும் கன்னலும் காவும் கழனியும் கதலியும் கமுகும் நிறைந்த தமிழ் நாடாகிவிடுகிறது. பாலைவனம் ஈச்சம்மரமும் ஒட்டகமும் உட்காட்சியில் விரியும் சூழல் மறைந்து செண்பகம். சந்தனம், மான், மரை, அணில், மந்தி, சிங்கம் உலவும் குறிஞ்சி நிலமாகி கதைச் சூழலுக்கு எழிலூட்டுகிறது. இது அரபகம், தமிழகம் ஆகிய இரு சமுதாய மரபுகளை இணைத்துக் காட்டும் ஒரு பண்பாட்டு முயற்சி எனலாம் என்கிறார் ஆய்வாளர்.

பாத்திமா நாயகியின் திருமணச் செய்தியினை ஒட்டகத்தின் மீதமர்ந்து வள்ளுவன் முரசறைந்து ஊருக்கு அறிவிக்கின்றான். வீதிகளில் பழைய மணல் மாற்றிப் புது மணல் பரப்பப்படுகிறது. வீட்டு முற்றங்ளில் கோலங்களிட்டு அலங்கரிக்கப்படுகின்றது.

இங்கு வள்ளுவன் முரசறைந்து அறிவித்தல், பழைய மணல் மாற்றிப் புதுமணல் பரப்புதல், கோலமிடல் முதலியன தமிழ் மரபுகள். யானையின் முதுகிலிருந்து முரசறைதல் தமிழ் மரபு. இங்கு யானைக்கு பதில் ஒட்ட கத்தின் மீது அமர்ந்து அறிவிப்பது அரேபியாவின் இயல்பாக்கப்பட் டுள்ளது. இவ்வாறு வரம்புகளுக்கு உட்பட்டு இரு சமுதாய வழக்குகளும் இணைகின்றன என்கிறார் ஆய்வாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

இஸ்லாமிய இசை மரபுக்கு சான்றாக விளங்கும் ஃபகீர்களின் தப்ஸ் பாடல்கள்

பாகிஸ்தான் தெருப்பாடகர்கள்

தமிழ்நாடு, உத்தமபாளையம் கருத்த ராவுத்தர் ஹவுதியா கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் மு.அப்துல் சமது, இஸ்லாமியர் எவ்வாறு தமிழகப் பக்தி மரபை அடியொற்றிச் சென்றனர் என்பதைத் தமது ஆய்வில் சான்றுகளுடன் எடுத்துரைத்தார்.

தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் என்பன கோவில்களில் பாடப்படுவதைப் போலவே இஸ்லாமிய மாதங்க ளில் நபிகள் மீதும், முகைதீன் அப்துல் காதிர் ஜீலானி எனும் இறைநேச செல்வர் மீதும் மௌலூது எனும் அரபியில் பாடப்பட்ட புகழ்மாலைகளை பாடும் வழக்கம் உள்ளது என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜப் மாதத்தில் பீரப்பா அடங்கியுள்ள தக்கலைப் பதியில் பெரும் விழா எடுத்து விடியவிடிய ஞானப் புகழ்ச்சியை 687 பாடல்களாகப் பாடுவது மரபாக உள்ளது. திருவாசகம் 'முற்றோதல்' போல ஞானப் புகழ்ச்சியும் முற்றோதல் முறையில் பாடப் பெறுவதாகும்.

பெண்கள் கர்ப்பம் தரித்திருக்கும் காலத்தில் மகாபாரதத்தில் வரும் அபிமன்யு மற்றும் இராமாயணத்து பிரகலாதன் கதைகளையும், சுந்தர காண்டத்தையும் வாசிப்பது வயிற்றில் வளரும் குழந்தை நல்லொழுக்க மாண்புகளைப் பெற்றவர்களாகத் திகழ உதவும் என்பது இந்துக்கள் மத்தியில் நிலவும் பாரம்பரிய நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை முஸ்லிம்களிடமும் இருந்துள்ளது. கர்ப்பம் தரித்து ஏழு முதல் ஒன்பது மாதத்தில் 'தலை பாத்திஹா ஓதுதல்' வைபவம் நடைபெறுவது உண்டு. இது போல தமிழகத்துச் சித்தர் மரபுக்கும் இஸ்லாமிய சூஃபி ஞானப் பாடல்களுக்கும் இடையே நிரம்ப ஒற்றுமைகள் இருப்பதை அறியலாம். சித்தர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பரம்பொருளை அடைவதற்குரிய படி நிலைகளைப் பேசுவதுபோல அதே தத்துவத்தில் ஷரீயத், நரீக்கத், மஃரிபத், ஹகீகத் எனும் நான்கு படி நிலைகளை சூஃபி ஞானிகள் பின்பற்றியுள்ளனர். குருநாதர் ஒருவர் மூலமே பரம் பொருளை அடையும் பக்குவத்தை பெற முடியும் என்பது சித்தர்கள், சூஃபிகள் இருபிரிவினரிதும் கோட்பாடாகும். சூஃபிகள் இந்தக் குருவை 'சேகு' என்றும் 'பீர்' என்றும் அழைத்தனர். இதில் குணங்குடியார் குறிப்பிடத்தக்க ஒற்றுமை சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். குணங் குடியார் ரகுமான் கண்ணி, மனோன்மணிக்கண்ணி உள்ளிட்ட ஏழு நூல்களைப் பாடியுள்ளார்.

முஸ்லீம் புலவர்கள் தமிழிலக்கியப் பரப்பில் தங்கள் உள்ளம் கவர்ந்த பாடல்களைப் போல தாங்களும் படைக்கும் மரபினை கைக்கொண் டிருப்பதைக் காணலாம். இதனை ஆய்வாளர் 'முந்தைய இலக்கிய வெளிப்பாடுகளை எழுத்தாளும் மரபு' என ஆராய்ந்துள்ளார். இதற்கு பல உதாரணங்களையும் பேராசிரியர் மு.அப்துல் சமது எடுத்துரைத்து ள்ளார்.

திருத்தக்க தேவர் சுரமஞ்சரியின் வருகையை
'சீறடி கிண்கிணி சிலம்பொடுபுலம்ப' என்றும
கம்பர் சூர்ப்பனகையின் வருகையை,
'பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும்

சேக்கிழார் சுந்தரரின் திருமணக் காட்சியை 'காளையைக் காண எண்ணில்லா கண்கள் வேண்டும்' என்றும்.

இராமனின் திருமணக்காட்சியை பாடும் போது

'நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்' என கம்பர் கூறுவது போலவே உமறுப்புலவர் கம்பரையும், சேக்கிழாரையும் உள்வாங்கி புதுமை படைக்கும் பல முயற்சிகளை சீறாவில் காணலாம்.

'இமையா நாட்டத்தாயிரம் கண்கள் வேண்டும்'' என்றும்

'நபிகளார் அழகைக் காண கண்ணிமைத்தல் செய்யாத விண் ணுலகத்துக் கண்கள் ஆயிரம் வேண்டும்' என்றும் புதுமை செய்கிறார், வண்ணக் களஞ்சியப் புலவர் தமது இராஜநாயகத்தில்.

'அரசி லியற்கை நீத்தா னன்னையைப் பிதாவை நீத்தான் சரதநண்பி னரை நீத்தான் நன்குலத்தினரை நீத்தான் பரிசன மெவையு நீத்தான் பரிகரி சிவிகை நீத்தான் விரை செறி குழலி னாள்தன் வேட்கையை நீத்திலானே' (கனவு கண்டு மணஞ் செய்த படலம் 22)

என்ற பாடல் எல்லா இன்பங்களையும் உறவுகளையும் இழந்த இராவணன், சீதையின் நினைவை மட்டும் இழக்கவில்லை என்ற கம்பர் பாடிய பாடலின் தாக்கத்தில் விளைந்தது எனலாம்.

'கலையால் நிரம்பாத கலையுண்டுனக்கு நிறை கலையுண்டிவன்றனக்கு' என்ற பகழிக் கூத்தரின் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழின் அடிகளை,

'நிறாத கலையுண்டு னக்குஎப் போதிலும் நிறைந்த கலையுண்டி வற்கே' என முகியித்தீன் பிள்ளைத் தமிழில் எடுத்தாளக் காணலாம் என்கிறார்.

பட்டினத்தாரின் 'கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்து' பாடலை பீர்முகம்மது ஒலியுல்லா,

'கல்லா பிழையும் கருதாப் பிழையும் கசிந்து நிலை
நில்லாப் பிழையு... ...னையாய் பிழையும் நேர்ந்தஞ்சிலொன்றைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் நீதான் பொறுப்பாயெம் மிறைவனே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடியுள்ளார்.

அசனலிப் புலவர் வடோச்சிப் படைப்போரில் வடோச்சி எனும் அரபு நாட்டு வீரனின் வீரத்தையும் பண்புகளையும் பாடும்போது தமிழ் இதிகாச மாந்தரே ஒப்புவமைக்கு வந்து நிற்கின்றனர்.

'வடோச்சி தண்டாயுதம் எடுத்தால் பீமனும் தோற்று விடுவான்-வில்லை எடுத்தாய் விஜயனும் தோற்றுவிடுவான்-கர்ணனிவன் கொடைக்கு கால்வாசி காணான்' எனத் தமிழக மக்களுக்கு தெரிந்த உயர்நிலை மாந்தர்களோடு ஒப்பிடும் போது வடோச்சியும் தமிழக நாயகனாகி விடுகிறான்.

ஃபகர்

'திருமக்கா பள்ளு' என்ற இலக் கியம் முற்றிலும் 'போல செய்தல்' முயற்சியின் விளைவாகும். இது முக்கூடற் பள்ளினை ஒத்தது. திரு மக்கா பள்ளில் இளையப் பள்ளி யான மதீனத்துப் பள்ளியின் வரவை பாடும் போது,

'சீவிச் சிறுக்கெடுத்துக் கொண்டை முடிந்து செங்கனி வாயிதழும் நெற்றிச் சுட்டி யும் செந்தூரப் பொட்டு மிட்டு' தமிழச்சியாகவே வருகிறாள். ஆனால் அவள் 'அல்லாஹ் நபியை நாடிப் போற்றிக் கொண்டு ஆமின் கூறியே வெகு நேயமுடனே' வருகிறாள். இஸ்லாமிய கொள்கையும் தமிழ்க் கலாச்சாரமும் இங்கு சிங்கார நடை பயிலக் காணலாம் என்கிறார் ஆய்வாளர். ஆணை வீரம் சார்ந்தும் பெண்ணை அழகு சார்ந்தும் வருணிப்பது தமிழிலக்கிய மரபு. அதுவும் பெண்ணை வருணிப்பது தமிழ்ப் புலவர்களுக்கு கைவந்த கலை, பெண்ணை வர்ணிப்பதில், 'கேசாதிபாத' வருணனை 'பாதாதி கேச' வருணனை என இரு அணுகு முறைகளைப் புலவர்கள் பின்பற்றுவர். தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் கேசாதிபாத வருணனைக்கு முக்கியத் துவம் கொடுக்கும். தலை முதல் பாதம் வரை பெண்ணை வருணிக்கும் மரபு பெரும்பாலும் காணப்படுவதாலும் சேகாதி நாயினார் புலவர் தனது திருமணக் காட்சி எனும் புத்திலக்கியத்தில் சுவனத்துப் பெண்களின் பேரழகை கேசாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத வருணனையில் தருகிறார். நயமும் காமச்சுவையும் கனிந்து நின்றாலும் வரையறை கடவாத வருணனைத் திறமாக அமைந் துள்ளது.

'வடோச்சி படைப்போரில்' பனிமதி என்ற பேரழகியை மஞ்சு தவழ் குழல், பிறை போல் நுதல், மாமதி போல் முகம் என கேசாதிபாத வருணனை செய்கிறார் அசனலி புலவர்.

வேதத்தை ஓதுதல் முதற் கொண்டு இயற்கையாகவே இசையோடு தொடர்புடைய முஸ்லீம்கள், தமிழிலக்கிய இசை மரபுகளைப் பின்பற்றி இலக்கியங்கள் படைத்துள்ளனர் என்கிறார் ஆய்வாளர்.

வீதிகளில் இஸ்லாமிய வரலாறுகளையும் விழுமியங்களையும் 'தப்ஸ்' கொட்டி யாசகத்திற்காக பாடி வரும் ஃபக்கீர்கள், இசை மரபினராக முஸ்லீம் சமூகத்தில் இருக்கிறார்கள் என்கிறார். ஃபக்கீர்கள் பாடுகின்ற 'நூறு மசலா' போன்ற இலக்கியங்களிலும், அம்மானையில் மூன்று பேர் பாடுவது போன்று, நூறு மசலாவில இரண்டு பேர் பாடுகின்றனர். அவர்களில் ஒருவர் ஆண், ஒருவர் பெண். ஆண்-பெண் இருவர் உரையாடலையும் ஆண் பக்கீரே பாடுவார். அம்மானை பாடலில் இறுதியில் 'அம்மானை' என்ற சொல் இடம் பெறுவது போல நூறு மசலா பாடல்களில் 'மசலா' என்ற சொல் இடம் பெறுகிறது. இவ்விரு இலக்கிய வடிவங்களுக்கு இடையிலும் ஒரு பொது மரபு இருப்பதை காணலாம் என ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

'குறவஞ்சி' இலக்கியங்களில் இடம்பெறும் இசையோடு கூடிய சிங்கன்-சிங்கி உரையாடல் பாங்கு மசலாவிலும் உண்டு. சிங்கனின் கேள்விகளுக்கு அறிவார்ந்த முறையில் சிங்கி பதிலளிப்பாள். ஆனால் மசலாவில் பெண்ணின் கேள்விகளுக்கு அறிவார்ந்த நிலையில் ஆண் பதிலுரைப்பார். சமய நெறிகளை உரையாடல் பாங்கில் வெளிப்படுத்து வது மசலா இலக்கியத்தின் நோக்கமாக அமைந்துள்ளது.

இசையோடு ஃபக்கீர் பாடும் உரையாடல் பாங்கிற்கு நூறு மசலாவில் இருந்து ஒரு சான்று குறிப்பிட்டுள்ளார்.

மெகர் பானு
உங்கள் நபி மார்க்கத்திலே
நல்ல முகம்மதியர் வேதத்திலே
நான்காவது மார்க்கத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபிகள் சொன்ன சரகின்படி
மானிலேயும் பெரியமானு அறுபடாத மானுமென்ன?
மீனிலேயும் பெரிய மீனு அறுபடாத மீனுமென்னா?
மாவுலேயும் நல்லமாவு இடிபடாத மாவுமென்னா?
இடிபடாத மாவுதனை எந்தனுக்கு சொல்லுமன்னா

அப்பாசு:
அடி ஞானப் பெண்ணே!
எங்கள் நபி மார்க்கத்திலே
நல்ல முகம்மதியர் வேதத்திலே-அல்லா
நாலாவது மார்க்கத்திலே
நபிகள் சொன்ன சரகின்படி
மானிலேயும் பெரியமானு-பெண்ணே
அறுபடாத மானாவது அது
ஈமானடி மெகர்பானே!
மீனிலேயும் பெரிய மீனு
அறுபடாத மீனானது-அது
ஆமீன் என்றாகுமே!
மாவிலேயும் நல்ல மாவு-பெண்ணே
இடி படாத மாவானது
ஐந்து நல் கலிமா பெண்ணே!

தமிழிசை மரபோடு ஒத்து நடக்கும் ஃபக்கீர்களின் தப்ஸ் பாட்டு முஸ்லீம்களின் இசைமரபுக்கு இன்றும் வாழும் சான்றாகும். அருகி வரும் இக்கலையைப் பாதுகாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும் என்கிறார் ஆய்வாளர் பேராசிரியர் அப்துல்ஸமது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

நொண்டிச் சிந்தை முதலில் அறிமுகம் செய்தவர் ஒரு முஸ்லிம் புலவரே

பேராசிரியர் அப்துல்ஸமது, இஸ்லாமிய இலக்கியங்களில் தமிழ் இலக்கிய மரபுகளை ஆராயும் போது அருணகிரிநாதரின் திருப்புகழ் சந்தநயம் கமழும் அற்புத இசைப்பாடலாகும் எனக் குறிப்பிட்டதோடு அதனால் ஈர்க்கப்பட்ட காசிம் புலவர், நபிகள் நாயகத்தின் மீது 'திருப்புகழ்' பாடியுள்ளதை தன் ஆய்வில் குறிப்பிட்டிருந்தார்.

சூஃபி கதக் காட்சிகள்

அருணகிரிநாதர் பாடிய இசை மரபில் தாமும் பாட வேண்டும் என்பதன் வெளிபாடே காசிம்புலவரின் திருப்புகழ் என்கிறார். காசிம் புலவரின் திருப்புகழில் கவித்திறன், சொல்லாட்சி, சந்தப் பாவன்மை என்பன அருணகிரிநாதரின் திருப்புகழ் தழுவியே அமைந்துள்ளது என்கிறார்.

அருணகிரிநாதரின் திருப்புகழில் இடம்பெற்ற 'முத்தைத்தரு பத்தித்திருநகை அத்திக்கொரு சக்திசரவண முத்துக்கொரு வித்துக்குரு பரனெனவோதும்' என்ற பிரபல்யமான பாடலில் சந்தத்திலும் சொல்லாட்சியிலும் மனதை பறி கொடுத்த காசிம் புலவர்,

'முத்துத்தனு தித்துத் தெளிவொளி
வட்டத்தமை யுற்றத்தருமிசை முற்பட்டதொரு பச்சைத்
தழைமயில் வடிவாகி
முக்குற்றம் கற்றித் தெருளருள்
வற்கக் கடல் புக்கிப் பலவுயிர்
முத்திக்கொரு வித்துக் குருநபியெனவோதி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பாடியுள்ளார் என்று சுட்டுகிறார்.

தமது பாட்டுடைத் தலைவர்களை வேண்டுவதிலும் இருபெரும் திருப்புகழ் நூல்களும் நோக்கத்திலும் ஒத்திசைவதைக் காணலாம். அப்துல் காதிறுப் புலவரின் 'சந்தத்திருப்புகழ்', சையது முகியித்தீன் கவிராயரின் 'முகித்தீன் ஆண்டவர் திருப்புகழ்', அசனார் லெப்பையின் 'நவரத்தினத் திருப்புகழ்', பிச்சை இபராஹிம் புலவரின் 'ஆதமலைத் திருப்புகழ்' என தமிழிசை மரபில் முஸ்லீம் புலவர்கள் செழுமையான பக்கங்களைக் கண்டுள்ளனர் என்கிறார் ஆய்வாளர்.

கீர்த்தனை எனும் இசை வடிவத்தில் தமிழிசை வளப்பட்ட காலத்தில் காசிம் புலவரும், செய்கு மஸ்தான் சாகிபும், குணங் குடி மஸ்தானும், ஞானியார் சாகிபும் கணிசமாகவே கீர்த்தனைகள் பாடியுள்ளனர். செய்யது அபூபக்கர் புலவரும், முகம்மது இப்ராஹிம் சாகிபும் கீர்த்தனை இசை வடிவத்தில் நாடக இலக்கியம் படைத்து வெற்றி கண்டனர். கி.பி.1771இல் அருணாசலக் கவிராயர் பாடிய 'இராம நாடகக் கீர்த்தனை'யைப் பின்பற்றி கோட்டாறு செய்யது அபூபக்கர் பாவலர் 'சீறா நாடகக் கீர்த்தனை' பாடினார். கம்பராமாயண வழி நூலாக இராம நாடக கீர்த்தனை அமைந்தது போலவே சீறாப்புரணத்தின் வழிநூலாக சீறா நாடக கீர்த்தனை அமைந்துள்ளது என்கிறார் இவர். சிறிது காலத்திற்கு முன்பு வரை ஞானியார் சாகிபின் பாடல்கள் கன்னியாகுமாரி மாவட்டத்தில் இஸ்லாமிய தாய்மார்களால் தாலாட்டாகப் பாடப்பட்டுள்ள மரபும் இருந்துள்ளது.

நாட்டுப்புற இசைமரபில் கும்மி, வழிநடைச் சிந்து, ஏசற்பாக்கள், நொண்டிச் சிந்து என முஸ்லீம் புலவர்கள் பாடிய தமிழிசை இலக்கியங்களின் பரப்பு விரிந்து கொண்டே போகிறது.

இதே போல் இசைப்பாடல்களால் அமைந்த நாடகங்கள் முஸ்லீம் களால் பாடப்பட்டுள்ளன. அப்பாஸ் நாடகம், அலி பாதுஷா நாடகம், தையார் சுல்தான் நாடகம், லால் கௌஹர் நாடகம் ஆகியன இதில் அடங்கும். தெருக்கூத்து என்னும் நாட்டார் நாடக மரபைச் சார்ந்தவையான இந்த நாடகங்களில் கட்டியக்காரன் கதை சொல்லியாக வருகிறான். குறவஞ்சி குறி சொல்லிப்பாடுகிறாள். நீலாம்பரி இராகத்தில் தாலாட்டு கேட்கிறது. பறை அடித்து மணநிகழ்வு அறிவிக்கப்படுகிறது. பள்ளு பாணியின் தர்க்கங்களும் சிங்கன் சிங்கி உரையாடலும் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பாரிபாட்டு-ஓடப்பாட்டு கேட்கிறது. வாழி விருத்தத்தில் மங்களம் பாடி முடிகிறது. தெருக்கூத்து போன்று 'சீதாக்காதி நொட்டி நாடகம்' என்னும் நொண்டிச் சிந்து நாடகத்தை முதலில் அறிமுகம் செய்தவர் ஒரு முஸ்லீம் புலவரே என்கிறார் ஆய்வாளர். முக்கூடற் பள்ளில் மழைக்குறி தோன்றலைச் சித்திரிக்கும் 'ஆற்று வெள்ளம் நாளை வரத் தோற்றுமே குறி மலையாள மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே' என்ற ஓசை நயமிக்க பாடலின் சாயலை, திருமக்காப்பள்ளி மழைக் குறியோர்தல் பகுதியில், 'வாடைக்காற்று நேற்று மின்று வீசுதே வா வரிசை நபி கிருபையாலே உறுமி மின்னுதே' என அமைந்துள்ளதை காணலாம் என ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார்.

இனி தமிழாக்க மரபினை நோக்கின், உமறுப்புலவர் ஹுதா என்ற இறைவன் பெயரை 'குதா' என்றும் ரசூல் என்ற இறைதூதரை 'இரசூல்' என்றும் குறிப்பிட்டுள்ளார். அரபுச் சொற்களைத் தவிர்க்க முடியாமல் 'அல்லாஹ்' 'ரப்பு' போன்ற சொற்கள் பயன்படுத்தப் பட்டிருப்பதாகவும் இவற்றுக்கு நிகராக பொருள் நிறைவு தரும் தமிழ் சொற்களை அமைப்பது கடினம் என்றும் குறிப்பிடுகிறார் ஆய்வாளர். 'சுயம்பு' என்ற சொல் தான் தோன்றியான இறைப் பண்பைக் குறிக்கும். 'குத்பு நாயகம்' காப்பியத்தில் கடவுள் வாழ்த்தில் 'சுயம்பு' என்று அல்லாஹ்வைப் புலவர் குறிப்பிடுகிறார்.

இஸ்லாமிய மரபுகளுக்கு ஏற்ப தமிழிலக்கிய மரபை ஏற்றலும் மாற்றலும் பற்றியும் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். உதாரணமாக இஸ்லாமிய நெறி நின்று பூவடிவான காவடி எனக் குறிப்பிடுகிறார். காவடிச் சிந்து வடிவில் நபிகள் நாயகம், நாகூர் நாயகம் சையது முகம்மது ஒலியுல்லா ஆகியோர் மீது தமது பாவடிகளை பூவடிகளாக சாற்றும் விதத்தில் 'பூவடிச் சிந்து' பாடினார்.

சைவநெறியில் இறைவனை அடைய சன்மார்க்கம், சகமார்க்கம், புத்திர மார்க்கம், தாச மார்க்கம் என நான்கு நெறிகளில் இறைவனை நாயகனாகவும், ஆன்மாவை நாயகியாகவும் பாவிப்பது மரபு. தமிழக சித்தர்கள் இம் மரபையே பின்பற்றியுள்ளனர். முஸ்லிம் சித்தர்கள் இறைவனை நாயகியாகவும் தன்னை நாயகனாகவும் பாவிக்கும் சூஃபி மரபையே பின்பற்றியுள்ளனர். குணங்குடி மஸ்தானிக் 'மனோன்மனிக் கண்ணி'யில் 'என்னை விட்டால் மாப்பிள்ளையார் எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்றனுக்கே என்னை விட்டால் பெண்ணெனக்கும் மனோன்மணியே என்பதில் இப்பாவனையைக் காணலாம்.

சித்தர் மரபிலிருந்து ஷரீயத்துக்கு முதன்மை கொடுத்தலில் மாறுபட்டுள்ளதைக் காண முடிகிறது. சித்தர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கினை நோக்குவது போல சரீஅத், தரீக்கத், மஃரிபத், ஹகீகத் என்ற நான்கு படி நிலைகள் உண்டு என்கிறார்.

தமிழக சித்தர் மரபின் பெண் நிச்சயக்கேடு என்ற கோட்பாடு இங்கே மாறுபடுகிறது. இஸ்லாம் ஆணைப் போலவே பெண்ணுக்கும் மதிப்பும் வாழ்வுரிமையும் வழங்கியுள்ளது. பெண் குழந்தை பிறப்புச் செய்தி குறித்துத் திருக்குர்ஆன் பேசும்போது, அப்பிறப்பை 'பெண் குழந்தை பிறந்துவிட்டது என்ற சுபச் செய்தி சொல்லப்பட்டால்..' (16:58) என்ற அறிவிப்பின் மூலம் பெண் குழந்தை பிறப்பை அங்கீகரித்தது. "ஆண் பெண்ணிடம் தான் அமைதி பெற முடியும்" (19:21) என்றும் உறுதிப் படுத்துகிறது.

ஞான நெறிக்கு பொன்னும் பொருளும் உயிராகக் கொண்ட பெண்கள் தடையாக நிற்பதைச் சுட்டிக்காட்டி பெண்ணைத் துறக்கத் தூண்டுவது பொதுவான சித்தர் நெறி. தமிழகச் சித்தர் மரபில் பெண் வழி சேரல் ஆணின் ஈடேற்றத்திற்குத் தடை என்பதை குணங்குடி மஸ்தானும் பாடியுள்ளார். அதே போல பெண்ணின் ஈடேற்றம் குறித்தும் பாடுகிறார். ஆண்-பெண் இருவருக்கும் ஈடேற்றமே தரும் இஸ்லாமிய சித்தார்ந்தம் என்பதைத் தமிழக மரபில் நின்று புது மரபாகத் தந்துள்ளார்.

அதுபோலவே 'உலா'வை தனியே இலக்கியமாகப் பாடவில்லை. மாலை, கலம்பகம், அந்தாதி, பிள்ளைத் தமிழ் எனத் தமிழிலக்கிய மரபில் நின்று இஸ்லாமிய நெறி வழுவாத் தன்மையில் இலக்கியம் படைக்க வேண்டும் என்ற கொள்கை பிடிப்பே இதற்கு காரணம் என்கிறார் ஆய்வாளர்.

ஊசல், கழங்கு, அம்மானை போன்ற ஆடல் வகைகளில் ஏழு பருவ மகளிரும் ஈடுபட்டிருக்கும் போது வீதியில் ஆரவாரத்துடன் கரி, பரி, தேர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் ஏறி தலைவன் வீதியில் உலா வருகிறான். வீதியில் உலாச் செல்லும் தலைவனது சிறப்பு ஆகிய பொருண்மைகளைக் கருவாக வைத்து உலா பாடப்படும்போது பேதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பேரிளம் பெண் ஈறாக உள்ள ஏழு பருவ மகளிர் ஒரு தலைவன் மீது மையல் கொண்டு வாடுவதாகச் சித்தரிப்பது இஸ்லாமிய நெறிகளுக்கு புறம்பானது. எனவே தான் முஸ்லீம் புலவர்கள் தனியே உலாபாடவில்லை. ஆனால் காப்பியங்களில் ஓர் அங்கமாக உலாவைப் பாடியுள்ளனர். உமறுவின் சீறாவில் கதிஜா நாயகியைத் திருமணம் செய்ய அண்ணல் நபிகளார் உலாவரும் போது அண்ணலாரின் மேனி அழகில் தம்மை மறந்து நின்ற மங்கையின் நிலை பேசப்படுகிறது.

'பெருமுத்து வாரி கோடி இறைத்தன பெரிய கண்ணாள்' என்று தமிழ் மரபு போற்றி புலவர் பாடியுள்ளார்.

மாலையின் முத்துக்களை மட்டும் அவள் இழக்கவில்லை. ஆசை நிறைவேறா காரணத்தால் கண்ணிலிருந்து பல கோடி முத்துகளாம் கண்ணீர்த் துளிகளையும் ஈந்தாளாம். இங்கு தமிழ் மரபை வடிக்கும் ஆசையில் புலவர் இஸ்லாமிய மரபை மீறினாரா என்ற கேள்வியை எழுப்பும் ஆய்வாளர் இதை ஞானப் புலம்பல்களாகவே கருத வேண்டும் என்கிறார்.

ஆயிஷா அண்ணலாரை விரித்துக் கூறும் செய்தியில், ஆயிஷா நாயகி இராட்டையில் நூல் நூற்று கொண்டிருக்கிறார். ஆனால் வைத்த கண் வாங்காமல் அண்ணலாரையே பார்த்துக் கொண்டிருக்கிறார். இதனைக் கவனித்த அண்ணாலார் ''என்ன ஆயிஷா என்னை விழுங்கி விடுவதைப் போல் பார்க்கிறாயே'' என்று கேட்கிறார்.

''நபியே யுசுப் நபி நடந்து வந்தால், அவரது பேரழகில் மயங்கிய மகளிர் எல்லாம் தம் நிலை மறந்து பழங்களை நறுக் குவதற்குப் பதிலாகத் தங்கள் விரல்களை நறுக்கிக் கொண்டார்களாமே! ஆனால் அந்தப் பெண்கள் உங்கள் அழகைக் கண்டால் விரல்களை அல்ல தங்கள் இதயங்களையே நறுக்கிக் கொள்வார்கள்'' என்று ஆயிஷா நாயகியார் அண்ணலார் அழகை வியந்து போற்றினார்களாம். எனவே அண்ணலார் அழகில் நங்கையர் மயங்கினர் என்று உமறுப் புலவர் பாடுவதில் ஆச்சரியம் இல்லை என்றே கூறலாம் என ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

பள்ளு இலக்கியம் படைத்து சாதியை மறுத்த இஸ்லாமிய இலக்கியம்

இஸ்லாமிய தமிழ் இலக்கியமானது தமிழிலக்கிய மரபில் கால்பதித்து நின்று வேண்டியன ஏற்று, வேண்டாதன விலக்கி இஸ்லாமிய நெறிகளை வெளிப்படுத்தி வந்துள்ளது என்பதை எடுத்துக் கூறுவதற்காக பேராசிரியர் அப்துல் சமது மேற்கொண்ட ஒரு வெற்றிகரமான முயற்சியாக அந்த ஆய்வுக் கட்டுரை அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாக குறவஞ்சி மரபில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் பற்றி சிறப்பாகவே ஆராய்ந்திருப்பதை இங்கே எடுத்துக் காட்டாக சுட்டிக் காட்டலாம்.

குறவஞ்சி இலக்கியங்களில் குறத்தி முதன்மை பெறும் பாத்திரமாக வருவாள். தலைவர் உலாவர அவனிடம் இதயத்தை இழந்த தலைவி காதல் நோயால் வாடும்போது அவளது நோய்க்குரிய காரணத்தை குறத்தி குறிசொல்லி வெளிப்படுத்தும் முறை சிறப்பானது. குறவஞ்சி வடிவத்தில் தனி இலக்கியங்களையும், நாடக இலக்கியங்களில் குறத்தி வருகைப் பகுதியையும் முஸ்லிம் புலவர்கள் பாடியுள்ளனர். எனினும் குறத்தி நாட்டு வளம், குலப் பெருமை பாடிவருதலை சித்தரித்தவர்கள் குறி சொல்வதைத் தவிர்த்துள்ளனர். ஏனென்றால் குறிகேட்டல், ஜோசியம் பார்த்தல் போன்ற வழக்கங்கள் இஸ்லாமிய நெறிக்கு முரணானவையாகும்.

ஆப்கானிஸ்தான் பாரம்பரிய நடனம்

குறிசொல்லும் முறையை தவிர்த்து தலைவன் நினைவால் வாடும் தலைவியின் உள்ளத்தை ஆறுதல் படுத்தும் வகையில் குறத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். தையார் சுல்தான் நாடகத்தில் வரும் குறவஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையாரைப் பிரிந்து வாடும் சுலைகாவின் வருத்தத்தை நல் வாக்குக் கூறி போக்குகிறாள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலாவத்து கூறியே தனது பாடலை ஆரம்பிக்கிறாள். அலி பாதுஷா நாடகத்தில் நாட்டுவளம், குலப்பெருமை பாடிவரும் குற வஞ்சி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருமையையும் தீன் குலத்தின் சிறப்புகளையும் பாடுகிறாள். ஞான இலக்கியங்களைப் படைத்த முஸ்லிம் புலவர்கள், தலைவன் உலா, தலைவி மயக்கம், குறத்தி குறி சொல்லல் போன்ற குறவஞ்சி இலக்கியக் கூறுகளை ஞானக் குறவஞ்சி இலக்கியங்களில் தவிர்த்து விடுகின்றனர். குறவஞ்சி இலக்கியத்துள் இடம்பெறும் சிங்கன் - சிங்கி உரையா டலை மட்டும் தங்கள் ஞானத் தத்துவக் கருத்துகளைக் கேள்வி பதில் என்கிற உரையாடல் மூலம் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற உத்தியாக பயன்படுத்திக் கொண்டனர் என ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

இஸ்லாத்தில் தற்காப்புக்காக அன்றி ஆக்கிரமிப்புக்காக போருக்கு அனுமதியில்லை. எனவே படையெடுத்து வந்தோர் பெயரில் படைப்போர் இலக்கியங்களுக்கு பெயரிடும் மரபை முஸ்லிம் புலவர்கள் தொடங்கி வைத்துள்ளனர் என்கிறார் ஆய்வாளர்.

இஸ்லாம் அரசியல் வரலாற்றுப் பின்புலத்துடன் வளர்ந்த மார்க்க மாகும். இஸ்லாமிய வரலாற்றில் போர்கள் அதிகம் இடம்பெறு கின்றன. போர்க்களக் காட்சிகளைப் புலவர்களைக் கொண்டு பதிவு செய்யும் மரபு தமிழிலக்கியத்தில் உண்டு. பரணி இலக்கியம் போர்பாடும் தனி இலக்கிய வகை.

போர் பற்றிய வரலாற்றை பாடவந்த இஸ்லாமிய புலவர்கள் பரணி இலக்கிய அமைப்பில் பாடாமல் படைப்போர் என்ற புதிய இலக்கிய வகையில் பாடினர். இதற்கு காரணம் உண்டு. பரணி இலக்கியத்தில் காளிபாடியது, பேய் பாடியது, குருதிப்பலி போன்ற பல நிகழ்வுகள் பாடப்படுவது மரபு. இவை இஸ்லாத்திற்கு முரணாக இருப்பதால் 'போர் பாடியது' என்ற ஒரு பகுதியை மட்டும் பரணியிலிருந்து எடுத்து 'படைப்போர்' என்ற புத்திலக்கியம் படைத்தனர். தமிழில் தோன்றிய பரணி இலக்கியங்கள் எல்லாம் கலிங்கத்துப் பரணி என்பதுபோல போர் நடந்த இடத்தின் பெயரிலோ, தக்கயாகப் பரணி என்பது போல முதன்மை பெறுவோர் பெயரிலோ தான் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந் நிலையில் போர்கள் நடந்தாலும் சிலபோர் தர்மங்களைத் தமிழர்கள் பின்பற்றியதைத் தமிழிலக்கியங்கள் சுட்டிகாட்டுகின்றன. இஸ்லாம் போர் நெறிகள் எப்படி அமைய வேண்டும் என்ற தெளிவான வரையறைகளைத் தந்துள்ளது. தமிழிலக்கியங்கள் காட்டும் போர்களிலும் இஸ்லாமிய ஆட்சி காலப் போர்களிலும் சில பொதுத் தன்மைகளும் சில வேறுபாடுகளும் உள்ளன.

போரில் சண்டை என்பது நேருக்கு நேர் மோதும் மறவர் கள் இடையே நடக்க வேண்டுமே தவிர போரில் அப்பாவி மக்கள் கொல்லப்படக் கூடாது என்பது தமிழகப் போர் மரபு.

இஸ்லாமியப் போர் மரபிலும் இதே பண்பாடு போற்றிப் பேணப் பட் டதை வரலாறு உறுதி செய்கிறது. சிரியாவின் வெற்றியைச் சித்தி ரிக்கும் சேதுனா புலவரின் 'புதுகுஷ்ஷாம்' காப்பியத்தில் கலிபா ஆபு பக்கர் (ரலி) அவர்கள் வீரர்களுக்கு இடும் கட்டளையில் நோயாளர், முதியோர், பேதைகள், பெண்டிர், சிறுபிள்ளைகள் முதலானோரைக் கொல்லக் கூடாது என்பது பின்வரும் பாடலில் அறிவிக்கப்படுகிறது:

பிணியினர் முதிர்ந்தவர் பேதை மாதரோ
டணியினர் சிறாறிவ ரகப் படுத்தோர்
திணைவிவுல் கொண்டிடிபு பெறுதல் கொள்ளன்மின்
(படையெழுச்சிப் பாடல் 84)

எதிர்நாட்டு படைகளை நெருப்பால் தாக்குதல், விளை நிலங்களைத் தீயிட்டு அழித்தல் ஆகியவை உலக வரலாற்றில் நிகழ்ந்த பண்டைய பெரும் போர்களில் இயல்பான ஒன்று. ஆனால் இஸ்லாம் நெருப்பைக் கொண்டு அழிப்பதையும், தண்டனை கொடுப்பதையும் தடைசெய் துள்ளது. நெருப்பைக் கொண்டு தண்டிக்க நெருப்பைப் படைத்த அல்லாஹ் ஒருவனுக்குததான் உரிமை உண்டு என்று முகம்மது நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள். தமிழகப் போர் மரபில் எரிபரப்பல் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. ஆனால் இஸ்லாமிய புலவர்கள் இஸ்லாமிய நெறியை ஒரு யாப் பாக அவர்கள் பாடுதிறனுக்குள் அமைத்துவிடுவதால் தமிழக மரபுகளைத் தவிர்த்து விட வேண்டியதாகிறது.

புதுகுஷ்ஷாம் காவியத்தில் சிரியா படையெடுப்பில் வெற்றிவாகை சூடிய தமது படைவீரர்களிடம் ''நீங்கள் வெற்றி பெற்ற காரணத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய இல்லங்களுக்கு தீ வைத்தீர்கள்'' என்று கலீபா அபுபக்கர் (ரலி) அவர்களின் அறிவுறுத்தலை படையெடு படலம் 85 இல் காணலாம். இதேபோலவே கலம்பகத்தில் கள்ளுக்கு இடமில்லை.

பதினெட்டு உறுப்புகளும் வெண்பா முதலிய பல பாக்களும், பாவினங்களும், அகமும், புறமும், எண் சுவைகளும் கலந்து பாடப்படும் ஒரு கலப்பு இலக்கியமே கலம்பகம் என அழைக்கப்படுகிறது. இந்த இலக்கிய வடிவத்தில் மக்காக் கலம்பகம், திருமதீனக் கலம்பகம், மதீனக் கலம்பகம், குலாலீர்க் கலம்பகம், நாகூர் கலம்பகம், பகுத்தாது கலம்பகம், நாகை கலம்பகம் எனப் படைப்புகளை முஸ்லிம் புலவர்கள் தந்துள்ளனர். ஆனால் கலம்பகம் பாடுவதற்குரிய அனைத்து அம்சங்களுடன் அவர்கள் பாடவில்லை. கள்ளுண்டு களி என்ற உறுப்பு தவிர்க்கப்பட்டுளளது. இதற்கு இஸ்லாம் மதுவைத் தடை செய்துள்ளதே காரணம் என்கிறார் ஆய்வாளர்.

வேற்றுப்புலத்துக் கதைகளைத் தமிழில் பாடும்போது தமிழகத்திய மரபுகளுக்கு உட்படுத்தியும், தமிழ்ச் சூழலைச் சித்திரித்தும் பாடுவது மரபு. கங்கை ஆற்றங்கரை கம்பரின் காவியத்தில் காவிரி ஆற்றங்கரையாகி விடுகிறது. அயோத்தி சோழவள நாடாகிவிடுகிறது. இந்த மரபின் பிரகாரம் உமறுவின் சீறாவிலும் பாலைவனப் பிரதேசமான மக்கா, தாமிரபரணி ஆற்றங்கரையின் சொக்க வைக்கும் சோலை நகராகிவிடுகிறது.

இவ்வாறு தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற தமிழ் மாந்தராக உருவகித்துப் பாடுவது தமிலிலக்கிய மரபு. ஆனால் தமிழகத்து மாந்தரை அதே பெயரில் வேறு புலத்து மாந்தராகச் சித்திரித்து தமிழகச் சூழலை அராபிய பாலைக் குக் கொண்டு சென்று கவிதையில் பச்சையம் பரிமாறிய சிறப்பும் புதிய மரபைத் தோற்றுவித்த பெருமையும் முஸ்லிம் புலவர்களுக்கு உண்டு.

தமிழக உழவர் இனத்தில் உழுவித்து உண்போரான அடித்தட்டு மக்கள் பள்ளர்கள். பிறப்பாலும், சாதியிலும் சமூக அந்தஸ்து மறுக்கப்பட்ட இனத்தவர்கள். இவர்களது வாழ்க்கைச் சூழலை மையப்படுத்திய 'பள்ளு' இலக்கியம். எந்நயினைப் புலவர் என்ற முஸ்லிம் புலவரே பள்ளர்களுக்கு முதன் முதலாக கதைமாந்தர் அந்தஸ்து அளித்து ''முக்கூடற் பள்ளு'' பாடினார். இவ்வாறு தீண்டத் தகாதவர்களாகச் சித்திரிக்கப்படும் பள்ளன் பள்ளியைக் கதை மாந்தராகக் கொண்ட ''திருமக்க பள்ளு'' என்ற இஸ்லாமிய சிற்றிலக்கியம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளன் அவனது இரு பள்ளியர் பண்ணைக்காரன் ஆகிய நான்கு மாந்தரே நாடகத்தை இறுதிவரை நடத்திச் செல்வதாக அமையும் பள்ளு இலக்கிய அமைப்பையே திருமக்கா பள்ளிலும் காணலாம். மூத்த பள்ளி மக்காப்பள்ளி, இளைய பள்ளி மதீனத்துப் பள்ளி, ''இன்று முதல் இனத்திமிர், குலத்திமிர் அனைத்தையும் எனது காலடியில் போட்டு மிதித்துவிட்டேன்'' என்று இறுதி ஹஜ்ஜு உரையில் பெருமானார் பிரகடனப்படுத்திய மண்ணின் மைந்தர்களாக பள்ளன், பள்ளி இருவருக்கும் சிறப்பு செய்த பெருமை இந்நூலை இயற்றிய பெயர் தெரியாத புலவருக்கு உண்டு என்கிறார் ஆய்வாளர் அப்துல் சமது.

இஸ்லாம் ''வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவனே'' என்ற ஏகத்துவக் கோட்பாட்டினை கொண்ட மார்க்கம். அனைவரும் அவனுடைய அடியார்களே. ஒரே தலைவனின் அடியார்கள் என்றால் மனித குலத்தோர் அனைவரும் ஒன்று என்று அர்த்தம். இந்த அடிப்படையை பள்ளு இலக் கியத்தில் முஸ்லிம் புலவர் எடுத்தாண்ட விதம் பாரம்பரிய தமிழக மரபு வெளியில் ஒரு புதிய மரபை வகுக்கும் முயற்சியாகவே அமைந்துள்ளது.

காப்பியங்களில் வாழ்த்து வணக்கம், வருபொருள் உரைத்தல் ஆகியவற்றில் எதேனும் ஒன்று முதலில் இடம்பெற வேண்டும் என்பது மரபு. தமிழ்க் காப்பியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளரை வாழ்த்தி வணங்கித் தொடரும் மரபினைக் காணலாம். இஸ்லாம் ஓரிறைக் கோட் பாட்டில் உறுதியான சமயம் என்பதால், உமறு முதலான முஸ்லிம் புலவர்கள் தங்களது காப்பியங்களில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் ஓரிறைவனையே வாழ்த்தி வணங்கும் மரபைக் காணலாம். கடவுள் வாழ்த்துப் பகுதியில் இறை வணக்கத்திற்குப் பின்னர். நபிகள் நாயகம் முதற்கொண்டு கலிபாக்கள் இறை நேசர்கள் ஆகியோரின் புகழ்பாடும் பாக்களைத் தந்துள்ளனர். ஆனால் வணக்கம் இறைவன் ஒருவனுக்கே வழங்கப்பட்டுள்ளது.

காப்பியத் தலைவனையும், தலைவியரையும் அன், அள் விகுதி யிட்டு அவன், அவள் என்று அமைப்பதே இலக்கிய மரபு. ஆனால் இறைத் தூதரான முகம்மது (ஸல்) அவர்களையும் நபிகளின் தோழர்களையும் இறை நேசர்களையும் அவ்விகுதியில் மரியாதையாக அழைப்பது முஸ்லிம்களின் வழக்கமாக உள்ளது. இது இஸ்லாமிய இலக்கிய மரபாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நெறிகளுக்கு வழங்கும் கௌரவம் காரணமாக தங்கள் படைப்புகளில் சில தமிழிலக்கிய மரபுகளைத் தவிர்த்து சில மாற்று மரபுகளையும், புதிய மரபுகளையும் பயன்படுத்திள்ளனர். பரந்து விரிந்த இஸ்லாமிய இலக்கியத் தேடலில் இந்த ஆய்வானது ஓர் இலக்கிய ஆய்வு மட்டுமல்லாது நல்லிணக்கப் பண்பாட்டு ஆய்வாகவும் இது அமைந்திருப்பதாகவே கருதுகிறேன் என்றார் ஆய்வாளர்.

இலங்கையைச் சேர்ந்த கலாநிதி மகேஸ்வரன் தனது கட்டுரையை சமர்ப்பித்து உரையாற்றிய பின்னர், அந்த ஆய்வின் உள்ளடக்கம் பற்றி சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோது இந்த ஆய்வாளரே, மார்க்கக் கண் கொண்டு மட்டும் இஸ்லாமிய இலக்கியத்தை நோக்கக் கூடாது என்று தன் கருத்தை வெளிப்படுத்தினார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

இஸ்லாமிய இலக்கியம் படைத்த பெண் படைப்பாளர்கள்

தமிழ் வளர்ச்சியில் முஸ்லீம் பெண்கள் என்ற ஆய்வினை பேராசிரியர் நசீமா பானு சமர்ப்பித்தார். இவர் பேராசிரியர் மு. சாய்பு மரைக்காரின் துணைவியார். புதுவை மாநில காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி மேனாள் முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர் சாய்பு மரைக்காரும் இதே பல்கலைக்கழகத்திலேயே தமிழ்த்துறை தலைவராக உள்ளார். குடும்ப சமேதரராக இஸ்லாமிய தமிழ் இலக்கித்திற்கு பணி செய்கின்றனர். இவர்களுடைய மகளை மணம் முடித்தவரே முனைவர் அகமது மரைக்கார். இவரும் புகழ்பெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வாளர். இவர்களே காயல்பட்டண மாநாட்டினை நடத்திய இஸ்லாமிய தமிழ் இலக்கிய கழகத்தின் முதுகெலும்புகள்.

நசீமாபானு முஸ்லிம் பெண்கள் பற்றிய ஆய்வில், பெண் என்பவள் மகளாகவும், மனைவியாகவும், மருமகளாகவும், தாயாகவும் தன் முழுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலன்களையும் பயன்படுத்தி, மானிட வாழ்வின் இனிமைகளைச் சரிவர உயர்த்திக் காட்டுபவளாக திகழ்கின்றாள் என்றொரு இலக்கணத்தைத் தந்தார். அன்பின், தியாகத்தின் உருவாய்ப் பெருமை கொள்கிறாள். தன்னை உருக்கி ஒளியுட்டும் மெழுகுவர்த்தியாய், தன்னை அழித்து மணம் பரப்பும் ஊதுபத்தியாய், ஏணியாய்த், தோணியாய்ச் செயல்படுபவள் பெண்.

இஸ்லாத்தின் வழியில் பெருமை பெற்றது பெண்ணினம். பெண்கள் மனித இனத்தின் அழகிய நல்ல பகுதி எனக் கூறிப் பெண்களைக் கண்ணி யப்படுத்தியது இஸ்லாம். திருமறையாகிய திருக்குர் ஆனும், திருநபியும் பெண்களுக்கு உரிமைகள் பலவற்றை வழங்கிக் கண்ணியப்படுத்தி யுள்ளார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களில் அறிஞர் பெரு மக்களாக ஆண்கள் விளங்கியது போலவே பெண்களும் இருந்திருக் கின்றனர்.

''ஆடவரும் பெண்டிரும் ஒரே மூலத்தில் இருந்தே உதித்தவர்கள். ஆகையால் பெண்களுக்கு ஆன்ம ஞானமும் அறிவும் உண்டு'' என்கிறது திருமறை.

''ஆண்கள் போலவே பெண்களும் கல்வி பயிலத் தகுதியு டைவர்கள்'' எனக் கூறுகிறது திருக்குர்ஆன்.

அன்றுமுதல் இன்றுவரை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய கல்வியுரிமையைப் பயன்படுத்தி இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்குத் தம்பங்களிப்பைச் செய்துள்ள இஸ்லாமிய பெண்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரை என்கிறார் நசீமாபானு.

''குர்ஆன் ஹதீசுகளைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து வைத்தி ருந்தவர்கள் அன்னை ஆயிஷாவைக் காட்டிலும் வேறு யாரையும் நான் கண்டதில்லை'' என்று அபுஸல்மா என்ற ஸஹாபி போன்றுகின்றனர்.

உம்முவரஷா என்ற அம்மையார் திருக்குர்ஆன் ஓதுவதில் திறமை படைத்திருந்ததைக் கண்ட நாயகம் (ஸல்) அவர்கள், அந்த அம்மையாரைப் பெண்களுக்கு இமாமாக நியமித்தார்கள். அஸ்மா பின்ந்த் அஸீஸ் என்ற பெண்மணி பண்பட்ட பேச்சாளராக விளங்கியுள்ளார். லைலா, உமைமா, உம்மு ஸூலைமா ஆகியோர் வைத்திய கலைவல்லுனராகவும், ராபித்துல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதவியா, மைமூனா போன்றோர் சிறந்த ஆன்மீக ஞானிகளாகவும் திகழ்ந்துள்ளனர். இன்றும் பொதுப்பணி புரிந்து பூவையரையும். கையெழுத் துவல் காத்திபாக்களையும் பாட்டுமொழி பாவையரையும் இஸ்லாம் வரலாறு குறிப்பிடுகிறது.

இஸ்லாமிய கலைகளான கிராஅத் ஓதுதல், தப்ஸீர் (விரிவுரை), ஹதீது (நாயகமொழி) பிக்ஹு (இஸ்லாமிய மார்க்கச்சட்டம்) பராயிஸ் (பாகப்பிரிவினைச் சட்டம்) இவற்றில் பெண் ஸஹாபிகள் நல்ல அறிவுக்களஞ்சியமாகத் திகழ்ந்தனர். இஸ்லாமிய பெண்கள் இந்திய வரலாற்றில் பெண்களின் முன்னேற்றத்தின் முன்னோடிகளாக விளங்கி யமைக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ஔரங்கசீபின் அன்புமகள் கவிக்குயில் ஜெய்புனிஸா, செங் கோலாட்சி நடத்திய ரஸியா சுல்தான், போர் வாளேந்திய சாந்த பீபி எனப் பல பெண்களைக் கூறலாம்.

இஸ்லாத்தில் ‘அறிஞர்கள், திருத்தூதரின் நேர்வாசிகள்’ என்று புகழப்படுகின்றனர். இப்படியொரு நெடிய வரலாறு இருந்தும் கல்வி கற்ற இஸ்லாமியப் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இதனால் இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு குறைந்துள்ளதை நாம் உணரவேண்டும் என்று நசீமாபானு குறிப்பிட்டார். ஆண்கள் போல் பெண்களும் துறவு வாழ்க்கையில் சிறப்புப் பெற்றுள்ளனர் என்றும் இஸ்லாத்தின் சூஃபிகள் பக்தித் தமிழ் என்ற தளத்தை என்றும் போற்றிப் பாதுகாத்துள்ளனர் என்றும் நசிமாபானு குறிப்பிடுகிறார்.

ஞானப்பெண்கள் எனப் போற்றப்படும் முத்தமிழ் கவிஞர்களைப் போலவே கீழக்கரை ஆசியாம்மாள், இளையான்குடி கச்சிப்பிள்ளை யம்மாள், தென்காசி றசூல் பீபி ஆகிய மூவரும் தமிழகத்துச் சூஃபிகளாகப் போற்றப்படுகின்றனர் என்கிறார்.

இஸ்லாமிய ஞானப் பெண்மணிகளாக உம்முஹராம், ராபியா பிந்த், இஸ்மாயில் ராபியத்துர்பசரிய்யா, ஆதுல் ஆதவிய்யா, ஹாவானா, நஃபிஸா ஷவந்தா, ஜைனப் ஹைநாரபேகம், உம்மு அப்துல்லாஹ் ஆயிஷா லைலா அல்கைசியா, உம்முதல்தா, கதிஜா (முஹய்தீன் அப்துல் காதிர் ஜிலானியமாமி) உம்மு யஹ்யா, பக்ரிய்யா, ஃபிள்ளா பிஷர்ஹாபியின் சகோதரி முன்கா, அமனார் மலிய்யாஷ், ஹப்ஸாபிந்த் இத்ரீஸ் ஹகீமா, ஷஃரானா, ஃபாதிமாஸாம், ரபியத்து அதவிய்யா, ரைஹானத்துல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹபஷ்ஹியா, நபீசத்துல் மிஸ்ரிய்யா அமினத்துல் ரம்ஸிய்யா எனப் பலர் உள்ளனர் என்று பல பெண்களின் பெயர்களை ஆய்வாளர் சுட்டிக் காட்டினார்.

இராமநாதபுரம் கீழக்கரையை சார்ந்த சூஃபியா செய்யது ஆசியா உம்மாள் காலத்தால் முந்திய பெண்பால் சூஃபிய புலவராக திகழ்ந்து ள்ளார். ஆசியா உம்மாவின் மூதாதையர் எட்டையபுர மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். மன்னர் அளித்த அன்புப் பரிசிலான தங்கப்பெட்டகம் அவர்களது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆசி யாம்மாள் கீழக்கரை குதூபுஸ்ஸ மான் வகவ்துல் அஸான் கல்வத்து நாயகத்தின் முதற்சீடராக இருந்தவர். இளமையிலேயே துதிப்பாடல்களையும், முனாகத்துக ளையும் பாடுகிற வல்லமை பெற்றிருந்தார். அவர் பாடியுள்ள பாவகைகளில் கண்ண பைத்து முஜைத்து, விருத்தம், இன்னிசை, ஆனந்தகளிப்பு, துதி, வெண்பா, கும்மி, பதிகம், மாலை என்பன அடங்கும்.

அடைக்கலம், பிரார்த்தனை, இஸ்திஃபார், மழை, தாலாட்டு, ஹெய்கு அபுபக்கர் (றலி), கல்வத்து நாயகம் (றலி), அஜ்மீர் மொய்னுதீன், ஹசன் ஹூசைன், பல்லாக் (றலி) இல்யாஸ், முஹையயதீன் ஆண்டகை, ஹாஹூல் ஹமீது ஆண்டகை போன்றோரை அழைத்துப் பாடியுள்ளார். இவற்றைத் திரட்டி 'மெய்ஞ்ஞான தீபரத்தினம்' என்ற நூலாகத் தந் துள்ளனர். இது அரபுத் தமிழில் அமைந்துள்ளது. இவற்றில் பதினான்கு பாடலைத் தொகுத்து 'சூபிஞானி செய்யது ஆசியா உம்மாவின் மெய்ஞ் ஞான பாடல்கள்' என்ற தலைப்பில் கீழக்கரை இதிரீஸ் மரைக்கார் தமிழில் பதித்துள்ளார்.

இளையான்குடி கச்சிப்பிள்ளையம்மா என்பவர் றுக்மான் ஹகீம் மகள் கும்மிபாடல்கள் தந்துள்ளார். இவரது 'மெய்ஞ்ஞானமாலை' என்ற நூல் மெய்ஞ்ஞானக் குறவஞ்சி, மெய்ஞ்ஞான ஊஞ்சல், மெய்ஞ்ஞானக் கும்மி, மெஞ்ஞானகுறம் ஆகிய பாடல்களைத் தொகுத்து நூலாக அமைந் துள்ளார். இது சிங்கன் சிங்கி உரையாடல் பாணியில் அமைந்துள்ளது. மெய்ஞ்ஞான ஊஞ்சல் 20 பாடல்களையும், மெய்ஞ்ஞானக்கும்மி 16 பாடல்களையும் கொண்டது. இவர் திருபரங்குன்றம் மலைமீது அடங்கி யுளள சிக்கந்தர் (ஒலி) அவர்களின் பக்தரான முஹம்மது மீரான் மஸ்தான் சாஹிப்பின் சகோதரியாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்காசி றசூல்பீவி ஒரு தவஞானி. சூஃபிக் கவிஞர். தந்தை நயினார்முகம்மது. குரு ஷைகு அப்துல்காதர் ஷாஷன்ஷா. கணவர் ஞான அமிர்த போதனை பாடிய பரிமளத்தார் என்னும் முஷம்மது காசிம் சாஹிபு. பரிமளத்தார் பாடலின் பிற்பகுதியில் 'ஞானமிர்தம் சாகரம்' என்னும் பகுதி இடம்பெற்றுள்ளது. இதனை இயற்றியவர் தென்காசி றசூல் பீபி. இவரே றகுமான் கண்ணி, பரமானந்தக் கண்ணி ஆகிய பாடல்களை பாடியுள்ளார்.

சித்தி ஜுனைதா பேகம் நாகூரில் 1917 இல் பிறந்தார். 1938 இல் 'காதலா கடமையா' என்ற பெயரில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். முதல் முஸ்லிம் பெண் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர். இவர் 'செண்பகவல்லிதேவி' (தென்னாடு போந்த அப்பாஸி குலத் தோன்றல்) 'கலிமா அல்லது கற்பின் மான்பு', 'வனஜா- கணவரின் கொடுமை', 'பெண் உள்ளம்,' 'தந்திர உதயம்', 'திருநாகூர் அண்ணலின் திவ்விய மாண்பு', 'மூவாமூவர்', 'இஸ்லாமும் பெண்களும்' போன்ற நூல்களை படைத்துள்ளார்.

மதுரையின் முதல் பெண் பட்டதாரி என்ற பெருமையுடன் பள்ளப் பட்டி உஸ்வத்துல் ஹசனா அரபுப் பள்ளி முதல்வரான ஓய்வு பெற்ற கருளின்னி அப்துல்லா, பேச்சாளர், எழுத்தாளர், 'ஆய்வாளர் வியக்கும் அழகிய பண்பாளர்', 'மனிதனுக்கு மனிதன்', 'புரிந்து தொழுவோம் புரிந்துணர்வு பெறுவோம்' என்னும் நூல்களையும் பல கட்டுரைகளையும் படைத்துள்ளார்

ஜெய்புன்னிஸா கோவையை பிறப்பிடமாக கொண்டவர். 15 குறும்புதினங்கள், 600க்கும் மேற்பட்ட சிறுகதைகள் படைத்த எழுத்தாளர். இவர் படைப்புகள் 'தணல்', 'புரிய மறுக்கும் முகங்கள்', 'ஆற்றோர நாணல்கள்', 'மனசுக்குள் வரலாமா?', 'என் உயிர்த்துளி நீதானே', போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். 'நைல் நதிக் கரையில்' என்ற முதல் பயண நூலை வெளியிட்ட முஸ்லிம் பெண்மணி இவர்.

'மல்லிகை மொட்டுகள்', 'மகிழம்பூக்கள்', 'ஒற்றைப்பறவை', 'கண்மணியே கண்ணுறங்கு', கேஹாவின் சிரிப்புக் கதைகள்', 'அர்த்தமுள்ள அரபிப் பழமொழிகள்', 'நெஞ்சங்களின் சங்கமம்', நல்ல வாழ்க்கைக்கு வல்லவன் காட்டிய வழி' போன்ற சிறுகதை நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜரினாஜமால், 'நர்கிஸ்' இதழ் ஆசிரியர் அனீஸ் பாத்திமா, பேராசிரியர் நசீமா அஹமட், பேராசிரியர் பர்வீன் சுல்தானா, பர்வீன் நஜ்மா மொய்தீன், அம்மாஜான், ஆயிஷா பேகம், கதீஜா பேகம், பேராசிரியர் சவ்தா உம்மா, பாத்திமா முஸப்பர், பாத்திமா யாஸ்மின், ரைஹானா பேகம், ஜுவைனா பைஜல் ஜெஸிலா பானு, ஜெஸோபானு, ஆமினா பர்வின், ஹாஜியா சான்பேகம், ஜெய்புன்னிஸா, சுமையா தாவுது, சித்தி சாரா, நஃபிஸா பீவி, பரீதாபானு, சம்ஹத், எம். ஆர், எம் பாத்திமா சாஜஹான் ஆகியோர் பற்றியும் இவ்வாய்வில் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் பர்வீன் சுல்தானா பற்றி இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். இவர் தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள் தொகுதி-1, தொகுதி-2, இஸ்லாமிய மக்களின் வாழ்வியல் சடங்குகள், படைப்போர் இலக்கியம் காட்டும் பண்பாட்டுக் கூறுகள், படைப்போர் மூலமும் ஆய்வும், காசீம் படைப்போரும் படைவெட்டும், படைப்போர் இலக்கிய மும் போர் நெறிமுறைகளும் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார்.

ஹாஜினயா சான்பேகம், 'நல்ல மனது', என்ற நாடக நூல் படைத்தவர். ஜெய்புன்னிஸா 'சாந்திவயல்', 'சமாதானப்பயிர்' போன்ற இருபத்தேழு மரபுக் கவிதை நூல்களை படைத்தவர். சித்தி சாரா 'இஸ்லாத்தில் பெண்கள்' என்ற நூலை எழுதியவர். பரீதா பானு 'சுமைதாங்கி' என்ற புதுக்கவிதை நூலை படைத்தவர் என இவர்கள் பற்றி ஆய்வாளர் குறிப்பிடுகிறார். இதுபோலவே, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை எனத் தமிழர் வாழும் மண்ணில் உள்ள பெண் படைப்பாளிகளின் படைப்புகளையும் வாழ்க்கை வரலாறுகளையும் தொகுத்து நூலாக்கம் செய்வதற்கு ஆய்வாளர்கள் முன்வரவேண்டும் என்றும தமது ஆய்வில் இவர் வேண்டுகோளை முன்வைத்தார்.

இந்த ஆய்வாளர் பேராசிரியர் நசீமா தன்னைப் பற்றியும் இந்த ஆய்வில் குறிப்பிட்டிருந்தார். 'சங்க இலக்கியத்தில் மனையறம்' என்ற ஆய்வு நூலையும், 'இலக்கியத் தென்றல்', 'இவர்கள் இன்று சந்தித்தால்', 'இல்லறமும் பெண்களும்', 'கருத்தரங்குக் கட்டுரைகள்' போன்ற பதினான்கு நூல்களை வெளியிட்டுள்ளார். 'வெற்றிப்பதக்கம்' என்ற வரலாற்று நூலும், 'கண்மணிகளுக்கு காயிதேமில்லத' என்ற வரலாற்று நூலும் 'சாதனையாளர் சாயபு மரைக்கார்' என்ற தனது துணைவர் பற்றிய நூலையும் வெளியிட் டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

இஸ்லாமிய நாட்டுப்புறவியல் துறை தனிப் பிரிவாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்

மலேசிய மாநாட்டு ஆரம்ப தினத்தன்று...

ஐம்பது ஆண்டுக்கால இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்வுப் போக்குகளும் ஆற்றவேண்டிய பணிகளும் என்ற ஆய்வுக் கட்டுரையினை மதுரை காமராசர் பல்கலைக்கழக இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியற்துறையின் துறைத்தலை வரும் முதுநிலைப் பேராசிரியருமான முனைவர் பீ.மு. அஜ்மல் கான் சமர்ப்பித்தார். இதிலுள்ள சில விடயங்கள் இந்த இறுதி கட்டுரைக்கு பொருத்தமானதாகும்!

ஐம்பது ஆண்டுகளில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆய்வுத்தரவுகளின் தொகுப்பு (Research Data Collection) மற்றும் அதனை வகைப்படுத்தல் அதனுடன் ஐம்பது ஆண்டுகளில் நடைபெற்ற இஸ்லாமியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலக்கிய ஆய்வுகளும் ஆராச்சி நெறிமுறைகளும் (Data Analysis and Methodology of Researching) என பிரித்து விளக்கியுள்ளனர்.

தமிழ்ப் புலவர்களை சுட்டும் வகையில் வெளியிடப்பட்ட தமிழ் நூல்களின் வரிசையில் பெயரளவில் கூட ஒரு தமிழ் முஸ்லீம் புலவரது பெயர்கூட இடம்பெறவில்லை என்பதை ஆதங்கத்துடன் குறிப்பிட்டுள்ளார். புலவர் வரிசையைத் தொகுத்து வெளியிட்ட க. சபாபதி நாவலர், 'திராவிடப் பிரகாசிகை' என்ற பெயரில் 1899லும், மானிப்பாய் ஆ. முத்துப்பிள்ளை 'ஈழமண்டலப் புலவர்' பெயரில் 1941லும், சி. கணேசையர் 'ஈழநாட்டுப் புலவர் சரித்திரம்' என்ற பெயரில் 1920லும், இதே ஆண்டு 'தமிழ்ப் புலவர் சரிதத்தை' ஆ. குமாரசாமிப் புலவரும் எழுதி வெளியிட்டுள்ளார்கள். இவற்றில் ஒரு முஸ்லீம் தமிழ்ப்புலவரின் பெயர் கூட இடம்பெறவில்லை என்றும் இதேபோல் கற்பிட்டி காசிச் செட்டியால் 1959 இல் எழுதி வெளியிடப்பட்ட 'தமிழ் புளூராக்' என்னும் ஆங்கில நூலில் 197 தமிழ்ப் புலவர்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இந்த எண்ணிக்கையிலும் ஒரு தமிழ் முஸ்லீம் புலவரின் பெயர்கூட இடம்பெறவில்லை என்கிறார் ஆய்வாளர்.

இங்கேதான் எனக்குள்ளும் ஆதங்கம் பிறக்கிறது. இதுவரை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களின் பெயர்ப்பட்டியலை ஏன் தொகுத்து முடிக்கவில்லை இன்னும் எத்தனை ஐம்பதாண்டுகள் இதற்குத் தேவை என்ற கேள்வி எழுகிறதல்லவா! இதற்குப் பதிலாக இவ்வாய்வாளரே பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு. நித்தியானந்தன் ஆகியோரின் சீரிய பார்வையின் கீழ் பேராசிரியர் டாக்டர் எம். எம். உவைஸ் தன்னுடைய எம்.ஏ பட்டத்திற்கு 'முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு' என்னும் தலைப்பில் மறைந்துகிடந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து முடித்தார் எனக் குறிப்பிட்டுள்ளார். இதன் பயனாக இரு நூறுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் இருப்பதைக் கண்டறிந்து அறிமுகம் செய்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் ஆய்வுத்தரவுகளை தமிழிலக்கிய உலகு அறிந்து கொள்வதற்கு உதவியாக அமைந்தன என்றும் இதன்மூலம் இஸ்லாமியத் தமிழ் நூல் அட்டவணை என்ற நூலும், உவைஸின் 'முஸ்லிம்கள் தமிழுக்களித்த கொடை' என்ற நூலும் வெளிவந்துள்ளன என்று குறிப்பிடுகிறார். இதில் 1100 இஸ்லாமியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கியங்கள் பற்றிய தகவல்கள் ஆசிரியர் பற்றிய விவரங்கள், காலம் மற்றும் நூல் வைத்திருப்போர் பற்றிய விபரக் குறிப்புக்களுடன் தரப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பின் மதுரைப் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய தமிழிலக்கிய ஆய்விற்காக அமைப்பட்ட துறையின் முயற்சி காரண மாக 'இஸ்லாமிய தமிழ் இலக்கிய நூல் விபரக்கோவை' என்ற முழுமையான நூல் உருவாக்கபட்டது. இதில் 2000கும் மேற்பட்ட இஸ்லாமிய தமிழிலக் கியங்கள் இனங்காட்டப்பட்டுள்ளன என்கிறார். இது 1950 என்ற கால வரையறை கொண்டது. குறிப்பாக, தற்கால இஸ்லாமியத் தமிழிலக்கிய வகைகளான நாவல், சிறுகதை ஆகியவை முழுமையாக தொகுக்கப்பட வேண்டும் என்கிறார் ஆய்வாளர். இதேபோலவே தொடக்கக்கால இஸ்லாமிய தமிழிலக்கியங்கள், இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள், இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள், பிற இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் என விரிவான முறையில் இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அது போலவே புதிய இலக்கிய வடிவங்களுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் அவை தொகுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட வேண்டும் என்கிறார். இதில் 10 பெரும் பிரிவுகளில் இவற்றை வகைப்படுத் தலாம் எனவும் குறிப்பிடுகிறார் ஆய்வாளர்.

1. இஸ்லாமிய அடிப்படைக் கருத்துக்களையும் நெறிகளையும் எடுத் துரைப்பன.
2. இஸ்லாமிய மார்க்க வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்து ரைப்பன.
3. பெருமானார் நபிகள் நாயகம் அவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இஸ்லாமிய சிற்றிலக்கியங்கள்
4. இறைநேசச் செல்வர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இஸ்லாமிய சிற்றிலக்கியங்கள்.
5. புலவரை ஆதரித்த புரவலர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இஸ்லாமிய சிற்றிலக்கியங்கள்.
6. இஸ்லாமிய புண்ணியத் தலங்கைப் புகழ்ந்துரைப்பன.
7. அகப்பொருள் பற்றிய இஸ்லாமியச் சிற்றிலக்கியங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இஸ்லாமிய விழாக்களில் மட்டுமே படிப்பதற்காக இயற்றப் பெற்ற சிற்றிலக்கியங்கள்.

9. குறிப்பிட்ட நிகழ்வுகளில் கடைப்பிடிக்கவேண்டிய இஸ்லாமியக் கடமைகளை மட்டும் எடுத்துரைக்கும் சிற்றிலக்கியங்கள்.

10. இவையல்லாத, பிற பாடுபொருள்களைக் கொண்ட இஸ்லா மியத் தமிழ் சிற்றிலக்கியங்கள் என வகைப்படுத்தலாம் என்கிறார் இவர்.

மேலும் தமிழிலக்கியங்களை வகைப்படுத்தும்போது முஸ்லீம் பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்ட பங்களிப்பு என்ற நிலையிலும் வகைப்படுத்தலாம் என்கிறார். அரபுத்தமிழ் இலக்கியங்கள் வகைப் படுத்தப்பட்டு விரிவான ஆய்வுகளுக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதை யும் ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார். பிற இஸ்லாமியத் தமிழிலக்கியங்கள் என்னும் தலைப்பில் இடம்பெறும் தனிப்பாடல்கள் தனியே வகைப் படுத்தப்பட வேண்டியவை எனவும் குறிப்பிடுகிறார்.

இஸ்லாமிய தமிழிலக்கிய ஆய்வுப் பிரிவில் தனியே வளர்க்கப்பட வேண்டிய துறை இஸ்லாமிய நாட்டுப்புறவியல் துறையாகும். இது வரை கவனத்தை ஈர்க்காத நாட்டுப்புறப் பாடல்கள் அநேக செய்திகளை உள்ளடக்கி யுள்ளன. இவை முறையாக தொகுத்து வரையறுக்கப்பட்டு வகைப்படுத்தப் படல் வேண்டும் என்றும் இவற்றின் மீது ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டும் என்றும் யோசனையையும் இவர் முன்வைக்கிறார்.

பாராட்டுத் தன்மையுள்ள அணுகுமுறைகள் படைப்பாளியின் அணுகுமுறைகள் மற்றும் படைப்பாளியின் துறைகளை மறைத்து விடக் கூடும். இஸ்லாமிய தமிழிலக்கியங்களை உண்மையான மதிப்பீட்டிற்கு (Evaluaton) ஆளாக்கும்போது பாராட்டுத்தன்மை யுள்ள அணுகு முறைகள் தடைக்கற்களாகலாம் என்பதால் இத் தன்மையற்ற ஆய்வு போக்குகள் வளரவேண்டும் என்றும் ஆய்வு அணுகுமுறையில் புதிய அணுகுமுறை பின்பற்றப்படல் வேண்டும் என்றும் குறிப்பிடும் இவர், குறிப்பாக வடிவியல் தன்மை ஆய்வு விரிவாக நிகழ்த்தப்படவேண்டும் எனக் கூறுகிறார். சமூகவியல் அணுகுமுறை இதுவரை இஸ்லாமிய தமிழிலக்கிய ஆய்வில் அறிமுகப்படுத்தப்படவில்லை என்றும் ஒப்பீட்டு ஆய்வுப்போக்கு இஸ்லாமிய தமிழிலக்கிய ஆய்வில் உள்ளடக்கப்படவேண்டும் என் றும் சுட்டிக்காட்டும் இவர், இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு 1966 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை சாதித்த தென்ன, இன்னும் சாதிக்க வேண்டியது என்ன என்பதை தெளி வாக விளங்கிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது என்றும் இன்னும் ஏராளமான மாநாடுகள், ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கருதுகிறார்.

ஆய்வு மாநாடுகளை விமர்சிப்பது இலகுவானது. ஆனால் அதனை நேர்த்தியாக நடத்தி முடிப்பதென்பது மிகவும் சிரமமானது. இந்த கடமையை இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் நிரூபித்து வருகின்றன என்பதே இத்தொடரை எழுதிய எனது எண்ணம். பல சிரமங்களுக்கு மத்தியிலும் மாநாடுகளை நடத்த வேண்டும். இந்த மாநாடுகளில் தரமான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உலகளாவிய ரீதியில் ஆய்வு மையம் ஒன்று ஏற்படுத்து வது அவசியம். அதனை நேர்த்தியாக முன்னெடுத்து நடத்திச் செல்லவேண்டும்.

சிரமங்களுக்கு மத்தியில் மாநாடுகளை நடத்தி முடிக்கும் ஏற் பாட்டுக் குழுவினரை வெகுவாக பாராட்ட வேண்டும். எனவே தவறுகளைத் திருத்தி மீண்டும், மீண்டும் அடுத்தடுத்த மாநாடுகள் வருடந்தோறும் நடத்தப்படவேண்டும். அவை சிறப்புற அமைய வேண்டும் என வாழ்த்துக் கூறி இப்பயணக் கட்டுரையை நிறைவு செய்கிறேன். இக்கட்டுரை ஊடாக சுட்டிக்காட்டப்பட்ட குற்றம் குறைகளினால் எவராவது மனப் பாதிப்புக் குள்ளாகியிருந்தாலும் அவை சுட்டிக்காட்டப்படுவது தவிர்க்க முடியாத தாகவே இருந்தது. சீர்தூக்கி விமர்சனப் பார்வைக்குள்ளாக்கும் போது இதைத் தவிர்ப்பதற்கில்லை. இதைத் தவிர வேறு எந்த உள்நோக்கமும் கிடையாது என்று கூறி விடைபெறுகிறேன். வாசகர் கருத்துக்களை எதிர் பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழக மாணவராக இருந்த போது ஹொக்கி குழு தலைவராக, விளையாட்டு சபை உறுப்பினராக, தமிழ் சங்க செயலாளராக, விவாத சங்க உபதலைவராக இருந்தவர். பன்விலை விக்னேஸ்வரா வித்தியாலய அதிபராக, கொட்டகலை அரசினர் ஆசிரியர் கல்லூரி விளையாட்டுத்துறை விரிவுரையாளராக பின்னர் பேராதனை பல்கலைகழக நூலகத்தின் கல்விசார் உதவி நூலகராக, சிரேஷ்ட உதவி நூலகராக, பிரதி நூலகராக தற்போது பதில் நூலகராகவும் பதவி உயர்ந்தவர். பல்கலைக்கழக கல்விசார் விரிவுரையாளர்கள் சங்க உபதலைவராகவும் தற்போது செயலாளராகவும், குறிஞ்சிக்குமரன் கோயில் பெரும்பாண்மைக்குழு உருப்பினராகவும் அதன் செயலாளராகவும், இந்து பட்டதாரிகள் சங்க தலைவராகவும் விளங்குகின்றார். கண்டி ஹொக்கி சங்க தலைவராகவும், இலங்கை ஹொக்கி சங்க உபதலைவராவும் நீண்ட காலம் கடமையாற்றுவதோடு தேசிய பயிற்றுவிப்பாளர், தேசிய நடுவர் போன்ற தரத்தினை பெற்றவர். ஹொக்கி மூலம் இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பங்களதேஷ், மலேசியா, ஹொங்கொங், பெல்ஜியம், ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கு தேசியகுழு முகாமையாளராக, சம்மேளன உபதலைவராக சென்றவர். சிறந்த ஆய்வாளர், ஊடகவியலாளர், விமர்சகர். நூலகத்துறையிலும், இலக்கிய துறையிலும் தனது ஆய்வு கட்டுரைகளை இந்தியா, பிரித்தானியா, மலேசியா, சுவிஸ் ஆகிய நாடுகளில் சமர்பித்தவர். கோவை செம்மொழி மாநாடு, மலேசியா ஒன்பதாவது உலக தமிழாராச்சி மாநாடு, லண்டன் தமிழியல் ஆய்வு மாநாடு, மலேசியா இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, காயல் பாட்டிணம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, மலேசியா முருக பக்தி மாநாடு, சிங்கப்பூர் நூலகவியலாளர் மாநாடு, சென்னை தமிழாராட்சி நிறுவன பண்ணாட்டு கருத்தரங்கு, இந்திய தமிழ் நாட்டு தொல்லியல்கழக 25வது வருட பண்ணாட்டு கருத்தரங்கு, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்துறை தமிழ் ஆய்வு தேசிய கருத்தரங்கு ஆகியன இவர் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்த முக்கியமான மாநாடுகளாகும். மத்திய மாகாண சபை சாகித்ய பரிசு பெற்ற இவர் நாட்டுப் புற பாடல்கள், ஆண்ட பரம்பரை மற்றும் உளவியல் அறிவும் நூலக ஆசிரியர் செல்நெறியும் பற்றி பல நூல்கள் வெளியிட்டுள்ளார்.

வ.தர்மதாசன்
Bcom.(Pdn) M.Phil (Pdn)
தலைவர், முகாமைத்துவம்
முகாமைத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைகழகம்

குமரன் புத்தக இல்லம்

Subject: Documenting of Muslim Tamil Literature with Publicational Information

ISBN 978-955-659-487-4

விலை ரூபா 350.00

#675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org